



# உதயன்

www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 018 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 29 வெள்ளிக்கிழமை (14/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# இந்து மா கடலில் சீனச் செல்வாக்கு அதிகரிப்பது நியாயமானதே - கோத்தா

## இந்தியா, அமெரிக்கா கவலை துரதிர்ஷ்டம் எனவும் சாடல்

கொழும்பு, டிசெம்பர் 14

இலங்கை உள்ளிட்ட இந்து மா கடலை மையமாகக் கொண்டு அதிகரித்துவரும் சீனாவின் நடவடிக்கைகள் நியாயமானவை; புரிந்துகொள்ளக்கூடியவை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் சீனாவின் இந்த நடவடிக்கைகளை இந்தியாவும் அமெரிக்காவும் சந்தேகத்துடன் பார்க்கின்றன எனவும் அவர் கூறினார். இத்தகைய நம்பிக்கையீனங்கள் துரதிர்ஷ்டவசமானவை என்றும் குறிப்பிட்டார்.

"இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் சீனக் கடற்படையின் நடவடிக்கைகளும் மற்றும் கடற்கொள்ளைகளைத் தடுப்பதற்கான அதன் நடவடிக்கைகளும் அமெரிக்காவாலும் இந்தியாவாலும் கவலையுடன் பார்க்கப்படுகின்றன.

விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரத் தொழிற்துறையைக் கொண்டுள்ள சீனாவுக்கு வருடாந்தம் 200 மில்லியன் தொன் மசகு எண்ணெயை இறக்குமதி செய்யும் தேவை இருக்கிறது. எனவே சீனாவின் சக்தியைப் பாதுகாக்க இந்து சமுத்திரம் மிக முக்கியமானது என்பது வெளிப்படை. எனவே சீனாவின் நடவடிக்கைகள் இங்கு அதிகரிப்பதும் அதன் கடற்படையின் பிரசன்னம் இங்கு அதிகரிப்பதும் புரிந்துகொள்ளக்கூடியதே" என்று தெரிவித்தார் கோத்தபாய.

இலங்கைக் கடற்படை நடத்திய 'காலி கலந்துரையாடல்' என்ற சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். "எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கான கடல்சார் மூலோபாய கூட்டுறவு மற்றும் பங்களிப்பு" என்ற தலைப்பில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

பாதுகாப்புச் செயலாளர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்து சமுத்திரத்தில் சீனாவின் செல்வாக்கு விரைவாக அதிகரித்து வருகின்றது. சீனப் படைகளின் நவீனமயப்படுத்தல் சமுத்திரங்களில் கடற்

பார்க்க பக்கம் 4



# சதி

- ★ தெரிவுக்குழுவுக்கு சவால் விடுக்கும் வகையில் செயற்படமாட்டேன்
- ★ லிப்ரன் சுற்றுவட்டமாக மாறிவிட்டது புதுக்கடை
- ★ குற்றப்பிரேரணை விடயத்தில் யாரிடமிருந்தும் எந்த அழுத்தமும் கிடையாது

## பத்திரிகை ஆசிரியர் சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த காரசாரம்

கொழும்பு, டிசெ.14

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை அரசியல்மயப்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்தும் சதி முயற்சியே இப்போது அரங்கேறிக்கொண்டிருக்கிறது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரிகை மற்றும் மின்னியல் ஊடகங்களின் ஆசிரியர்களை நேற்றுக்காலை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையொன்றை சபாநாயகரிடம் வழங்கியுள்ளது. அந்த அறிக்கை குறித்து ஆராய குழு ஒன்றை நியமிப்பது தொடர்பில் நான் வெளியிட்ட கருத்து குறித்தே

பார்க்க பக்கம் 4

# பிரதம நீதியரசர் ஒருவரை விசாரிக்க தெரிவுக்குழுவுக்கு உண்டா அதிகாரம்?

## உயர்நீதிமன்ற நீதியரசர் கேள்வி

கொழும்பு, டிசெ. 14

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் இருக்கின்றதா என்று உயர்நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

பிரதம நீதியரசருக்கு எதிரான கண்டனத் தீர்மானம் சட்டவிரோதமானது என்று குற்றஞ்சாட்டி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது. அப்போது நீதியரசர் காமினி அமரதுங்கவினால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதிக்கு எதிராக வரக்கூடிய கண்டனத் தீர்மானங்களை விசாரிக்கும் அதிகாரம் அரசமைப்பின்படி உயர்நீதிமன்றத்துக்கு இருக்கிறது. ஆனால் பிரதம நீதியரசருக்கு எதிராக விசாரணை செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு இருக்கிறதா என்று நீதியரசர் கேட்டார்.

"நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்பது நாடாளுமன்ற கட்டளைச் சட்டத்தின் கீழ் செயற்படும் ஒன்று. நாடாளுமன்றத்துக்கு உள்ளே உள்ள

பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கழக மாணவிகளிடமும் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் வெலிக்கந்தவில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளநிலையில், மாணவிகள் சிலரிடமும் பயங்கரவாத விசாரணைப் பொலிஸார் விசாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

பார்க்க பக்கம் 4

## மனித உரிமைகளுக்கு இலங்கையில் சவுக்கடி

யாழ்ப்பாணம், டிசெ.14

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தினம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் முக்கியத்துவம்

பார்க்க பக்கம் 4

## 54,000 மாணவர்களுக்கு பல்கலை அனுமதி

கொழும்பு, டிசெ.14

2012 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியில் 54 ஆயிரம் மாணவர்கள் உள்வாங்கப்படுவர் என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜெயந்த நவரத்தின கூறியுள்ளார்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட வெட்டுப்புள்ளி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட

பார்க்க பக்கம் 4

## மாணவரை விடுவிக்குமாறு வவுனியாவில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரியும், வடக்கு - கிழக்கில் இடம்பெறும் ஜனநாயக விரோத செயற்பாடுகளை நிறுத்தக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

பார்க்க பக்கம் 4

# கூட்டமைப்பு முன்வந்தால் மீண்டும் பேச அரசு தயார்

## ஜனாதிபதி தெரிவிப்பு; புலம்பெயர் தமிழர் திட்டுக்கு சம்பந்தன் பயப்படுகிறாரோ? எனவும் கிண்டல்

கொழும்பு, டிசெ.14

தமிழ்க் கூட்டமைப்பு முன்வந்தால் தீர்வுப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அண்மையில்கூட சம்பந்தன் வருவேன் என்று கூறியிருந்தார். காலையுணவு கூடத் தயார் செய்யப்பட்டு அவர் வருவாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் வரவில்லையே?" - என்றும் குறிப்பிட்டார்.

பத்திரிகை மற்றும் மின்னியல் ஊடகங்களின் ஆசிரியர்களை நேற்றுக்காலை அலரிமாளிகையில் சந்தித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்போது ஜனாதிபதியிடம் அரசு - கூட்டமைப்பு பேச்சு பற்றியும் கேட்கப்பட்டது. அப்போதே மேற்கண்ட பதிலை வழங்கிய ஜனாதிபதி, தமிழ்க் கூட்டமைப்பினர் பேச்சுக்கு வரவேண்டுமென்பதே தனது எதிர்பார்ப்பு என்றும் குறிப்பிட்டார்.

"சம்பந்தன் என்னுடன் பேச வருவதாக சொல்லியிருந்தார். அவர் வருவாரெனக் காலையுணவும் தயார்செய்யப்பட்டிருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் அவர் வரவில்லை. புலம்பெயர் தமிழர்கள் திட்டுவார்கள் என்று பயந்துவிட்டார் போலும்" என்றும் குறிப்பிட்டார் ஜனாதிபதி. (சி)


## இறுதிச் சந்தர்ப்பம் ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனை விற்பன்னர்கள் யாழ் வருகை

100 ஆவது நபரின் விசாவையும் வென்ற எமது விற்பன்னர்கள் யாழ். தலைமைக் காரியாலயத்தில் ஆலோசனையின் இறுதி நாளான நாளை (15.12.2012) சனிக்கிழமை காலை 9.00 முதல் மாலை 6 மணிவரை தங்களுக்காகக் காத்திருப்பர்.

விரைந்து வாருங்கள். நேரில் விண்ணப்பங்களைக் கையளியுங்கள்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016



(28716)(3.8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் சுயாதீனத்துக்கு பாரதூர சவால்
# நேர்மை விசாரணைக்கு 'லோ ஏசியா' வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 14

இலங்கை நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை மீதான விசாரணை முன்னெடுப்புகள் பொருத்தமற்றவை; நேர்மை குறைபாடுடையவை என ஆசியா மற்றும் பசுபிக்கான சட்டக் கழகம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் நீதித்துறைக்கான சுயாதிபத்தியம் மீதான அவதானிப்பு என்ற தலைப்பில் இவ்வறிக்கையை மேற்படி சட்டக் கழகத் தலைவர் மாலதி தாஸ் வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பாக உருக்கொண்டுள்ள நிலைப்பாடுகளை ஆசியா மற்றும் பசுபிக்கான சட்டக் கழகம் வெகு உன்னிப்பாக அவதானிக்கின்றது.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் இக்கழகத்தில் அங்கம் வகிக்கின்றது. எனவே, சங்கத்தின் கண்ணோட்டம் குறித்தும் இக்கழகம் கூடிய அக்கறை கொண்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கென நாடாளுமன்றத் தெரிவுக் குழு நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு நிறுவப்பட்டுள்ளமை அரசமைப்பு விதிகளுக்கு முரண்பாடானதொன்று.

இக்குழுவின் விசாரணை முன்னெடுப்புகள் மூலம் பிரதம நீதியரசருக்குரிய இயற்கை நீதி மறுதளிக்கப்படுகிறது. இப்போது பதவிக்கு அவர் தகுதியற்றவர் என்ற முடிவையும் இந்த முன்னெடுப்புகள் எட்டியுள்ளன.

நீதித்துறையின் சுயாதீபத்தியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஐ.நா. ஏற்கனவே ஏற்றுள்ளது. 1985 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26ஆம் திகதி முதல், செப்டம்பர் 6 ஆம் திகதிவரை மிலானில், 'குற்றத்தடுப்பும், குற்றவாளிகளுக்கெதிரான நடவடிக்கைளும்' என்னும் தலைப்பில் நடைபெற்ற ஏழாவது ஐ.நா.மாநாட்டில் இக் கோட்பாடுகள் சுவீகரிக்கப்பட்டவை.

இந்தக் கோட்பாடுகள், 1985ஆம் வருட நவம்பர் 29ஆம் திகதி நிகழ்ந்த ஐ.நா. பொதுப் பேரவைக் கூட்டத்தில் 40/32 விதிகளாலும், 1985ஆம் வருட டிசம்பர் 13ஆம் திகதி நிகழ்ந்த கூட்டத்தில் 40/146 விதிகளாலும் அங்கீகரிக்கப்பட்டவை.

17ஆவது விதி பின்வருமாறு விளக்குகின்றது:

நீதித்துறை, பதவி நிலைவரம் ஆகியவை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டோ, முறையீடோ ஒரு நீதிவானுக்கு எதிராக எழுமாயின், பொருத்தமான செயல்முறைக்கேற்ப விரைவான நேர்மையான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

நேர்மையான விசாரணையை ஏற்பதற்கான உரிமை அந்த நீதிபதிக்குண்டு. இந்த விசாரணையின் பூர்வாங்க விடயங்கள் இரகசியமாக வைக்கப்படவேண்டியவை. நீதிபதி வேண்டுகோள் விடுத்தால் மாத்திரமே, இதில் மாற்றம் ஏற்படலாம்.

இவ்வாறு 17ஆவது விதி வரையறுக்கிறது.

இந்நிலையில் 'லோ ஏசியா' (ஆசியா மற்றும் பசுபிக்கான சட்டக் கழகம்) பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து கருத்துக் கூற வெளிப்படவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் எப்படி, ஏன் எழுந்தன என்றும் ஆராய முற்படவில்லை.

எனினும், இங்கு பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணை முன்னெடுப்புகள் பொருத்தமற்றவை. நேர்மை குறைப்பாடு கொண்டவை என்பதை இக்கழகம் பதிவு செய்கிறது.

எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் அதி சிரேஷ்ட நீதித்துறை அதிகாரிக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொணரும்போது, பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

எனவே, அதிகாரிகளில் விசாரணைக்கு உட்படுத்தப்படும் ஒருவர் சட்ட நடைமுறை உறுதிப்பாட்டோடு கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதை உத்தரவாதப் படுத்திக்கொள்ள மிக விழிப்பாக இருக்கவேண்டும்.

இலங்கையில் உருக்கொண்டுள்ள நிலைப்பாடுகள், நீதித்துறையின் சுயாதீபத்தியத்துக்கு பாராதூரமான சவால்கள் ஏற்பட்டுள்ளன என சர்வதேச சமூகத்தை எண்ணத் தூண்டுகின்றன.

எனவே, விசாரணை முன்னெடுப்புகள் களங்கமற்றவையாக இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, இலங்கை அரசை 'லோ ஏசியா' வலியுறுத்துகிறது.

- மேற்படி அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லலித், குகன் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

கடத்தப்பட்டு காணாமல் போன லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு யாழ். நீதிமன்றத்தில்நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை கண்டித்து யாழ். நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளதால் நீதிமன்றச் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அரச மற்றும் முறைப்பாட்டாளர்களின் சட்டத்தரணிகள் மன்றில் சமுகமளிக்காமையால் யாழ். நீதிமன்ற நீதிவான் க.சிவகுமார் இந்த வழக்கை ஜனவரி மாதம் ஒத்திவைத்தார்.

## அபிவிருத்தித்திட்ட நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.14

'மாநகரசபையின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டம்' நூல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா அறிவித்துள்ளார்.

அன்றைய் தினம் முற்பகல் 10 மணிக்கு கே.கே.எஸ். வீதியிலுள்ள 'செல்வ மஹால்' மண்டபத்தில் நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 47 கிராம அலுவலர் பிரிவகளைச் சேர்ந்த மக்களின் நேரடிப் பங்களிப்புடனான ஆக்கங்கள் இந்த நூலில் அடங்கியுள்ளதால் பெறுமதி வாய்ந்ததும் பயனுடையதாகவும் இந்த நூல் அமையுமென முதல்வர் அறிவித்துள்ளார். (16)

## 11 பெண்கள் முகாம் திரும்பினர்

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இராணுவத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களில் 13 பேர் நேற்று மாலை மீண்டும் தமது முகாம் திரும்பியிருக்கின்றனர். இருவர் தொடர்ந்து பெண்கள் விடுதியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பெண்கள் 13 பேரும் எதற்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு எந்த வகையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்பது தொடர்பில் முழுமையான தகவல்களைப் பெறமுடியவில்லை.

கடந்த 11 ஆம் திகதி இரவு இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்கள் உள நலப் பிரிவில் இரண்டு நாள்கள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பெற்றோர் தவிர்ந்த எவரும் அவர்களைப் பார்வையிட அனுமதிக்கவில்லை.

நேற்று மாலை 5.30 மணிக்கு இவர்களில் 11 பேர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

''எமக்கு வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. முகாமில் பேய் இருக்கிறது. அதைக் கண்டு பயந்து விட்டோம். அதை இப்போது மீள நினைவு படுத்தாதீர்கள்'' என சிகிச்சை பெற வந்த பெண்களில் ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். (ஐ-6)

# தெரிவுக்குழு உறுப்பினர்கள் நீதியரசரை நிந்திக்கவில்லை

**தேவையானால் ஒளிப்பதிவு நாடாவைப் பாருங்கள்**
**அமைச்சர்கள் நேற்று கூட்டாக அறிவிப்பு**

கொழும்பு, டிசெ. 14

குற்றப் பிரேரணை விசாரணையின்போது தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் பிரதம நீதியரசரை நிந்தனை செய்தார்களென்ற எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டை அரசு நேற்றுத் திட்டவட்டமாக நிராகரித்த அதே சமயம், தெரிவுக்குழு விசாரணைகளின் போது பதிவாகியுள்ள ஒளிப் பதிவு நாடாக்களை எவரும் பார்வையிட்டு இதன் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளலாமென்றும் அறிவித்திருக்கிறது.

பத்திரிகை ஆசிரியர்களுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான கலந்துரையாடலொன்று நேற்றுக்காலை அலரிமாளிகையில் நடைபெற்றது. பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் உறுப்பினர்களும், அமைச்சர்களுமான அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, விமல் வீரவன்ஸ, டிலான் பெரேரா ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். இதன்போதே அவர்கள் அரசின் இந்த நிலைப்பாட்டை விளக்கினர்.

பிரதம நீதியரசருடன் அவரது சட்டத்தரணி ஒருவர் தான் தெரிவுக்குழுவுக்கு வரமுடியும். என்றாலும், அவருடன் சிரேஷ்ட சட்டத்தரணியாக ரொமேஷ் டி சில்வா, நளின் லத்துவஹெட்டி ஆகியோர் வர அனுமதியளித்தோம். இறுதிநாள் சட்டத்தரணி நீலகண்டன் தனது மகன் வரவேண்டுமெனக் கோரினார். அதற்கும் நாம் அனுமதியளித்தோம். நீதியரசரின் வங்கிக்கணக்கு, சொத்து விவரங்களைக் கொடுத்து அதுபற்றியே கேள்வியெழுப்பினோம். எந்த இடையூறையும் நாம் செய்யவில்லை.

**அமைச்சர் சுசில்**

கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்த நீதியரசரும் அவரது சட்டத்தரணிகளும் மறுநாள் சபாநாயகருக்குக் கடிதமொன்றை அனுப்பினர். ஆனால், தெரிவுக்குழுவிலிருந்து வெளிநடப்புச் செய்தமைக்கான காரணம் என்ன என்பது பற்றி அவர்கள் இந்தக் கடிதத்தில் தெரிவிக்கவில்லை.

**அமைச்சர் விமல்**

பிரதம நீதியரசர் மற்றும் அவரின் சட்டத்தரணிகளின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது தெரிவுக்குழுவிலிருந்து வெளிநடப்புச் செய்யவேண்டுமென முன்கூட்டியே திட்டமிட்டுத்தான் வந்தார்கள்போல் தோன்றுகிறது.

தெரிவுக்குழு முன் சொல்வதெல்லாம் உண்மை என்று சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். ஆனால், அவர்கள் அதனை செய்ய மறுத்தனர். இது தொடர்பில் இரண்டு மூன்று மணித்தியாலயங்கள் விவாதம் நடந்தது. குழுவிலிருந்து விலகிச் செல்லும் நோக்கம் அவர்களிடம் இருந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் அரசியல்வாதிபோல் நடந்துகொள்ளக் கூடாது. பதவியில் இருந்துகொண்டு இப்படி செயற்படுவது நீதித்துறையில் மோசமான முன்னுதாரணத்தையே கொடுக்கப் போகின்றது.

**அமைச்சர் டிலான்**

வழமையான சம்பிரதாயங்களை மீறி பிரதம நீதியரசருக்கு நாடாளுமன்றத்தில் நாங்கள் முக்கியத்துவமளித்திருந்தோம். விசேட பாதுகாப்புடன் முக்கியஸ்தர்கள் வரும் வாயிலால்தான் பிரதம நீதியரசர் வந்தார். போக்குவரத்து வாகன வசதிகள் கிரமமாக இருந்தன. குற்றப் பிரேரணை விசாரணையை நியாயமாக நடத்தினோம். வழமையான சம்பிரதாயப்படி சட்டத்தரணிகள் தெரிவுக்குழு விசாரணைகளின் போது பிரதம நீதியரசருக்கு அருகில் இருக்கமாட்டார்கள். ஆனால், அவர்கள் பிரதம நீதியரசருக்கு அருகில் இருக்க எமது தெரிவுக்குழுவின் தலைவர் அனுமதியளித்தார். இவ்வாறான பின்னணியில் பிரதம நீதியரசரை நாம் நிந்தித்ததாகக் கூறுவது தவறு.

- இப்படி அமைச்சர்கள் மேலும் தெரிவித்தனர். ()

# நல்லிணக்கப் பரிந்துரைகள் தொடர்பில் மக்களின் அழுத்தம் அரசுக்கு வேண்டும்



### மாற்றுக்கொள்கைக்கான நிலையப் பணிப்பாளர் கூறினார்

கொழும்பு, டிசெ. 14

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழவின் பரிந்துரைகள் பற்றிப் பொதுமக்கள் முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும்.

அதன் மூலமே அதிலுள்ள நன்மைகளை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு அண்மையில் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்:-

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் சிறிதளவேனும் அக்கறை அற்ற [illegible] பரிந்துரைகளிலுள்ள விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் அரசுக்கு உரிய அழுத்தங்களை வழங்க வேண்டும். அதன் மூலமே அவற்றை நிறைவேற்ற அரசைத் தூண்டமுடியும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை பற்றி எந்தவித விளக்கங்களும் இல்லாதவகையிலேயே வீதிக்கு இறங்கி ஐ.நாவுக்கு எதிராகப் போராட வைத்தது அரசு.

இந்தத் தவறை இனிமேலும் திருத்திக்கொண்டு பரிந்துரைகள் பற்றிய முழுமையான விவரங்களைச் சகல இன மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்

தற்போது கூட ஐ.நா.வின் நெருக்குதல்களால் 285 பரிந்துரைகளில் 132 க்கான செயற்றிட்டத்தையே அரசு தயாரித்துள்ளது. மீதி 153 பரிந்துரைகள் தொடர்பில் அரசு மௌனமாகிறது. பெருமளவு நிதிச் செலவின்றிக் குறுகிய காலத்துக்குள் செயற்படுத்தக் கூடிய பல பரிந்துரைகள் இருந்தும் அதை செயற்படுத்த அரசு மறுத்து வருகிறது. இது தொடர்பில் சகல இன மக்களும் அரசுக்கு அழுத்தம் தர வேண்டும்- என்றார். (த-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதிகளில் பிறந்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பன்னிரண்டு பேர் இவ்வாறு பாராட்டுப் பெற்றனர். நிகழ்வில் முதலில் மங்கள விளக்கேற்றப்பட்டுப் பின்னர் மெழுகுவர்த்தி கொளுத்திப் பிறந்தநாள் கேக்கை டிசெம்பர் 12 ஆம் திகதி பிறந்த முதியவர்கள் வெட்டினார்கள். இந்த பன்னிரண்டு பேருக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-17)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு இறுதிப் புள்ளி முடிவாகவில்லை

## பட்டியல் காட்சிப்படுத்துவதில் தாமதம்

யாழ்ப்பாணம், டிசெ.14

இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான இறுதி 'கட்டவுட்' புள்ளி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இதனால் பிரதேச செயலகங்களில் வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை காட்சிப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்திய வீட்டுத் திட்டத்துக்குரிய இரண்டாம் கட்டப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம்பெற்றன.

இதனடிப்படையில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 11 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்திய வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பித்தவர்கள் புள்ளியிடலில் தெரிவு செய்யப்பட்டனர். 10 புள்ளி அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தற்போது 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 10 புள்ளிகளுக்கும் மேல் 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பெற்றுள்ளனர். இருப்பினும் இரண்டாம் கட்டத்துக்கு 2 ஆயிரத்து 600 வீடுகளே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

10 புள்ளிகளுக்கு மேல் பெற்ற சகலருக்கும் இந்திய வீட்டுத் திட்டம் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்படமுடியாத நிலை தோன்றியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் எத்தனை புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்குவது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளை இந்திய வீட்டுத் திட்டத்துக்குரிய இரண்டாம் கட்டப் பயனாளிகளைத் தெரிவு செய்து பெயர்ப்பட்டியல் அனுப்பும் இறுதிநாள் இன்று வெள்ளிக்கிழமையாகும். (த-5)

### 'மகநெகும' திட்ட காலம் நீடிப்பு

துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சால் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட 'மகநெகும' திட்டங்களால் கிராமிய வீதிகள் முன்னோடி வேலைத் திட்டத்திலான வேலைகளை செய்து முடிப்பதற்கு எதிர்வரும் 24 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) எஸ்.எஸ்.டி. சுபசிங்க அனைத்து உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் இது குறித்து அறிவித்துள்ளார்.

வேலைக்குரிய கொடுப்பனவு வவுச்சரை உரிய முறையில் பூர்த்தி செய்து, குறித்த காலக்கெடுவுக்குள் அனுப்பி வைக்குமாறும் குறித்த காலக்கெடுவுக்குப் பின்னர் கிடைக்கும் வவுச்சர்களும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத வவுச்சர்களும் நிராகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-9)

# புதிய மின்பிறப்பாக்கி மூலம் 24 மெகா வாற்ஸ் மின்சாரம்

## ஜனவரி முதல் குடாநாட்டுக்குக் கிடைக்கும் அதன் பின்னர் மின்வெட்டு ஏதும் இருக்காதாம்

யாழ்ப்பாணம், டிசெ.14

சுன்னாகம் மின் நிலையத்தில் இருந்து ஜனவரி மாதம் முதல் குடாநாட்டுக்குப் புதிதாக 24 மெகா வாற்ஸ் மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இந்த மின்விநியோகத்துக்கெனப் புதிய மின் பிறப்பாக்கி ஒன்று அண்மையில் கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து சுன்னாகம் மின்நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

24 மெகா வாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய இந்த மின் பிறப் பாக்கியைப் பொருத்தும் பணிகள் நிறைவடைந் துள்ளன.

இதையடுத்து ஜனவரி முதல் குடாநாட்டுக்கு இந்த மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளது. இந்தப் புதிய மின்பிறப் பாக்கி மூலமான பரீட்சார்த்த மின்விநியோகம் நேற்று வியாழக்கிழமை மேற்கொள் ளப்பட்டது.

தற்போது குடாநாட்டில் மின்விநியோகம் அடிக்கடி தடைப்பட்டு வருவதால் மக்கள் தமது அன்றாடப் பணிகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், அலுவலகங்களிலும் பணிகள் பாதிக்கப்படுகின்றன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற நேரத்திலும் இந்த மின் தடை மேற்கொள்ளப்படுகிறது.

இந்தநிலையில் மின்வெட்டு இல்லாமல் குடாநாட்டுக்குத் தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்குவதற்காகவே இந்தப் புதிய மின்பிறப்பாக்கி மூலம் ஜனவரிமுதல் மின்விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (த-17)

### நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளி அபிவிருத் திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் பிற் பகல் 2.30 மணிக்கு முன் பள்ளி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (ம-9)

**செயலமர்வு**

தென்மராட்சி வலயக் கல்விப் பாடசாலை தரம் 4 வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஏடிஓஈ செயலமர்வு காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலைத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (ம-9)

**பரிசளிப்பு**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறை நகர சபை நடத்திய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர்களுக்கான பரிசளிப்பு விழா முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பொது நிலையத்தில் சபைத் தலைவர் சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. (ம-8)

# கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்

## வாக்குறுதி கிடைத்ததால் கைவிடப்பட்டது உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், டிசெ.14

கோரிக்கைள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டதால் வவுனியாவைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் உண்ணாவிரதப் போராட்டத்தை நான்காவது தினமான நேற்றுக் கைவிட்டார்.

யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று நேரில் சென்று அறிவித்ததை அடுத்து முற்பகல் 10 மணியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தை சகாதேவன் நிறைவு செய்தார்.

வடபகுதி கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கோரி கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இந்தநிலையில் நான்காவது தினமான நேற்று, கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து இது கைவிடப்பட்டது.

★ இலங்கை கடற்பிரதேசத்துக்குள் பிரவேசித்து எமது தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்குச் சவால் விடும் வகையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த வேண்டும்.

★ போரால் பாதிக்கப்பட்ட பிரதேச மீனவர்களின் சங்க நடவடிக்கைகளுக்கு கட்டுப்படாமல் தொழிலில் ஈடுபடும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைக் கையாண்டு எமது கடல் வளத்தை அழிக்கும் மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.



★ எமது மீனவர்களின் வளங்களைச் சூறையாடும் வெளிப்பிரதேச மீனவர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் குருநகர் சேமக்காலைக்கு அருகில் இந்த உண்ணாவிரதம் நடைபெற்றது.

இந்தக் கோரிக்கைகள் வடபகுதியில் நிறைவேற்றப்படும் என்று மேலிடம் தெரிவித்ததாக அரச அதிபர் சகாதேவனிடம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் கொடுத்த பழரசத்தை அருந்தி தமது உண்ணாவிரதத்தை அவர் கைவிட்டார்.

உண்ணாவிரதம் முடிவடைந்ததும் அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-7-17)

# எந்த மோசடியும் இடம்பெறவில்லை

## குமுறுகிறார் யாழ்.மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்.மாநகர சபையில் எதிர்க்கட்சியினர் கூறுவது போன்ற எந்தவிதமான மோசடிகளும் இடம்பெறவில்லை.

**எதிரணியினர் குறிப்பிடு வது போன்று எந்த மோசடிகளும் இடம்பெறவில்லை. ஆறு கோடி ரூபா இழப்பு இடம்பெற்றிருப்பதாகக் கூறு வது தவறானது.**

மாநகரசபை நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்துக்கு அமையவே கேள் விப்பத்திரம் பெற்று, வாழ் வாதாரத்தை இழந்து வறுமை யில் உள்ள மக்களின் கோரிக் கைக்கு இணங்க மின்சார நிலைய வீதியிலும், யாழ். ஆஸ்பத்திரி வீதியிலும் தற்காலிகமாக 22 கடைகள் வழங்கப் பட்டுள்ளன.

எதிரணியினர் குறிப்பிடுவது போன்று எந்த மோசடிகளும் இடம்பெறவில்லை. ஆறு கோடி ரூபா இழப்பு இடம்பெற்றிருப்பதாகக் கூறுவது தவறானது.

இவ்வாறு யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்தபோது இந்த விபரங்களை அவர் சுட்டிக்காட்டினார்.

மாநகர சபையின் எதிரணியினர் நகரின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு செயற்படும் எதிரணியாக இல்லாமல் ஓர் எதிரியின் கட்சியாகவே செயற்படுகின்றனர். பெரும் முயற்சி காரணமாக 2013 ஆம் ஆண்டுக்கான வருமானத்தை 752.7 மில்லியன் ரூபா வரை எட்டியுள்ளோம்.

பொதுக்கூட்டம், நிதிக் குழுக் கூட்டங்களில் இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிர்க்கருத்துக் கூறாத எதிரணியினர் செய்தியாளர்களிடம் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகக் கருத்துக் கூறியுள்ளனர்.

தற்காலிகமாக வழங்கப்பட்ட கடைகளுக்கு மாதம் 73,240 ரூபாவும் வருடம் ஒன்றுக்கு 9 இலட்சம் ரூபா வரையும் கிடைத்துள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை கூட்டங்களின் போது மாறுபட்ட சிறந்த வரவு-செலவுத் திட்டம் என சபையில் எதிரணியினர் குறிப்பிட்டனர். அத்துடன் தங்களது கோரிக்கைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

முன்னைய ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் போன்றவர்கள் தயாரித்த வரவு-செலவுத் திட்டத்துக்கு மாறாக வித்தியாசமாக தயாரிக்கப்பட்டுள்ளது என்ற காழ்ப்புணர்ச்சியாலேயே இப்போது எதிரணியினர் அதற்கு எதிராகக் கருத்துகளை வெளியிடுகின்றனர் - என்று அவர் மேலும் கூறினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவரை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இன்று மு.பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரை, வவுனியா இலுப்பையடியில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்று நடந்தது நாளை எமக்கும் நடக்கலாம் என்பதை உணர்ந்து கொள்வதுடன், கைது செய்யப்பட்ட மாணவர்களும் எமது உறவுகளே! என்பதையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்காகவும் குரல் கொடுப்பது எமது கடமையாகும்.

எனவே இந்தப் போராட்டத்தில் பொது அமைப்புக்களையும், காணாமல் போனவர்களின் உறவினர்களையும், கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களையும், பல்கலைக்கழகச் சமூகத்தினரையும், சகல அரசியல் கட்சிப் பிரமுகர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-5-402)

## சதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இப்போது பேசப்படுகிறது. எந்த ஓர் அறிக்கை வந்தாலும் அதனை ஆராய ஒரு நடவடிக்கை எடுப்பதைப் போலத்தான் இது பற்றியும் ஓர் அபிப்பிராயத்தை எடுக்க உத்தேசித்தேன்.இது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சவால் விடும் ஒரு செயற்பாடல்ல. இப்படியான ஏற்பாடுகள் சட்டத்திலும் இல்லை; அரசமைப்பிலும் இல்லை. இது ஒரு சாதாரண நடைமுறை. குற்றப் பிரேரணை குறித்தான தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையை சுயாதீனமான ஒரு குழு ஆராயும். அவ்வளவுதான்.

பிலிப்பைன்ஸில் பிரதம நீதியரசருக்கு எதிராக இவ்வாறேதான் ஒரு குற்றப்பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இதே போல குற்றச்சாட்டுகள்தான் அங்கும் சுமத்தப்பட்டுள்ளன. குற்றப்பிரேரணை என்பது புதிய ஒரு விடயமல்ல. இதற்கு முன்னரும் பிரதம நீதியரசர்களுக்கு எதிராக குற்றப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசமைப்பில் அதற்கு இடம் உள்ளது.

**பதில் ஆள் இப்போது இல்லை**

பதில் பிரதம நீதியரசர் ஒருவரை நியமிப்பது பற்றி சிந்திப்பதற்கான தேவை இதுவரை எழவில்லை. நேரம் வரும்போது அது பற்றிச் சிந்திப்போம். தேவைப்படின் உரிய ஒருவரை நியமிப்போம். இப்போதே அதற்காக ஒருவரைத் தேடக்கூடாதென்று நினைக்கிறேன். அரச ஊழியர் ஒருவர் தவறு செய்தால் அவர் முதலாவதாகப் பணிநீக்கம் செய்யப்படுவார். பின்னர் ஊதியமும் நிறுத்தப்படும். சொத்துகளை மறைத்ததால் சிறைக்குப் போன அரச ஊழியர்களும் உள்ளனர்.

**லிப்ரனாக மாறிய புதுக்கடை**

இன்று புதுக்கடையைப் பாருங்கள். லிப்ரன் சுற்றுவட்டம் போல் மாறிவிட்டது. கறுப்புக் கோர்ட் அணிந்தவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இது அரசியல்மயமாகிவிட்டது.

ஜே.வி.பி, ஐக்கிய தேசியக் கட்சி போன்றவற்றைச் சேர்ந்தோரே இன்று நீதிமன்ற முன்றிலில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். பதவிக்கான சீருடை அணிந்துகொண்டு அரசியலில் ஈடுபடுவதுதான் மகா தவறு. முன்னர் ஒரு சீருடை அணிந்தவர் என்னுடன் மோதினார். உண்மையில் அவர் சீருடையில் இருக்கும்போது அரசியல் பேசவில்லை. இங்கு வந்து என்னுடன் கருத்து முரண்பட்டு, களனி விகாரைக்குப் போய் பின்னர் சீருடையை அகற்றிய பின்னர்தான் அவர் அரசியலே பேசினார். அது எவ்வளவோ பரவாயில்லை.

இப்போது எல்லோரும் மாற்று வேட்பாளரைத் தேடத் தொடங்கியுள்ளனர். 'எஸ்' என்ற பெயரில்தான் வேட்பாளர்களைத் தேடுகிறார்கள் என நான் நினைக்கிறேன்.

இந்தக் குற்றப்பிரேரணைக்கு முதலில் வித்திட்டது ஐக்கிய தேசியக் கட்சிதான். அதன் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ராவய பத்திரிகையில் குற்றப்பிரேரணை பற்றி முதலில் கூறினார். பிறகு தயாசிறி ஜயசேகர, அநுரகுமார திஸாநாயக்க, ஹர்ஷ டி சில்வா ஆகியோர் குற்றப்பிரேரணைக்கு முக்கியத்துவமளித்துப் பேசினர். அவர்கள் கொடுத்த யோசனைதான் இது. அதனை நடைமுறைப்படுத்தும்போது எம்மைத் தவறு என்கின்றனர். நாம் அரசமைப்பின்படி செய்யப்போனதால் வந்த வினைதான் இது.

**அழுத்தங்கள் இல்லை**

குற்றப்பிரேரணை தொடர்பில் எந்த நாடும் எங்களுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. நாங்கள் எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியப் போவதுமில்லை. யாரும் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கவுமில்லை. அழுத்தங்களை கொடுக்கவுமில்லை. சிலவேளை எதிர்க்கட்சித் தலைவருக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதோ தெரியவில்லை - என்றார்.



இலங்கைக் கடற்படை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற "காலிக் கலந்துரையாடல் 2012" இல் கடற்படை அதிகாரிகளுடன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்துரையாடும் போது...

# கெஹலியவை கொலை செய்ய முயற்சி; திருநெல்வேலிப் பெண்ணுக்குச் சிறை

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவைப் படுகொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பெண்ணுக்கு 20 வருடச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது கேகாலை நீதிமன்று.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த ராசலிங்கம் தாமரைவதனி என்பவரே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்.

தேசிய ஊடக மத்திய நிலையத்தின் பேச்சாளராக 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இருந்தபோது அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் வதனி பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீது கேகாலை மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கு இறுதியாக நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது,

வழக்கை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிவான் மேனகா விஜேசூரிய வதனியைக் குற்றவாளியாக இனங்கண்டு 20 வருடச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (16)

## இந்து மா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
படை நடவடிக்கைகளை அதிகப்படுத்தியுள்ளது. அத்துடன் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் அது தனது பொருளாதார செல்வாக்கையும் விரிவுபடுத்தி வருகின்றது. இவை அனைத்தும் அமெரிக்கா மற்றும் இந்தியாவால் கவலையுடன் கண்காணிக்கப்படுகின்றன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா அமைத்துவரும் துறைமுகங்கள் இந்தியாவைச் சுற்றிவளைப்பதற்காக அமைக்கப்படுபவை - இதனை முத்துமாலை மூலோபாயம் என்று அரசியல் ஆய்வாளர்கள் அழைக்கிறார்கள் - என்று அந்த நாட்டால் நோக்கப்படுவதும் புரிந்துகொள்ளத்தக்கதே. அதே நேரம் சீனாவின் பார்வையில் அவை பொருளாதார நலன்களுக்கானவை மட்டுமே.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனா மேற்கொண்ட முதலீடு பொருளாதார நலன்களை மட்டுமே சார்ந்தது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இலங்கைக்கு தெற்கே 10 கடல் மைல் தொலைவில் ஒவ்வொரு நாளும் 300 கப்பல்கள் பயணிக்கின்றன. இந்த பொருளாதார வளம் நீண்ட காலத்துக்கு முன்னரே அடையாளம் காணப்பட்ட ஒன்று.

கடுமையான நிபந்தனைகள் ஏதுமின்றி உதவ முன்வருபவர்களிடம் இருந்து இலங்கை உதவிகளை வரவேற்கிறது. அதனை ஏதாவது ஒரு நாட்டுடன் அணிசேர்ந்ததாக தவறாகப் புரிந்துகொள்ளத் தேவையில்லை - என்றார்.

## பல்கலைக்கழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பல்கலைக்கழகத்தில் நிலவும் பதற்றத்தை அடுத்து விடுதிகளில் தங்கியிருந்த மாணவ மாணவிகள் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் சில மாணவிகளை விசாரணைக்கு வருமாறு வீடுகளுக்கு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளர் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்ததாவது:-

தற்போது எமது மாணவர்கள் விடுதிகளை விட்டுத் தமது வீடுகளுக்குத் சென்றுள்ள நிலையில் ஒரு சிலருடனேயே எம்மால் தொடர்புகொள்ள முடிகிறது.

தம்மையும் விசாரணைக்கு வருமாறு அழைப்புக் கடிதங்கள் தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சில மாணவிகள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவியொருவருக்கு நேற்று அழைப்புக் கடிதம் கிடைத்ததை அடுத்து [illegible] பொலிஸ் நிலை[illegible] சென்றுள்ளார் என்று தகவல் கிடைத்துள்ளது.

அங்கு அவர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார் எனவும் கூறப்படுகிறது.

இதுவரை பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உத்தியோகபூர்வமாக பொலிஸாரால் எந்தவித அறிவித்தலோ அல்லது மாணவிகளின் பெயர் விவரங்களோ அனுப்பிவைக்கப்படவில்லை .

எமது துணைவேந்தர் மாணவர்களின் விடுதலை தொடர்பில் உயரதிகாரிகளுடன் பேசுவதற்காக தற்போது கொழும்புக்குச் சென்றுள்ளார் - என்றார் அவர். (உ-16-14)

## 54,000...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
26 ஆயிரத்து 900 பேருக்கும் தகுதியான 25 ஆயிரம் பேருக்கும் இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்கப்படும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடம் தோறும் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர்வரை உயர்தரப் பரீட்சை எழுதுகின்றனர். இவர்களில் 25 ஆயிரம் பேர் வரையிலானோர் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். வெட்டுப்புள்ளி அடிப்படையில் இந்த ஆண்டு அது இரட்டிப்பாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 33 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகின

கொழும்பு, டிசெ.14

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களால், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் இதுவரையில் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது.

நவம்பர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் யாழ்.குடாநாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள், முன்னாள் போராளிகள் எனப் பலதரப்பட்டோரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் மாலை வரையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் 31 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றைய தினம் மேலும் 2 முறைப்பாடுகள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அச்சுவேலி பகுதியில் கடந்த ஞாயிறு, திங்கட் கிழமைகளில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பிலேயே முறையிடப்பட்டுள்ளன. (த-5)

## மனித...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பெறத் தொடங்கிய காலத்தில் இலங்கையில் மனித உரிமைகளுக்குச் சவுக்கடி விழுந்து அது மறையத் தொடங்கியுள்ளது என்று நிகழ்வில் பேசியவர்கள் தெரிவித்தனர்.

எமது நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து மக்களில் ஒரு பகுதியினருக்கு மனித உரிமை, மொழி உரிமை, தொழில் உரிமை, கல்வி உரிமை பாதிக்கப்பட்ட போது நாட்டின் பெரும்பான்மையினர் அதனை தார்மீக ரீதியில் அணுகி விவாதிக்க தவறியதன் விளைவையே எமது நாடு அனுபவித்துக்கொண்டிருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (த-5)

## பிரதம நீதியரசர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விடயங்களை கையாளும் அதிகாரங்கள் மாத்திரமே அதற்கு இருக்கின்றன. நாடாளுமன்றத்துக்கு வெளியே அதனை செயற்படுத்தும் வகையில் அது ஒரு பொதுச் சட்டம் அல்ல" என்று சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் வாதிட்டனர்.

அரச தரப்பில் வாதாடிய சட்ட மா அதிபர், இந்த வழக்கை விசாரணை செய்ய உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என்று கூறினார். எனினும் விசாரணை வெள்ளிக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்துவிட்டதாலும், சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்படாததாலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை, அரச உறுப்பினர்களின் அறிக்கை என்றே கருத முடியும் என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கண்டனத் தீர்மானத்தை ஆராய்ந்த தெரிவுக் குழு அவர் மீதான 3 குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தியது. ஏனைய இரண்டில் இருந்து அவரை விடுவித்தது. மொத்தம் 14 குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டிருந்தாலும் முதல் ஐந்து குற்றச்சாட்டுகள் மாத்திரமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதன் அறிக்கை நாடாளுமன்ற சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில் ஷிராணி பண்டாரநாயக்கா தனது வழக்கறிஞர்கள் மூலமாக ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். தெரிவுக் குழுவின் அறிக்கை தமக்கு கிடைக்கப்பெறவில்லை என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவின் அறிக்கை தனக்கு கிடைத்தவுடன் ஷிராணி அதற்கு விரிவாகப் பதிலளிப்பார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்சிகளிடம் குறுக்கு விசாரணைகள் நடத்த அனுமதி அளிக்கப்பட்டால் அவர்கள் வழங்கியுள்ள ஆவணங்களின் உண்மையற்ற தன்மையை தன்னால் நிரூபிக்க முடியும் என்றும் பிரதம நீதியரசர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

தன்மீது கூறப்பட்டுள்ள அனைத்துப் புகார்களும் அடிப்படையற்றவை என்றும், காழ்ப்புணர்வால் கூறப்படுபவை என்றும் தான் குற்றமற்றவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சின் செயலாளருடனான சந்திப்பு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.14

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடனான சந்திப்பு தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்குமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள தாக வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

வன்னிப்பகுதி பாடசாலைகளில் நீண்ட காலமாகச் சேவையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக 'வன்னித் தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தின்' ஒழுங்குபடுத்தலின் மூலம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியாவடக்கு, வடமராட்சி கிழக்கு, மடு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனை அவரது அலுவலத்தில் சந்தித்துத் தமது நிரந்தர நியமனம் தொடர்பாக தாம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாகத் தெரிவித்திருந்தனர். இதன்போது கருத்துத் தெரிவித்த வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மாணவர்களின் கல்விக்காகச் சேவையாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். இதற்காக நாம் எம்மால் முடிந்தளவுக்கு முயற்சி செய்துள்ளோம். உரிய இடத்தில் இருந்து அனுமதி கிடைத்ததும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறியதாக தொண்டர் ஆசிரியர்களால் கூறப்பட்டுள்ளது.

அவரது கருத்துக்களைக் கேட்ட வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் கூறுகையில்; இந்தச் சந்திப்பும் அவரது கருத்துக்களும் தமக்கும் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்கின்ற புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள்.

மேலும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாதுவிட்டால் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகம் முன்பாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தையும் மறியல் போராட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளதாக அறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் இந்தச் சந்திப்பை அடுத்து அதனை கைவிட்டுள்ளதாகவும் வன்னித் தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தினரால் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-426)

# இரணைமடு சூரியகரையில் மீன் பிடிப்பதற்கு அனுமதி

அக்கராயன், டிசெ.14

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் சூரியகரைப் பகுதியில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரைச்சி கிழக்கு நன்னீர் மீன்பிடிச் சங்கத் தலைவர் எஸ்.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.தவராசா, கிளிநொச்சி செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், நன்னீர் மீன்பிடி விரிவாக்க அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போது 90 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 20 குடும்பங்களுக்கான வள்ளம், வலைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் நன்னீர் மீன்பிடித் தொழிலின் இணைப்பாளராக விளங்கும் அ.கேதீஸ்வரன் மீள்குடியமர்வு இடம்பெற்ற நாள் தொடக்கம் எடுத்த பெரும் முயற்சி காரணமாக இரணைமடுக் குளத்தின் சூரிய கரைப் பகுதியில் மீன்பிடிப்பதற்குத் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரணைமடுக் குளத்தில் மீன்பிடிப்பதற்குச் சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 190 குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## வருடாந்த பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி மாவட்ட முழங்காவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. பாடசாலை அதிபர் சு.கணபதிப்பிள்ளையின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராஜா, பூநகரி கோட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

1970 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது பரிசளிப்பு விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# சிறுவர் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி நடந்த தெரு நாடகம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையினால் தெருநாடகம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. சிறுவர்களின் கல்விக்குத் தடையாக இருப்பவற்றைத் தகர்ப்போம் என்னும் தொனிப்பொருளிலான தெருநாடகமொன்றே இடம்பெற்றுள்ளது. அக்கராயன் மற்றும் ஸ்கந்தபுரம் பகுதிகளின் பல்வேறு இடங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

''சிறுவர்களைப் பாடசாலையில் இணைப்போம், மாணவர் இடைவிலகலைத் தடுப்போம், குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதைத் தடை செய்வோம், பிள்ளைகளின் கற்றலுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம், சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுப்போம், சிறுவர்கள் மூலமாக போதைப்பொருள் வாங்குவதையும் விற்பதையும் தடை செய்வோம், உடல் உள ரீதியான தண்டனைகளிலிருந்து சிறுவர்களை மீட்டெடுப்போம், குடும்ப வன்முறைகளை இல்லாதொழித்துப் பிள்ளைகளின் கல்விக்கு ஏற்ற சூழலை வீடுகளில் உருவாக்குவோம், சிறுவர்களின் உரிமைகளைப் பேணுவோம் எனப் பல்வேறு விடயங்களை இத்தெரு நாடகம் வெளிப்படுத்தியது. (க-18)


# சுபாஸ் ரூறிஸ்ட் ஹோட்டல்

**மங்கலகரமான ஆரம்பம்**

**இன்று (14.12.2012) வெள்ளிக்கிழமை**

**நண்பகல் 12 மணி சுபவேளையில்**

சுபாஸ் ரூறிஸ்ட் ஹோட்டல் பிறைவேற் (லிமிட்)

தனது சேவையை மங்கலகரமாக

ஆரம்பிக்கவுள்ளது.

பணிப்பாளர் - பணிப்பாளர் சபை,

(ஆரம்பம்: 1970)

49, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 4923

(வி/2172) (45.6)


### போக்குவரத்தில் இடர்கள்

மழை காலத்தில் பூநகரியின் 10 ஆம் கட்டை மதகு வழியான போக்குவரத்தில் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக முக்கொம்பன் கிராமத்திலிருந்து பூநகரி மருத்துவமனை, பிரதேச செயலகம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-18)



## மரண அறிவித்தல்

### திருமதி சுகந்தினி சுரேஸ்குமார்

அல்லையம்பதி, துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவுடம் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகந்தினி சுரேஸ்குமார் நேற்று(13.12.2012) வியாழக்கிழமைஅகாலமரணமடைந்தார்.

அன்னார் சுரேஸ்குமாரின் (சமுர்த்தி உத்தியோகத்தர், கரவெட்டி) அன்பு மனைவியும், அபிலாஷின் அன்புத் தாயும், திரு. திருமதி சண்முகநாதன் (ஓய்வு பெற்ற தபால் பயிற்சிக் கல்லூரி, அதிபர்) தம்பதியரின் அன்பு மகளும், க.பகீரதி(ஆசிரியை, யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை), திருமதி உ.சுமதினி (ஆசிரியை, யா/தாளையடி றோ.க.த.க.பாடசாலை), திருமதி வை.யாழினி, ச. உமாகாந்தன் (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ச.காயத்திரி(மாணவி, தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பா.பாலகுமாரன்(லண்டன்), தி.கலைச்செல்வன்(பிரதம மு. உதவியாளர், பிரதேசசெயலகம், கோப்பாய்),சு. உதயகு மாரன்(உரிமையாளர், அல்லைக் கந்தன் அழகுமாடம்), த.வைகுந் தராசா (வர்த்தகர் ) ,ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற திரு. திருமதி பாலசுப்பிரமணியத்தின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.12.2012) வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனத்திற்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டி.

சி.கா.சண்முகநாதன் (தந்தை) (முகாமையாளர், வடிவேலர் மண்டபம்)

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையின் ஊழிய நலன்புரி சங்கத்தின் அங்கத்தவரான

### சோமசுந்தரம் கஜேந்திரன்

(சாரதி, உளநல வைத்திய பிரிவு)



அவர்களின் தீடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பிராந்திய சுகாதர சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(28788)(3.14)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கம் இராசையா



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கில் வசித்தவருமான சின்னத்தங்கம் இராசையா நேற்று (13.12.2012) வியாழக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி இராசையாவின் (மலேசியா ஓய்வூதியர்) அன்பு மனைவியும், மகாதேவி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், பத்மநாதன், Dr.மகேசன் ஆகியோரின் மாமியும், சேந்தன், கீதா, ஜெயந்தி, மோகனதாஸ், தயாளினி, நிமலன், தீன தயாளன், அனுராதா, தயாகரன் ஆகியோரின் பேர்த்தியும், துஸ்யந்தன், பிரணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை, வைத்தியலிங்கம், பார்வதிப்பிள்ளை, தம்பையா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (14.12.2012) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

(26790)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள புத்தக விற்பனை நிலையத்துக்கு பெண்பிள்ளை தேவை

அனுபவமுள்ளவர்கள்விரும்பத்தக்கது சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொ.பே:
0776015039,0213008806

(26787)(14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பணியாள் தேவை

தனியார் கல்விநிலையம் ஒன்றுக்கு Clerk ஆகப்பணிபுரிய பெண் பிள்ளை ஒருவர் தேவை.யாழ்.நகரைஅண்டியுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும் (தினமும் 6மணி நேரவேலை) சம்பளம்4000/=

தொ.பே: 0776381371

(C7181)(14)





# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி பரராஜசேகரம்



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடா - ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பரராஜசேகரம் கடந்த (11.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற D.R.O பரராஜசேகரத்தின் அன்பு மனைவியும், நந்தகுமார் (லண்டன்), நிர்மலாதேவி (கனடா), ஜெயக்குமார் (பிரான்ஸ்), கிருஸ்ணகுமார் (கனடா), நந்தினிதேவி (ஆஸ்திரேலியா), ராஜ்குமார் (கனடா), சத்தியகுமார் (கனடா), சாந்தினிதேவி (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும், திருஞானசம்பந்தன் (கனடா), ரதி (பிரான்ஸ்), நளினி (கனடா), தருமராஜா (ஆஸ்திரேலியா), ஷாமினி (கனடா), ஜெயந்தி (கனடா), தனநாயகம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நடராசா, இரத்தினம், மீனாம்பிகை, நாகேஸ்வரி, சுப்பிரமணியம் மற்றும் இராஜேஸ்வரி (இலங்கை), காலஞ் சென்ற சோமசுந்தரம் மற்றும் செல்வராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஷ்ணுகரன் (கனடா), பிரசன்னா, விதுசனா, ஆகாஷ் (பிரான்ஸ்), லக்ஷ்மன், தினுஷன் (கனடா), லக்ஷ்மி, அஸ்வினி (ஆஸ்திரேலியா), அர்ஜீன், அபர்னா (கனடா), சாருபா, சாயிவதனன் (கனடா), நிரோஜா, நிஷான் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜேஇன் (ஆஸ்திரேலியா) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை (12.12.2012) 8911, Woodbine Ave, Markham இல் அமைந்துள்ள Chaple Ridge Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் (13.12.2012) வியாழக்கிழமை ஈமைக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ராஜ்: 4165431976, சத்தி: 4169519024
கிருஸ்ணா: 0014164393284

(26784)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

# BID NOTICE
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified contactors for the following works

| Work / Service Details | Non-refundable Deposit (Rs) (Bid fee) | Security Deposite (Rs) | Appoximate Direct cost of the work (R.s In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| NTS Lecture Hall 2nd floor balance work | 500.00 | 10,000.00 | 0.9 | C9 |
| Construction of NTS student changing room | 500.00 | 12,000.00 | 1.1 | C9 |

Bid forms may be obtain from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Office, Teaching Hospital, Jaffna till 20/12/2012.

Perfected bid should be sealed and mark with the and the name of the work on the top left corner of the envelop and send by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accept till 10.00 am on 21/12/2012 and open immediately thereafter. Bidders or their authorized representatives could be present at the time of opening of bids.

Bids forms may be inspected by the bidders free of charge at the residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
13/12/2012

(c/2175)(6.11)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்க்காணும் வேலைகளுக்கு C9இக்ராட் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| தொ இல | வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | சங்கானை ஆஸ்பத்திரி வீதி புனரமைத்தல் வேலை | 5,250.00 | 1,000.00 |
| 02 | சங்கானை மரக்கறிச் சந்தைக்கு சுற்று மதிலும், முட்கம்பி வேலியும் அமைத்தல் வேலை | 2,500.00 | 500.00 |

கேள்விப்படிவம் வழங்கல் :- 14.12.2012 தொடக்கம் 28.12.2012 மு.ப 10.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றல் :- 28.12.2012 ந.ப12.00 மணி வரை
கேள்வி திறத்தல் :- 28.12.2012 பி.ப 2.30 மணி

1. தலைவர்,வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைக்காக கேள்விகளை கோருகின்றார்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு
3. கேள்விப் பத்திர பணத்துடன் மீளளிக்கப்படாத 12% பெறுமதிசேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விகாரர், அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்க வேண்டும்
6. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை **"தலைவர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**
**14.12.2012.**

**திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன்,**
**தலைவர்,**
**வலி.மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்லிணக்கத்தை நாடும் முனைப்பில் மனங்கொள்வது இனி எப்போது...?

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான பொதுமக்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு ஒன்றில், மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, அரசின் அசமந்தத்தை, அக்கறையின்மையை தொட்டுக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்து கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. அப்போதே அவர் மேற்சொன்ன கருத்தை வெளிப்படுத்தினார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 20 ஆவது கூட்டத் தொடருக்கான காலம் நெருங்கிவரும் வேளையில் பாக்கியசோதி சரவணமுத்துவின் கருத்து மிகவும் ஊன்றிக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசுக்கு அழுத்தமாக அமைந்துள்ள தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாசம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முடிவடைகிறது.

ஐ.நா.தீர்மானத்தை செயற்படுத்துவதில் இலங்கை இதுவரை அடைந்த முன்னேற்றம் குறித்து எதிர்வரும் மார்ச் மாதத்தைய ஜெனிவாக் கூட்டத் தொடரில் பரிசீலனை செய்யப்படும். கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய அமெரிக்காவையும் அமெரிக்க ஆதரவு நாடுகளையும் இலங்கை அரசினால் எந்தளவுக்கு, எந்த வகையில் திருப்திப்படுத்த முடியும் என்பதிலேயே அதற்கு எதிரான அமெரிக்காவின் அடுத்த நடவடிக்கை தங்கி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இத்தகைய நிலையில் தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு காட்டும் அசமந்தப் போக்கு இலங்கைக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தலாம். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வல்ல என்பது பாடசாலை மாணவனுக்கும் தெரிந்ததே. அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் போன்று தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதனையும் ஓர் அடிப்படையாகக் கொள்ளலாம்; அவ்வளவே.

ஆனால் அரசு, ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் காட்டும் அக்கறையை விட அடுத்த ஜெனிவாக் கூட்டத்தில் தனக்கு எதிராக சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் தீர்மானத்தை எவ்வாறு முறியடிக்கலாம் என்பதிலேயே கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. ரஷ்யா, சீனா, கியூபா ஆகிய இலங்கைக்கு மிகவும் நெருக்கமான நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவப் பதவிக்காலம் இந்த ஆண்டு முடிவடைவதால், அவற்றுக்குப் பதிலாக புதிதாகப் பல நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற உள்ளன. இந்த நாடுகளை வளைத்துப் பிடிக்கும் முயற்சியில் - முக்கியமாக ஆபிரிக்காவைச் சேர்ந்த சிறிய உறுப்பு நாடுகளை வளைத்துப் பிடிக்கும் முயற்சியில் இலங்கை அரசு தீவிரமாக இறங்கி உள்ளது.

அந்த நாடுகளுடன் புதிதாக ராஜதந்திர உறவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தூதரகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இடம்பெறும் மீள்குடியேற்றம், மனிதாபிமானப் பணிகள் தொடர்பான விசேட செயல்திட்டங்கள் குறித்து மிகைப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு வழங்கப்பட்டு பிரசாரம் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த மார்ச் மாத ஜெனிவாத் தீர்மானத்தை செயற்படுத்துவதில் இலங்கை அரசுக்கு பூரண விருப்பம் இல்லை. அதனாலேயே, புதிதாக வரக்கூடிய தீர்மானத்தை முறியடிப்பதற்கு அது வியூகம் வகுக்கிறது. போதுமான அளவு உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் இலங்கை தோல்வி அடையுமானால் பேராபத்துக்குள் அது சிக்கிவிடக்கூடும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் மொத்தம் 285 பரிந்துரைகளில், இலங்கை அரசு செயற்படுத்துவதற்கு 132 பரிந்துரைகளை மட்டும் இனம் கண்டு அவற்றையும் செயற்படுத்த 3 மாதங்கள், 6 மாதங்கள், ஒரு வருடம், 2 வருடங்கள், 5 வருடங்கள் என்று கால எல்லை நிர்ணயித்துள்ளது.

அவற்றைச் செயற்படுத்துவதற்குப் பெரும்தொகையான நிதி தேவைப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. நிதி செலவிடாது செயற்படுத்தக்கூடிய பரிந்துரைகளும் உள்ளன. குறுகிய காலத்தில் செயற்படுத்தக்கூடிய பரிந்துரைகளும் உள்ளன. இப்படியானவற்றையாவது இனம் கண்டு அரசு செயற்படுத்த வேண்டும்.

அரசமைப்புக்கான 18ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதிலும், பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவருவதிலும் காட்டப்பட்ட வேகமும் அவசரமும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை விடயத்தில் காட்டப்படாதது இலங்கை அரசின் மன விருப்பம் இன்மையைத் துலாம்பரமாக்குகிறது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக அரசு கூறிக்கொண்டு அதில் இருந்து தூர விலகிச் செல்வதையே இது தொட்டுக்காட்டுகிறது.

தமிழர்களின் வாழ்வுரிமைகளுக்கே வேட்டு வைக்கும் அளவுக்குச் செயற்படும் அதேவேளை, அவர்களை ஆரத் தழுவி, அள்ளி அணைப்பதாகக் காட்டும் வேடம் பூணுவதை அரசு நிறுத்திக்கொண்டு -

தானே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பிரதான பரிந்துரைகளை முழுமையாகவும் விரைந்தும் செயற்படுத்த விரும்பாத போக்குடன் அனைத்துலக நாடுகளை ஏய்க்காட்டும் போக்கை மாற்றி -

உரிய வழித்தடத்தில் - பாதையில் - செல்ல, செயற்பட அரசு மனங்கொள்ளாது இருந்தால், வேறு பல வழிகளால் [illegible] சிக்குண்டு 'மாய' நேரிடும்...!

# போதைவஸ்து பாவனை அதிகரிப்பால் வருடாந்தம் 15,205 கோடி ரூபா நாசம்

கொழும்பு,டிசெ.14

இலங்கையில் போதைவஸ்துகள் பாவனை அதிகரிப்பால் ஆண்டு ஒன்றில் 15 ஆயிரத்து 205 கோடி ரூபா நாசம் செய்யப்படுகின்றது என்று பொலிஸ் போதைப் பொருள் அழிப்புப் பிரிவைச் சேர்ந்த டி.என்.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஹெரோயின் பாவனை தொடர்பாக ஆண்டொன்றில் ஆயிரத்து 600 கோடி ரூபாவும் கஞ்சா பாவனை தொடர்பாக 720 கோடி ரூபாவும் மதுபான வகைகள் தொடர்பாக 5 ஆயிரத்து 880 கோடி ரூபாவும் புகை பொருள்களுக்கு 7 ஆயிரத்து 5 கோடி ரூபாவும் என்றவாறு 15 ஆயிரத்து 205 கோடி ரூபா நாசப்படுத்தப்படுவதாக மேலும் கூறினார்.

15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞரே பெரும்பாலும் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி உள்ளனர்.

வருடாந்தம் இடம்பெறும் இறப்புக்களில் 50 வீதமானவை புகை பிடிப்பதன் காரணமாகவே நிகழ்கின்றன.

அத்தோடு, கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் போதைப் பொருள்கள் சம்பந்தமாக மேல் நீதிமன்றத்தில் 54 வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளில் இளைய தரப்பினரே பெரும்பாலும் குற்றவாளிகளாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தனர்.

பெரும்பாலும் பொதுசன ஊடகங்கள் வெளிப்படுத்தும் தகவல்கள் மூலம் இளைய சந்ததியினரை போதைப் பொருள்களுக்கு அடிமைப்படுத்தி விடுவதற்கு ஏதோ விதத்தில் உந்துதல் ஏற்படுத்தப்படுகிறது.

போதைப் பொருள்கள் சம்பந்தமாக தகவல்களை வெளிப்படுத்துவதில் பொதுசன ஊடகங்களுக்கு பெரியளவில் பொறுப்பு உள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# கலாபூஷணம் விருது வழங்கும் விழா நாளை கொழும்பில்

யாழ்ப்பாணம்,டிசெ.14

இருபத்தி எட்டாவது வருட கலாபூஷண அரச விருது வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தலைமையிலும் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன பங்களிப்புடனும் கொழும்பு 07, நெலும்பொகுண மாவத்தையில் உள்ள ஜோன்டீ சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து இந்த விழாவை நடத்துகின்றன

கலைத்துறைக்கு உன்னதமான சேவையாற்றிய கலைஞர்களைக் கௌரவிக்கும் இந்த விழாவில் கலந்துகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் விஜித் கனுகல, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் வை.எல்.எம்.நவவி, புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு செயலாளர் எம்.கே.பி.திசாநாயக்க, கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வசந்த எக்கநாயக்க ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

# முதலீட்டாளரை ஊக்குவிக்கும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.14

இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை வவுனியா றோயல் கார்டின் ஹோட்டலில் நடைபெறவுள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் முதலீட்டையும் உற்பத்தியையும் அதிகரிக்கும் நோக்கை மையப்படுத்தி இந்த முதலீட்டாளர் வலுவூட்டல் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்தக சம்மேளனத்தின் உதவியுடனும் இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் முதலீட்டாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முதலீட்டாளர் வலுவூட்டல் நிகழ்வில் உள்ளூர் வளங்கள் மற்றும் உற்பத்தி வாய்ப்புக்களைப் பட்டியல்படுத்தி அவற்றின் நடைமுறைச் சாத்தியப்பாடுகளை ஆராய்தல், இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்திக் கடன்களை அறிமுகப்படுத்தல், வியாபார மற்றும் கம்பனி பதிவு நடைமுறைகள் மற்றும் நிதியீட்டல் நடைமுறைகள் சம்பந்தமாக அறிவூட்டல், முதலீட்டுக்கான தடைகள் மற்றும் அவற்றிற்கான சாத்தியப்பாடுடைய தீர்வுகள் சம்பந்தமாக ஆராய்தல் போன்ற விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை முதலீட்டுச் சபை, வங்கியாளர்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறி வவுனியா மாவட்டத்தின் உற்பத்திப் பெருக்கத்துக்கு பங்களிக்குமாறு இலங்கை மத்திய வங்கி கேட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள சிறிய முதலீட்டாளர்களை பிரதேச ரீதியாக ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவித்தார். (ம-13)

# சிறைக் கைதிகளை தரம் பிரிக்க ஏற்பாடு

கொழும்பு,டிசெ.14

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து அனைத்து சிறைக் கைதிகளும் வெவ்வேறாகத் தரம் பிரிக்கப்பட்டு அவர்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளில் மாத்திரம் தங்கவைக்கப் படவுள்ளனர்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சு இவ்வாறு தீர்மானித்துள்ளது.

அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் பணிப்புரைக்கு அமைய இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக 18 ஆயிரம் பேர் வரையிலான சிறைக் கைதிகள் தரம் பிரிக்கப்படவுள்ளனர். அத்துடன் ஐந்து ஆண்டு காலத்துக்கு மேலாக நன்னடத்தை உள்ளோராகக் கணிக்கப்பட்டுள்ள இரண்டாயிரத்து 700 சிறைக் கைதிகள் முகாம் மன்னிப்பு என்பதன் கீழ் பணிகள் சார்ந்த 10 முகாம்களுக்கு மாற்றப் படவுள்ளனர்.

இந்த முகாம் மன்னிப்பின் மீது சிறைத் தண்டனைக் காலம் வருடத்துக்கு ஒரு மாதம் என்றவாறு குறைக்கப்படுகிறது.

பயங்கரமான குற்றவாளிகள் என்ற தரத்தின் கீழ் ஆயிரம் பேர் வரையிலான சிறைக் கைதிகளை தற்போது திட்டமிடப்பட்டுள்ளமைக்கு அமைய மட்டக்களப்பு மாந்தை களப்புக்கு அனுப்பிவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 6 ஆயிரம் பேர் வரையிலான போதைப் பொருள் குற்றவாளிகளை பள்ளேகல உள்ளிட்ட புனர்வாழ்வு முகாம்களில் தங்க வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அபராதத் தொகையைச் செலுத்த வசதியில்லாது சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் ஆயிரத்து 500 பேரை அபராதத் தொகைகளைச் செலுத்தி விடுதலை செய்து விடுவதற்கும் பிணைத் தொகைகளைச் செலுத்த இயலாது தண்டனைகளை அனுபவித்து வரும் 800 பேரை நீதி அமைச்சுடன் கலந்தாலோசித்து விடுதலை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலைகளில் 27 ஆயிரம் பேர் வரையிலான கைதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைக் கைதி ஒருவர் தொடர்பாக அரசு நாளொன்றுக்கு 372 ரூபாவைச் செலவு செய்கிறது.- என்றும் கூறப்பட்டது. (ம-22)

# மூத்த படப்பிடிப்பாளருக்கு கலாபூஷணம் விருது

யாழ்ப்பாணம்,டிசெ.14

குடாநாட்டின் மூத்த பத்திரிகைத் துறைப் படப்பிடிப்பாளர் சங்கரம்பர் கதிரவேலு இந்த ஆண்டுக்கான கலாபூஷணம் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கலை இலக்கியத் துறைகளில் அரும்பணி புரிவோருக்காக கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து வழங்கும் இந்த அரச விருதுக்கு மூத்த படப்பிடிப்பாளரான இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளை சனிக்கிழமை கொழும்பு ஜோன்.டீ.சில்வா ஞாபகார்த்த கலை அரங்கில் வைத்து இந்த விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரம் இந்திய வீடுகள்

## மூன்றாம் கட்டத்தில் ஒதுக்கீடு

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மூன்றாம் கட்டமாக மூவாயிரம் இந்திய வீடுகள் அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகத்துக்கும் இந்த வீடுகள் பகிரப்படவுள்ளன.

ஏற்கனவே மாதிரி வீட்டுத் திட்டமாக 250 வீடுகளும் முதலாம் கட்டத்தில் 560 வீடுகளும் இரண்டாம் கட்டத்தில் 1600 வீடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் பகிரப்பட்டுள்ளன.

**இந்திய அரசின் வீட்டுத்திட்ட உதவியின் கீழ் மூன்று கட்டங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 410 வீடுகள் அமைகின்றன.**

ஏற்கனவே மாதிரி, முதலாம் கட்ட வீட்டுத் கட்டப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் இரண்டாம் திட்டத்துக்கான வீடுகள் ஜனவரி மாதத்தில் பகிரப்படவுள்ளன. அத்துடன் மூன்றாம் திட்ட வீட்டுத் திட்டத்தின் வேலைகள் மார்ச் மாதத்தில் தொடங்கும் என்று மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் கிளி நொச்சி மாவட்டத்தில் வீட்டு நெருக்கடி தொடர்பான பெரியளவு பிரச்சினை தீரும் எனவும் அடுத்தடுத்த கட்டங்களில் ஏனையோருக்கும் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ-18)

## மன்னாரில் கிறிஸ்மஸ் நிகழ்வு



மன்னார்,டிசெ.14

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட தலைமைக் காரியாலயம் ஏற்பாடு செய்திருந்த கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் மன்னார் அரச பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இதன் போது, அரச உடைமைகள் மற்றும் வர்த்தக முயற்சி அமைச்சர் தயாசிறித்த திசேரா, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு குறித்த கரோல் நிகழ்வைப் பார்வையிட்டனர். கரோல் நிகழ்வைப் பார்வையிட்ட சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (த-12)

### இயக்குநர் சபை தெரிவு

கிளிநொச்சி, கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி புளியம்பொக்கணையில் உள்ள அதன் தலைமையகத்தில் இதுதொடர்பான நிகழ்வு இடம்பெற்றது.


மீள்குடியேற்றம் இடம்பெற்று முதற்தடவையாக இந்த இயக்குநர் சபை கரைச்சி வடக்குக்கு எனத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

## மாற்றுத் திறனாளிகளை மகிழ்விக்கும் நிகழ்வு

'ஹன்டிக்கப்' இன்ரநாஷனல் நிறுவனத்தினரால் வவுனியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்டத்தில் இருக்கும் மாற்றுத் திறனாளிகள் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

விளையாட்டு திட்ட முகாமையாளர் ஸ்ரீவ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் எம்.கமலதாசன் கலந்து சிறப்பித்தார். (த-422)



கிளிநொச்சிப் பகுதியில் ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன. (ஐ-18)

## மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள்

முல்லைத்தீவு செயலகத்தில் ஆரம்ப நிகழ்வு

நெடுங்கேணி,டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளன.

அண்மையில் இதற்கான ஆரம்ப நிகழ்வொன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஜ் தலைமையில் இடம்பெற்றது. ஏற்றுமதி, இறக்குமதி, சிறுகைத்தொழில் அமைச்சர் றெனோல்ட் கூரே இதில் கலந்து கொண்டார்.

மேலும் 100 பயனாளிகளுக்கு 100 மரமுந்திரிகைக் கன்றுகளையும் அவர் வழங்கி வைத்தார்.

மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனப் பொது முகாமையாளர் கே.பி.ஜெயக்கொடி ஆராய்ச்சி மற்றும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் ப.சுரேந்தினி ஆகியோர் மரமுந்திரிகைச் செய்கை தொடர்பான விளக்கங்களை வழங்கினர்.

**100 பயனாளிகளுக்கு 100 மரமுந்திரிகைக் கன்றுகள் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. ஏற்றுமதி இறக்குமதி சிறுகைத்தொழில் அமைச்சர் இதில் கலந்துகொண்டார்.**

மேலும் அவர்களால் மரமுந்திரிகைக் கன்றுகளும் நடப்பட்டன.

இந்த நிகழ்வில் கரைதுறைப்பற்று உதவிச் செயலர் ஆர்.குருபரன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ரி.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)

## வெளிமலை மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

மன்னார், டிசெ 14

மன்னார் வெளிமலைக் கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

ஐ.ஐ.ஆர்.ஓ நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வணிக கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்த கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் குறித்து கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு இந்தக் கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து இறுதிப் போரின் பின்னர் மீளக் குடியேறியுள்ள நிலையில் நீண்டகாலமாக குடிதண்ணீருக்கு நீண்ட தூரம் சென்று அவதியுறும் நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் குழாய் மூலம் இவர்களுக்கு குடிதண்ணீரைப் பெற்று கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-12)

## சிறுவர் இல்லங்கள் திடீர் பரிசோதனை

யாழ்ப்பாணம், டிசெ. 14

தேசிய ரீதியில் நாடெங்கிலுமுள்ள சிறுவர் இல்லங்களைப் பரிசோதனை செய்யும் திட்டத்தின்படி வவுனியா மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 6 சிறுவர் இல்லங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா மாவட்ட பிரிவினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அதன் அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார்.

**14 சிறுவர் இல்லங்களின் தரநிலை குறித்து ஆராய்வு.**

வவுனியா மாவட்டத்தில் 14 சிறுவர் இல்லங்கள் உள்ளன. அவற்றின் சுகாதாரம் மற்றும் அங்குள்ளவர்களது பாதுகாப்புத் தொடர்பில் பரிசோதனை நடைபெற்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## கட்டாக்காலி நாய்களால் கிளிநொச்சியில் தொல்லை

அக்கராயன், டிசெ. 14

கிளிநொச்சி நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதால், வீதி விபத்துக்களும், விசர் நாய்க்கடிக்கு ஆளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

நகரப்பகுதி வீதிகளில் பெரும் எண்ணிக்கையான நாய்கள் அலைந்துதிரிகின்றன.

ஏ-9 வீதியில் மட்டுமன்றி உட்புற வீதி களிலும் நாய்களின் தொல்லை அதிகரித்திருப்ப தாக மக்கள் விசனம் தெரி விக்கின்றனர்.

வீதிகளின் குறுக்கு மறுக்காக நாய்கள் அலைந்து திரிவதால் காலை வேளைகளில் அடிக்கடி வீதி விபத்துக் கள் இடம்பெறுகின்றன.

இதனால் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் விசர் நாய்களும் வீதியால் செல்பவர்களை இரவு வேளைகளில் கலைத்துச் சென்று விசனம் கடிக்கின்றன.

அத்துடன் ஒருவகை நோய்த்தாக்கத்துக்கு உள்ளான நிலையில் நாய்கள் வீதிகளில் அலைந்து திரிவதால், அது மக்களுக்கும் தொற்று நோய்களை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சூழலைக் கருத்தில் கொண்டு கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், நாய்களை வீட்டில் வளர்ப்போர் இது குறித்து முக்கிய நடைமுறைகளைப்பின்பற்ற வலியுறுத்த வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)



## நகரிலேயே காணி வேண்டும்

அக்கராயன், டிசெ. 14

கிளிநொச்சிக் குளத்தின் வான் பகுதியில் குடியிருக்கும் 7 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் அற்று வாழ்ந்து வருகின்றன. உரிய இடத்தில் காணி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டும் தமக்கு எந்தப் பயனும் கிடைக்க வில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமக்கு அக்கராயன் யூனியன்குளம் பகுதியில் காணி தருவதாக அதிகாரிகள் கூறியதாகவும், தாம் அதனை மறுத்துவிட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்கு தொழில் வசதிகள் நகரப் பகுதியிலேயே இருப்பதால் நகரை அண்டிய இடத்தில் காணி தரவேண்டும் எனவும் அவர்கள் கோருகின்றனர்.(ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி நாய்களும் விரைவில் பிடிக்கப்படும்

**வலி.கிழக்கு பிரதேச சபை நடவடிக்கை**

யாழ்ப்பாணம், டிசெ.14

கட்டாக்காலிகளாக வீதிகளில் நடமாடும் நாய்களைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது கட்டாக்காலிகளின் நடமாட்டம் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகிறது.

இவ்வாறு வீதிகளில் அலையும் நாய்களால் மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவற்றால் விபத்துக்களும் அதிகரித்துக் காணப்படுவதுடன் உயிர் இழப்புக்கள் ஏற்படும் நிலைமையும் காணப்படுகிறது.

உரிய பராமரிப்பற்ற நாய்கள் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் வீதியால் செல்வோரைக் கடித்துக் குதறியும் வருகின்றன.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பிரதேச மக்கள் வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்க வேண்டும்.

வீதிகளில் திரியும் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு உரிமையாளரிடம் தண்டம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று கூறினார். (ம-17)



சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற எய்ட்ஸ் தினநிகழ்வில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பரிசோதகர் பரிசில் வழங்குகிறார். (ம-9)

# மழை பெய்யாவிட்டால் நெற்பயிருக்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

இன்னும் ஒரு வார காலத்துக்குள் மழை பெய்யாவிட்டால் குடாநாட்டில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் போக நெற்செய்கை பாதிக்கப்படும் என விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நிலவும் வறட்சி காரணமாகத் தாழ்ந்த வயல்களில் தண்ணீர் வற்றி அவை சதுப்பு நிலமாகவே காணப்படுகின்றன.

**வறட்சி காரணமாகத் தாழ்ந்த வயல்களில் தண்ணீர் வற்றி அவை சதுப்பு நிலமாகவே காணப்படுகின்றன.**

இதனை விட மேட்டு நில வயல்களில் தண்ணீர் முற்றாக வற்றியமையால் நிலத்தில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இன்னும் குறைந்தது ஒரு வார காலத்துக்குள் மழை பெய்ய வேண்டும்.

இல்லையேல் நெற்பயிர்கள் முழுமையாகப் பாதிப்படையும் நிலை ஏற்படும்.

தற்போது வழமையான மாரி மழையை நெற்பயிர்ச் செய்கையாளர்கள் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர்.

அனேகமான வயல்களில் தண்ணீர் வற்றியதால் விவசாயிகள் உரப்பசளைகளை கூட விசிற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.- என்றார். (த-17)

# சேதமடைந்துள்ள பாலத்தை திருத்துமாறு கோரிக்கை

**உயிராபத்தை ஏற்படுத்தலாம் எனவும் அச்சம்**

வலி.தென்மேற்கு, டிசெ.14

கட்டுடை அரசடிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் சேதமடைந்த நிலையிலிருக்கும் பாலத்தை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையிடம் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் உதவித் தலைவர் எஸ்.சிவகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பாலத்தினூடாக கனரக வாகனங்கள் செல்வதைத் தடைசெய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கட்டுடை பகுதியிலுள்ள அரசடிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் பல வருடங்களுக்கு முன்பு பிரதேச சபையால் அமைக்கப்பட்டுள்ள பாலம் சேதமடைந்த நிலையில் இருப்பதால், மக்கள் அச்சத்துடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள், ஆலயத்தைச் சூழவுள்ள விவசாய நிலங்களுக்குச் செல்லும் விவசாயிகள் உட்பட அந்தப் பகுதியில் வசிக்கும் 300 குடும்பங்களும் இந்தப் பாதையையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பாலம் உடைந்த நிலையிலிருப்பதால் மக்கள் பாலத்தில் பயணம் செய்ய அஞ்சுகிறார்கள். இது குறித்து ஏற்கனவே அறிவித்திருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே பாலம் முற்றாகச் சேதமடைந்து போக்குவரத்துத் துண்டிக்க முன்பு பாலத்தை விரைவாகச் சீரமைக்குமாறு தலைவர் பிரதேச சபையிடம் கேட்டுள்ளார்.

இதேவேளை, கனரக வாகனங்கள் செல்லக் கூடிய வகையில் பாலம் அமைக்கப்படாமையால் அவை இந்தப் பாலத்தின் ஊடாகச் செல்வதற்குத் தடை விதிக்குமாறும் மேலும் கேட்டுள்ளார். (ம-115)

# அங்காடி வியாபாரிகளுக்கு வேம்படிச் சந்தியில் இடம்

**ஒதுக்கீடு செய்ய யாழ். மாநகர சபை நடவடிக்கை**

யாழ்ப்பாணம், டிசெ.14

அங்காடி வியாபாரிகளின் நலனைக் கருத்தில் கொண்டு வேம்படிச் சந்தியில் தனியார் காணி ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் 96 அங்காடி வியாபாரிகள் சுமூகமாகத் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்காடி வியாபாரிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதி விரைவில் வியாபாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, முனீஸ்வரர் வீதியில் உள்ள கடைகள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் வந்துள்ளன.

போக்குவரத்துக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரது கடைகள் பறி முதல் செய்யப்படும்.- என்று அவர் மேலும் கூறினார். (ம-7)

# காரைநகர் பிரதேச சபையில் போதிய ஆளணி இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.14

காரைநகர் பிரதேச சபையில் போதிய ஆளணி வளம் இல்லாமையால் சபையின் அத்தியாவசியப் பணிகளைக் கூட சீராக முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக சபையின் உப தலைவர் ச.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

தற்போது சபையில் 18 வரையான பணியாளர்களே உள்ளனர்.

ஆளணிப் பற்றாக்குறை உள்ளபோதும் அது இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை. இதனால் சபையின் சகல பணிகளிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக சுத்திகரிப்பு, குடிதண்ணீர் விநியோகம், சுகாதாரம் போன்ற அத்தியாவசியப் பணிகளுக்குக் கூடப் போதிய பணியாளர்கள் இல்லை.

சபையின் ஆளணிக்கு ஏற்றவாறு தொழிலாளர்களைப் புதிதாக நியமிக்குமாறு உள்ளூராட்சித் திணைக்களத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.- என்றார். (த-17)

# ஒரு வருடத்தின் பின் சிக்கினான் திருடன்

வலி.தென்மேற்கு, டிசெ.14

பட்டப்பகலில் வீட்டில் எவருமில்லாத சமயம் பார்த்து கதவை உடைத்து உள்ளே நுழைந்து சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய இளைஞர், ஒரு வருடத்துக்குப் பின்பு பொலிஸார் விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்டார்.

திருடப்பட்ட நகைகளில் உருக்கிய நிலையில் இருந்த தாலிக் கொடியை மட்டும் கைப்பற்றிய பொலிஸார் இளைஞரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் இவரை 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்தவருடம் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி பட்டப்பகலில் வீட்டில் எவரும் இல்லாத சமயம் பார்த்து ஒரு வீட்டுக்குள் புகுந்த இளைஞர் ஒருவர் அங்கு பாதுகாப்பாக வைத்திருந்த தாலிக் கொடி உட்பட சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகளை திருடியிருந்தார்.

இந்தத் திருட்டுப் பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து புலன்விசாரணையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு ஒரு வருடத்துக்குப் பின் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இன்ஸ்பெக்டர் மல்ஹமே தலைமையில் சென்ற கான்ஸ்டபிள்கள் ஹரிச்சந்திர அதிகாரி, சமரசிங்க, வசீபரன் ஆகியோர் நவாலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்தபோது திருட்டு அம்பலத்துக்கு வந்தது.

திருடப்பட்ட நகைகளில் உருக்கிய நிலையிலிருந்த தாலிக்கொடியை மட்டும் கைப்பற்றிய பொலிஸார் இளைஞரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் இவரை 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (த-115)





தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மருத்துவ முகாமில் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன. (ம-9)

# குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், டிசெ.14

வீதியில் சென்ற குடும்பஸ்தர் இனந்;தெரியாதோரால் தாக்கப்பட்ட சம் பவம் நேற்றுமுன்தினம் இரவு கல்வயல் பகுதியில் இடம்பெற்றது.

பலத்த காயங்களுக்கு ஆளான கல்வயல் சித்தன் மாவடியைச் சேர்ந்த சோமபாலன் குணரூபன் (வயது-31) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் (ம-9)

# விடுதலையானவருக்கு மீண்டும் மறியல்

வலி.தென்மேற்கு,டிசெ.14

திருட்டுச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் இருந்து வெளியே வந்த இளைஞர் திருட்டுச் சம்பந்தமாக மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு பட்டப்பகலில் வீட்டில் எவருமில்லாத சமயம் பார்த்து சங்குவேலியில் உள்ள வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்த பெறுமதி வாய்ந்த இலத்திரனியல் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார்.

இந்தத் திருட்டு [illegible] பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தத் திருட்டு சம்பந்தமாக நான்கு மாதங்களுக்குப் பின்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இன்ஸ்பெக்டர் மல்ஹமே தலைமையில் சென்ற பொலிஸார் திருட்டு சம்பந்தமாக விளக்கமறியலிலிருந்து வெளியே வந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்த போது திருட்டு அம்பலத்துக்கு வந்தது.

குறித்த நபரை பொலிஸார் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சீர்திருத்த பிரேரணைகளை நிறைவேற்ற எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை

## மத்திய அரசு வேண்டுகோள்



டில்லி, டிசெ.14

பொருளாதார சீர்திருத்த பிரேரணைகளை நிறைவேற்ற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்ததாவது:-

காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீட்டை 49 வீதமாக உயர்த்த வகை செய்யும் பிரேரணை, வங்கி சட்ட திருத்த பிரேரணை உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரேரணைகளை நடப்பு குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்ற மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

மத்திய அரசின் பொருளாதார சீர்திருத்த பிரேரணைகளை நிறைவேற்ற எதிரணியினர் ஒத்துழைப்பு வழங்குவர்.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை மாநில அரசுகள் மீது திணிக்க மாட்டோம். பிரேரணைகளை நிறைவேற்றுவதற்காக இரு அவைகளின் எதிர்க்கட்சி தலைவர்களான சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் அருண் ஜெட் லியிடம் நாம் நேரில் சந்தித்துப் பேசியுள்ளோம்- என்றார்.

இதனிடையே சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பாரதீய ஜனதாவும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் கைகோர்த்துள்ளன. டில்லியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பாரதீய ஜனதா மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில், இந்தியாவில் கிளைகளை ஆரம்பிக்க வால்மார்ட் நிறுவனம் ரூ.125 கோடி இலஞ்சம் கொடுத்த விவகாரம் நாடாளுமன்றத்தில் இன்றும் பூகம்பத்தை ஏற்படுத்தும் என்று தெரிகிறது. அதுமட்டுமன்றி மாயாவதி வலியுறுத்தும் இட ஒதுக்கீடு பிரேரணையும் மாநிலங்களவையில் வெடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பிறந்த சிசுவின் கைவிரல்களை கடித்துக் குதறிய பூனை



ஆந்திராவில் மகப்பேறு மருத்துவமனை ஒன்றில் பிறந்த குழந்தையின் கை விரல்களை பூனை கடித்துக் குதறியுள்ளது.

ஆந்திராவின் மெகபூப் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மமதா, வீரேஷ் தம்பதியினர். கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு மெகபூப் நகரில் அரசு மகப்பேறு மருத்துவமனையில் மமதாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

நேற்று முன்தினம் குழந்தையின் மூன்று கைவிரல்கள் துண்டிக்கப்பட்டிருந்தமையைக் கண்டு தாய் மமதா அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகத்திடம் கூறினார். பின்னர் குழந்தையின் கைவிரல்களை பூனை கடித்துக் குதறியிருப்பதும் முகம், மார்பு பகுதிகளில் கீறல் காயம் இருந்ததும் தெரியவந்தது.

இதுகுறித்து மெகபூப் நகர் பொலிஸில் மமதா முறைப்பாடு தெரிவித்தார். பொலிஸார் மருத்துவமனை நிர்வாகத்தின் மீது, பணியின்போது அலட்சியம் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதா என்பது குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# குழந்தை தொழிலாளர் 14 பேர் தொழிற்சாலையில் இருந்து மீட்பு

டில்லி, டிசெ.14

ஜஹாங்கீர்புரி பகுதியில் உள்ள ஒரு வளையல் தொழிற்சாலையில், கடத்திச் செல்லப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர் என்று உதவி மாவட்ட ஆட்சியாளர், பொலிஸ் மற்றும் தொழிலாளர் நலத் துறைக்கு 'பச்பன் பச்சோ அந்தோலன்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று தகவல் கொடுத்தது.

அதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை துணை மாவட்ட ஆட்சியாளர் ராஜிந்தர் குப்தா தலைமையில், தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார், அந்தப் பகுதியில்

**அனைவருக்கும் தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.**

உள்ள குறிப்பிட்ட அந்த வளையல் தொழிற்சாலைக்கு சென்று சோதனை போட்டனர். அப்போது அங்கு 6 முதல் 15 வயதுக்குட்பட்ட 14 குழந்தைகள் உயிருக்கு ஆபத்தான வேலைகளை செய்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டுபிடித்தனர். விசாரணையில் அவர்கள் அனைவரும் பீகாரில் உள்ள பல்வேறு கிராமங்களில் இருந்து கடத்தி வரப்பட்டவர்கள் என்பது தெரிந்தது. அந்த குழந்தைத் தொழிலாளர்களை பொலிஸாரும் மற்றும் அதிகாரிகளும் மீட்டனர். மீட்கப்பட்ட சிறுவர்கள் அனைவரது உடல் நிலையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருந்தது.

அனைவருக்கும் தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். இதுகுறித்து வழக்கு பதிவு செய்த பொலிஸார் விசாரித்து சிறுவர்களை கடத்தி வந்தவர்கள் தொடர்பில் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (வ)

# தொலைபேசி ஒட்டுக் கேட்புக்கு புதிய கண்காணிப்பு முறை

## மத்திய அரசு அறிவிப்பு

டில்லி,டிசெ 14

தொலைபேசி உரையாடல் மற்றும் இணையத் தள சேவையை சட்டப்படி ஒட்டு கேட்பதற்காக மையப் படுத்தப்பட்ட கண்காணிப்பு முறை செயற்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் மிலிந்த் தேவ்ரா மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு முறைக்காக ரூ.400 கோடி ஒதுக்கப்பட் டுள்ளது. இதுதொடர்பான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக இதுவரை ரூ.76.86 கோடியும், திட்டத் தின் செயற்பாட்டுக்காக ரூ.4.25 கோடியும் செலவிடப் பட்டுள்ளது.

இந்தமுறையின் கீழ், குறிப்பிட்ட தொலைபேசி எண்ணில் நடைபெறும் உரையாடலை மின்னணு முறையில், தேவைப்படும் அரச நிறுவனமே பதிவு செய்து கொள்ள முடியும்.

சம்பந்தப்பட்ட தொலை பேசி நிறுவன ஊழியர்களின் தலையீடு தேவைப்படாது. இதனால் இரகசியம் மேலும் பாதுகாக்கப்படும்-என்றுள்ளது.

# குஷ்பு அணிந்த சேலையில் இந்துக் கடவுள்கள் புதிய சர்ச்சை



டில்லி, டிசெ.14

இந்து மத கடவுள்களான ராமர், கிருஷ்ணர் மற்றும் ஆஞ்சநேயரின் படம் பதித்த சேலையை அணிந்ததற் காக நடிகை குஷ்பு மன் னிப்புக் கேட்க வேண்டும் என்று இந்து மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்து மக்கள் கட்சியின் சென்னை மண்டல தலைவர் முத்து ரமேஷ், நடிகை குஷ்பு கடவுள்களை தொடர்ந்து அவமதித்து வருகிறார்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற தெலுங்கு பட விழா ஒன்றில் இந்துக் கடவுள் படங்கள் அச்சிட்ட சேலை அணிந்து பங்கேற்றுள்ளார்.

அவரது சேலைக்கரையில் பிரமச்சாரியான ஆஞ்சநேயர், யோகங்களின் தலைவர் கிருஷ்ணர், ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தை போதித்த ராமர் போன்ற இந்துக் கடவுள் படங்கள் உள்ளன. அதை மார்பில் போர்த்திக் கொண்டு விழாவில் பங்கேற்றுள்ளார்.

இது இந்துக் கடவுள்களை அவமதிப்பது ஆகும். இந்தக் குற்றத்தை அவர் தெரியாமல் செய்திருந்தால் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும். தெரிந்தே செய்திருந்தால் குஷ்புக்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம் என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக குஷ்பு, ருத்ராட்ச மாலையில் பெரிய பிளாஸ்ரிக் தாலியைக் கோர்த்து அணிந்து வந்து சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூக்குத் தண்டனைக் கைதிகள் 477 பேர் இந்தியச் சிறைகளில்



டில்லி, டிசெ.14

இந்தியச் சிறைகளில் தூக்கு கயிறை நோக்கி காத்திருக்கும் கைதி களின் எண்ணிக்கை 477 என ராஜ்யசபாவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி இந்தமாதம் தொடக்கம் தற்போது வரையிலான நிலவரப்படி உ.பி., மாநில சிறைக்கைதிகளில் சுமார் 174 கைதிகள் தூக்கு கயிறை எதிர்நோக்கி யுள்ளனர். கர்நாடக மாநிலத்தில் 61 கைதிகளும் காத்திருக்கின்றனர். மும்பை தாக்குதலில் உயிருடன் பிடிபட்ட அஜ்மல் கசாப் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தூக்கிலிடப்பட்டான். அவன் உயிருடன் இருந்த வரையில் தங்க வைக்கப்பட்டிருந்த சிறையில் தற்போதுள்ள நிலவரப்படி சுமார் 50 கைதிகளின் எண்ணிக்கையுடன் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. தொடர்ந்து பீகார் மாநிலம் 37 கைதிகளுடன் நான்காவது இடத்தை பிடித்துள்ளது. மேலும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்ற வளாகத்தில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்ட அப்சல் குருவுடன் இணைந்து 24 கைதிகள் டில்லி மாநிலத்தில் காத்திருக்கின்றனர்.

நாட்டின் மிகப்பெரிய மாநிலங்களுள் ஒன்றான ஆந்திரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் முறையே மூன்று மற்றும் நான்கு கைதிகள் தூக்கு கயிறை எதிர் நோக்கி காத்திருப்பதாக ராஜ்ய சபாவில் அளித்துள்ள பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ள வந்த அவுஸ்திரேலிய துணைப் பிரதமர் வேய்னி சுவானை மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கைலாகு கொடுத்து வரவேற்கின்றார்.

# வட கொரியாவின் ஏவுகணைச் சோதனை கொரிய தீபகற்பத்தில் அமைதி குலையும்

## இந்தியா எச்சரிக்கை

வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை தேவையற்றது என்றும் இதனால் கொரிய தீபகற்பத்தில் அமைதி குலையும் என்று இந்தியா எச்சரித்துள்ளது.

ஐ.நா. சபை, வட கொரியாவுக்கு ஏவுகணைச் சோதனைகளில் ஈடுபட தடை விதித்துள்ள நிலையில் வட கொரியா [illegible]-3 என்ற ஏவுகணையை ஏவியதாக தகவல் வெளியாகியது.

பியாங்கன் மாகாணத்தில் உள்ள ஷோகே விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வாங் மியாங்சாங்-3 என்ற இந்த ஏவுகணை ஏவப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவித்ததாவது:-

வடகொரியா விண்ணுக்கு ஏவுகணை செலுத்தியமை ஐ.நா. சபையின் தீர்மானத்தை மீறும் வகையில் அமைந்துள்ளது. இது போன்ற செயல்களை வட கொரியா தவிர்க்க வேண் டும்.

இதுதவிர ஜப்பான் மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளும் இந்த ஏவுகணைச் சோதனையை ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலியின் புதிய பிரதமராக ஜனாதிபதி ட்ரயோர்



மாலியின் புதிய பிரதமராக அந்நாட்டின் இடைக்கால ஜனாதிபதி டியன்கவுன்டா ட்ரயோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஷேக் மொடிபோடயரா பிரதமர் பதவியிலிருந்து விலகி 24 மணித்தியாலங்கள் கடந்துள்ள நிலையில் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் தாம் கவனம் செலுத்தி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரால் கடந்த ஏப்ரல் மாதத்தில் மாலியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அதன் பின்னர் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மீண்டும் இராணுவத்தின் தலையீடுகள் அரசாங்கத்திற்குள் அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது.

## அணு ஆயுதங்களை அதிகரிக்கிறது பாக்.

### அமெரிக்க ஆய்வறிக்கையில் தகவல்

அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பாகிஸ்தானின் இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்து வருவதாக அமெரிக்காவைச் சேர்ந்த இராணுவத்துறை ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

'ஸ்டிம்சன் இன்ஸ்டிட்டியூட்' எனும் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்துள்ளது. பாகிஸ்தானில் அணு ஆயுதத் திட்டங்கள் அனைத்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அணு ஆயுதத்தை அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக பயன்படுத்தக்கூடிய



வலிமையான கருவியாக அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் கருதுவதே இதற்கு காரணம்.

பாகிஸ்தான் இருப்பு வைத்துள்ள அணு ஆயுதங்களுக்கு ஏற்ப, இந்தியாவும் அணு ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் மேற்கொள்ளுமானால் உலகநாடுகளின் கண்டனங்களை எதிர்கொள்வதுடன், தனிமைப்படவும் வாய்ப்புள்ளது.'' என்றுள்ளது.

## மண்டேலாவின் உடல்நிலையில் முன்னேற்றம்

நுரையீரல் தொற்றுக் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் உடல்நிலை சீராக உள்ளது என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மண்டேலாவின் உடல் நிலை பற்றி அதிகாரபூர்வ தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் தென்னாபிரிக்க ஜனாதிபதி செய்தித்தொடர்பாளர் மேக் மகராஜ், ''மண்டேலா நுரையீரல் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். தற்போது உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது''- என்றார்.

## ஆஸ்திரேலிய தேர்தலில் களமிறங்கும் அசாஞ்சே



2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய தேர்தலில் போட்டியிடப் போவதாக விக்கிலீக்ஸ் நிறுவுநர் யூலியன் அசாஞ்சே தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் அசாஞ்சே.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அசாஞ்சே மீது சுவீடனில் பாலியல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் அசாஞ்சே தற்போது பிரிட்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்தநிலையில் 2013 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் தேர்தலில் செனட் உறுப்பினர் பதவிக்கு போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.

''விக்கிலீக்ஸ் என்ற பெயரில் கட்சி ஒன்று உருவாக்கப்படும். விக்கிலீக்ஸ் இணையத்தை விரும்பும் 1.7 மில்லியன் உறுப்பினர்களும், 2.1 மில்லியன் பேஸ்புக் ஆதரவாளர்களும், ஆஸ்திரேலியாவில் தனக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்ய முன்வருவார்கள்'' என்று தெரிவித்துள்ளார் அசாஞ்சே.

நியூ சவுத் வேல்ஸ் அல்லது விக்டோரியா மாகாணத்தில் யூலியன் அசாஞ்சே போட்டியிடக்கூடும் என ஆஸ்திரேலிய ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

### வடகொரியாவின் ஏவுகணை சோதனை முயற்சி

# உலக அமைதிக்கு ஆபத்து

**நேற்றுமுன்தினம் வடகொரியா நீண்ட தூரம் சென்று இலக்கைத் தாக்கும் ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதனை செய்தது.**



### ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம்

வடகொரியாவின் ஏவுகணை சோதனை முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நீண்ட தூரம் சென்று இலக்கைத் தாக்கக்கூடிய ஏவுகணையை வெற்றிகரமாக சோதனையிட்டதாக வடகொரியா அறிவித்திருந்தது. ஐக்கிய நாடுகள் சபை இதனைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

''வடகொரியாவின் ஏவுகணை சோதனை முயற்சி உலகின் பாதுகாப்பைக்கேள்விக் குறியாக்கும். வடகொரியா ஏவுகணை சோதனை முயற்சிகளை நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. சபை ஏற்கனவே வலியுறுத்தியிருந்தது. உலக நாடுகள் பலவும் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. வடகொரியாவின் ஏவுகணை சோதனை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் விதிகளை மீறும் செயலாகும்.'' என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடகொரியாவின் ஏவுகணை சோதனை தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் ஏவுகணை சோதனை முயற்சிக்கு அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. வடகொரியா ஏவுகணைச் சோதனையைமேற்கொண்டதை அடுத்து ஜப்பான் மற்றும் தென் கொரியா தமது இராணுவ கட்டமைப்புகளைக் பலப் படுத்தப் போவதாக அறிவித்துள்ளன.

## பனிமூட்டத்தால் லண்டனில் விமானங்கள் இரத்து

அதிக பனி மூட்டம் காரணமாக லண்டன் ஹீத்ரு விமான நிலையத்திலிருந்து புறப்படும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

லண்டனில் பகல் நேர வெப்பநிலை 10 டிகிரி செல்சியஸாகவும், இரவு நேர வெப்பநிலை மைனஸ் எட்டு டிகிரியாகவும் உள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் லண்டன் ஹீத்ரு விமான நிலையத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும், 60இக்கும் அதிகமான விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

விமானங்கள் தரையிறங்க முடியாத அளவுக்கு பனிமூட்டம் காணப்படுவதால், சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



*மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் வழிபாட்டுத் தலம் ஒன்றில் 12.12.12 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட தம்பதிகள்.*

## வடகொரியாவில் அமெ. பிரஜை கைது

**உளவு பார்த்த குற்றச்சாட்டில்**

உளவு பார்த்ததார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்கர் ஒருவர் வடகொரியாவில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை செய்தி தொடர்பாளர் விக்டோரியா நுலண்ட் தெரிவிக்கையில்,

''வடகொரியாவில் அமெரிக்க பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கும் தகவல் எங்களுக்கு உறுதியாகத் தெரியவந்துள்ளது. அமெரிக்க பிரஜைகளின் நலனைக் காப்பதைத் தவிர எங்களுக்கு வேறெந்த முக்கியத்துவமும் கிடையாது'' என்று தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுடன் அமெரிக்காவுக்கு தூதரக உறவு கிடையாது என்பதால், அந்த நாட்டில் உள்ள அமெரிக்க மக்களின் பிரச் சினைகளைக் கையாளும் அதிகாரத்தை அங்குள்ள சுவீடன் தூதரகத்துக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சிரிய தலைநகரில் குண்டு வெடிப்புகள்

### ஒருவர் சாவு; பலர் படுகாயம்

சிரியாவில் இரு வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர்.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள கோனாட் மாவட்டத்தில் 2 குண்டுகள் வெடித்தன. இதில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ட்ரஸ் மாவட்டத்தில் உள்ள ஜரமனா பகுதியில் 2 குண்டுகள் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். 5 பேர் காயமடைந்தனர்.

சிரியாவில், கடந்த மாதம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களில் 50இக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோஸ்டாரீகாவில் நிலநடுக்கம்

கோஸ்டாரீகா நாட்டில் நேற்றுமுன்தினம் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

அதிகாலையில்நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 4.5 அலகாகப் பதிவானது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

தலைநகர் சான் ஜோசுக்கு மேற்கே 35 கி.மீ. தொலைவிலுள்ள நரோஞ்ஜோ நகரத்தின் தென்மேற்கே பூமிக்கு அடியில் 10.1 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

### பெண்ணுடன் தகாத உறவு

## சிங்கப்பூர் சபாநாயகர் பதவி விலகினார்


பெண் ஒருவருடன் தகாத உறவு கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சிங்கப்பூர் நாடாளுமன்ற சபாநாயகர் மைக்கேல் பால்மர் பதவி விலகியுள்ளார்.

மக்கள் செயல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பால்மர், தனது தொகுதி அலுவலகத்தில் பணிபுரிந்த பெண் ஒருவருடன் தகாத உறவு வைத்திருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த பெண் பதவிவிலகிவிட்டார். இதனைத் தொடர்ந்து தானும் பதவி விலகுவதாக பால்மர் அறிவித்தார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், ''நான் செய்தது தவறு தான். என்னுடைய ஒழுக்கக் கேட்டினால் கட்சிக்கு களங்கம் ஏற்படுவதை விரும்பவில்லை. எனவே பதவி விலகுகிறேன்'' என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறிஸ்மஸை முன்னிட்டு பெல்ஜியத்தில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான வீதியோர கிறிஸ்மஸ் மரம்.

**இத்தாலியின் சர்சைக்குரியவரான**

# 76 வயது முன்னாள் பிரதமருக்கு 26 வயதுப் பெண்ணுடன் காதல்

மிலன், டிசெ.14

இத்தாலி முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோணி தற்போது தன்னை விட 50 வயது குறைந்த இளம் பெண்ணைக் காதலிக்க ஆரம்பித்துள்ளார். அவருக்கு தற்போது 76 வயது.

காதல் லீலைகளில் கில்லாடி. எப்போதுமே பெண்களுடன்தான் அவர் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பார். ரோம் நகரம் தீப்பிடித்து எரிந்தபோது பிடில் வாசித் துக் கொண்டிருந்த நீரோ மன்னன் கதைதான் பெர்லஸ் கோணியின் கதையும்.

இத்தாலி பொருளாதார சிக்கலில் தவித்து வருவது குறித்து சற்றும் கவலைப் படாமல் தன்பாட்டுக்கு களியாட்டங்களில் ஈடுபட்டுக் கொண் டிருந்தார். அவர் மீது அதிகமான வழக்குகளும் போடப்பட்டன. ஆனாலும் அசையாமல் பதவியைத் தக்கவைத்துக் கொண்டிருந்த பெர்லஸ்கோனி சில மாதங்களுக்கு முன்புதான் பதவியிலிருந்து விலகினார்.

ஆனாலும் தனது லீலைகளை அவர் நிறுத்தவே இல்லை. தற்போது அவர் தனது கட்சியைச் சேர்ந்த பிரான் ஸெஸ்கா பாஸ்கல் என்ற 26 வயதுப் பெண்ணுடன் ஜோடியாக சுற்றிக் கொண் டிருக்கிறார். பெர்லஸ் கோனி அநேகமாக பாஸ்கலை திருமணம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சர்ச்சைக்குரிய தீவில் ஜப்பானும் இறக்கியது போர் விமானங்களை

டோக்கியோ, டிசெ.14

கிழக்கு சீனக் கடலில் சர்ச்சைக்குரிய தியாவ்யூ தீவுப் பகுதியில் சீனாவின் போர் விமானம் இறங்கியதைத் தொடர்ந்து ஜப்பானும் எப்.15 ரக போர் விமானங்களை அந்தப்பகுதியில் களம் இறக்கியிருப்பதால் பதற்றம் நிலவி வருகிறது.

தியாவ்யூ தீவு, இயற்கை எரிவாயு வளம் மிக்கது. மேற்படி தீவுக்கு சீனாவும் ஜப்பானும் உரிமை கொண்டாடி வந்தன. இந்த நிலையில் தீவை உரிமையாளரிடமிருந்து விலைபேசி தமது நாட்டுடன் இணைத்துக் கொண்டது ஜப்பான். இதற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. மேலும் அந்தப்பகுதிக்கு தமது ரோந்து கப்பல்களையும் அனுப்பி வந்தது. தற்போதும் அப்பகுதியில் கண்காணிப்பு கப்பல்களை சீனா நிறுத்தி இருக்கிறது.

இந்தநிலையில் தியாவ்யூ தீவு அருகே சீனாவின் போர் விமானம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கும் ஜப்பான், போட்டியாக எப்.15 ரக போர் விமானங்களை அந்தப்பகுதிக்கு அனுப்பி வைத்திருக்கிறது. இதனால் கிழக்கு சீனக் கடற்பரப்பில் போர் வெடிக்கும் அபாயம் உருவெடுத்திருக்கிறது.

# தன்னை அறைந்தவருக்கு கருணை காட்டினார் நேபாள முன்னாள் பிரதமர்

**பின்னர் பணம் வழங்கி மீட்டார் அவரை**

தன்னை, கன்னத்தில் அறைந்த நபருக்காக நேபாள முன்னாள் பிரதமர் பிரசாந்தா பிணைத் தொகை செலுத்தியுள்ளார்.

நேபாளத்தில் பாரம்பரியமாக இருந்த மன்னராட்சியை மாவோயிஸ்ட்டுகள் போராடி முடிவுக்குக் கொண்டு வந்தனர். இதற்குக் காரணமான மாவோயிஸ்ட் தலைவர் பிரசாந்தா நேபாள குடியரசின் முதலாவது பிரதமராக பொறுப்பேற்றார். பின்னர் கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பதவி விலகினார்.

இதற்கிடையே, நேபாளத்தின் புத்தாண்டு மற்றும் தீபாவளி விழாவையொட்டி, காத்மாண்டு நகரில் கடந்த 16 ஆம் திகதி பிரசாந்தா, கட்சித் தலைவர்களுக்கு விருந்தளித்தார். இந்த விருந்தில் முக்கிய தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். 'இளைஞர் கம்யூனிஸ்ட் லீக்' என்ற ஆளும் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த, முன்னாள் உறுப்பினர் பதம் கன்வார் என்பவர், மேற்படி விருந்தின் போது, இரகசியமாக நுழைந்தார். பிரசாந்தாவை நோக்கிச் சென்ற பதம் கன்வார், திடீரென அவரை கன்னத்தில் அறைந்தார். இத னால் பிரசாந்தா நிலை குலைந்து போனார். அவரது மூக்குக் கண்ணாடி, கீழே விழுந்து உடைந்தது.

அதிர்ச்சி அடைந்த பிரசாந்தாவின் ஆதரவாளர்கள், உடனடியாக பதம் கன் வாரை வெளியே இழுத்து வந்து கடுமையாக தாக்கி னர். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த பவன் கன்வார் மயக்கமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். முன்னாள் பிரதமரை தாக்கிய குற்றத்துக்காக பதம் கன்வார் சிறையில் அடைக்கப்பட்டார். இவரை பிணையில் விடுவிக்க அவரது குடும்பத்தினர், தொண்டர்கள் பலரிடம் நிதி திரட்டி வந்தனர்.

குறித்த தகவலைக் கேட்ட பிரசாந்தா, பதம் கன்வாரை விடுவிக்க, தன் உதவியாளர் மூலம், 28 ஆயிரம் ரூபா பிணைத் தொகை செலுத்தினார். அதையடுத்து, கன்வார், நேற்று முன்தினம் பிணையில் விடுதலையானார்.

## வரி செலுத்தாத சர்தாரி



இஸ்லாமாபாத், டிசெ.14

பாகிஸ்தானின் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி வருமான வரி செலுத்தவில்லை என்று அந்தநாட்டு வருமான வரித்துறை தெரிவித்துள்ளது. அவரைப்போல 34 அமைச்சர்களும் வருமான வரி செலுத்தவில்லையாம்.

பாகிஸ்தான் வருமான வரித்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மட்டுமல்ல அமைச்சர்களின் பெயர்களும் இடம் பெற்றிருக்கிறது. முன்னாள் பிரதமர் யூசுப்ராசா கிலானி, உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், வர்த்தகத் துறை அமைச்சர் மக்தூம் அமின் பாகிம் ஆகியோரும் வருமானவரி தாக்கல் செய்யவில்லை.

பாகிஸ்தானில் அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற அமைச்சர்களாக 55 பேர் இருக்கின்றனர். அவர்களில் 34 பேர் வருமான வரி செலுத்தவில்லை. 20 அமைச்சர்கள் தான் வருமான வரி செலுத்தி இருக்கின்றனர். அந்த நாட்டின் 341 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 90 பேர் தான் வருமான வரி செலுத்தியுள்ளனர்.


HAPPY BIRTH DAY

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

13 ஆவது பிறந்தநாளில் 20.12.2012

11 ஆவது பிறந்தநாளில் 14.12.2012





Best Wishes

ஜோயல் ஜெனுசன்

இன்று தங்களது பிறந்தநாளைக் கொண்டாடும் *திரு.திருமதி செபமாலை அன்ரன்யூட் எவறஸ்ரா* தம்பதியரின் செல்வப் புதல்வர்கள் **ஜோயல்,ஜெனுசன்** ஆகியோரை எல்லாச் சிறப்பும் பெற்றுவாழ வாழ்த்துவோர்:

அன்பு அப்பா,அம்மா,அப்பப்பா, அம்மையா,அம்மம்மா, பெரியப்பாமார் குடும்பம்,மாமாமார் குடும்பம்,அன்ரா குடும்பம் மற்றும் உற்றார்,உறவினர்.

பாதர் பெரியப்பா
டேவிற் வீதி,யாழ்ப்பாணம். (26681)(5.6.7)

சேவை நலன் பாராட்டு

முருகேசு கந்தையா



யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த இருபத்தேழு வருடங்களாக சிறப்பான சேவையாற்றி தனது சேவையின் இறுதிக் காலங்களில் விடுதி இல.27 இல் சிரேஸ்ட பரிசாரகராகக் கடமையாற்றி 14.12.2012. இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திருவாளர் முருகேசு கந்தையா அவர்கள் பல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
விடுதி இல.27, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (26690)


### தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் மீது கொலைக் குற்றச்சாட்டு

அரசியல் வன்முறைச் சம்பவத்தின்போது கார் சாரதியொருவர் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டமை தொடர்பில் தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் அபிஸிற் வெஜ்ஜா மீது கொலைக் குற்றம் சுமத்தப்படவுள்ளது.

இந்தநிலையில், மேற்படி குற்றச்சாட்டை அறிந்து கொள்வதற்காக சிறப்பு விசாரணைத் திணைக்க ளத்துக்கு வருமாறு தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

குறித்த உயிரிழப்புக்கள் தொடர்பில் அபிஸிற் வெஜ்ஜாவும் அவரது உதவி யாளரும் முதலாவதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

மேற்படி கார் சாரதி படையினரால் கொல்லப்பட்டதாக கடந்த வாரம் ஒரு நீதிமன்றம் அறிவித்தது.

தற்போது எதிர்க்கட்சித் தலைவராகவுள்ள அபிஸிற் வெஜ்ஜா உண்மையான வெடி பொருள் கொண்ட ஆயுதங்களை பயன்படுத்த தான் உத்தரவிட்டதை நியாயப்படுத்தி [illegible] எனவும் அவர் கூறினார்.


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பணிநிலை வெற்றிடம்

களஞ்சிய முகாமையாளர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

1. சம்பள அளவுத்திட்டம்- (கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 208/13 ஆவது சம்பளக்குறியீடு)

9950 - 11700
85x10 - 90x10

இதரபடிகள்,விசேட படிகளும் வழங்கப்படும்.

2. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. பிணை:- தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற்றை செலுத்தத்தயாராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள்:-

அ) கூட்டுறவுப்பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 02 வருடத்துக்குக் குறையாதஅனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 04 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம் க.பொ.த (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/ வர்த்தக கணிதம்/தூய கணிதம்/ மற்றும் சிங்களம்/தமிழ் உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தி உடன் 06 பாடங்களில் சித்தியும், தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும். கணினி அறிவு மேலதிக தகைமையாகக்கருதப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை:-** மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "**களஞ்சிய முகாமையாளர் 208/13 பதவிக்கான விண்ணப்பம்**" எனக் குறிப்பிட்டு "**பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்**". என்னும் முகவரிக்கு 2012.12.25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி சங்கப்பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) (c/2163) (5.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(51)

கொழும்பிலிருந்து உறவினர் ஒருவர் அவசரமாக யாழ்ப்பாணம் வருவதாக ரகுவுக்கு ஒரு தந்தி வந்தது. முக்கியமான மனிதர். அவரை அழைத்து வரவேண்டும். ஆனால் அவன் போகவில்லை. ஓர் ஓட்டோவைப் பிடித்து ரகுவின் வீட்டுக்குப் போனார். அவருக்கு ரகுவின் மீது நம்பிக்கை போய் விட்டது.



கோபமாக உள்ள ஒருவரிடம், அந்த நேரத்தில் எதையும் விவாதிக்கக் கூடாது, கேட்கக்கூடாது. ஏனென்றால் அப்போது சரியான பதில் வராது. மேலும் அவருக்கு அந்த நேரத்தில் நம்மீது நம்பிக்கை வராது.

ஒருவன் உடல் நிலை சரியில்லாமல் கஷ்டப்படுகிறான். அவனுக்குப் புற்றுநோய். வைத்தியர்கள் இரகசியமாக அவன் நண்பனிடம் சொன்னார்கள். ஆனால் நண்பன் அவனிடம் போய், 'உனக்குப் புற்றுநோய் பிழைக்க முடியாது' என்று சொல்லலாமா? சொல்லக் கூடாது. அவனிடம் போய் உண்மையைச் சொன்னால், அவன் விரைவில் இறந்து போவான். இரண்டு ஆண்டுகள் அவன் வாழ முடியும் என்றால் ஓர் ஆண்டிலே இறந்து விடுவான்.

மற்றவர்களின் நம்பிக்கையைப் பெற முதலில் நாம் நம்மிடத்தில் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். அப்படி நாம் நம்பிக்கையை வளர்க்க இதோ சில எளிய வழிகள்.

1.எதையும் மிகைப்படுத்திச் சொல்லாதீர்கள். எதிர் காலத்தில் இதைச் செய்வேன், அதைச் செய்வேன் என்று பொய்யான, அளவுக்கு அதிகமான வாக்குறுதிகளைத் தராதீர்கள்.

2.நாம் எதையாவது சொல்லும்போது அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கற்பனை செய்து கொண்டு, பிறகு பேச வேண்டும்.

3.நமது கருத்துக்களை மட்டும் வலியுறுத்தக் கூடாது. மற்றவர்களின் கருத்துக்களையும் கவனமாகக் கேட்டு நம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

4.எதையும் எதிர்த்து வாதாடாதீர்கள். எதிர்த்து வாதாடு பவர்கள் தோல்வியை ஒப்புக் கொள்கிறவர்களுக்குச் சமம்.

5.நாம் வலியுறுத்த வேண்டியதை யோசனையாக ஏற்றுக் கொள்ளும்படி செய்யவேண்டும். இதைச் செய்யவேண்டும், அதைச் செய்யவேண்டும் என்று நிபந்தனைகள் போடாதீர்கள்.

6.நாம் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லாமல், மற்றவர்கள் சொல்வதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்கள் சொல்வது சரியானதா என்று சிந்தித்துப் பார்த்து வளைந்து கொடுக்க வேண்டும்.

7.நம்மிடமிருந்து ஒருவர் எதையும் எதிர்பார்க்காத நேரத்தில், நாமாக வலிந்துபோய் சில உதவிகளைச் செய்ய வேண்டும்.

8.மற்றவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுங்கள். அப்படி உதவும் போது உங்கள் பிரச்சினைகள் தீரும்.

9.நாம் எங்கே போகிறோம், என்ன செய்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு அடிக்கடி தெரிவிக்க வேண்டும்.

10.எதையும் பக்குவமாக எடுத்துச் சொல்லி மற்றவர்கள் உதவியைப் பெற வேண்டும்.

11.மற்றவர்கள் நம்மிடம் என்ன கேள்விகள் கேட்டாலும் அமைதியாகப் பதில் சொல்ல வேண்டும். பதில் சொல்ல முடியாத கேள்விகளாக இருந்தால், ''அப்படியா? எனக்குத் தெரியாதே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேள்வியாலேயே பதில் சொல்லித் தப்பித்துக்கொள்ள வேண்டும்.

12.எப்போதும் உண்மையாக இருக்க வேண்டும். போலி வேடம் போடக்கூடாது.

13.எதையாவது மற்றவர்களிடம் சொல்லும்போது, உண்மைகளை மட்டும் சொல்ல வேண்டும். இருப்பதையும் இல்லாததையும் சேர்த்துக் கதை அளக்கக்கூடாது.

14.மற்றவர்கள் மனம் புண்படும்படி எதையும் பேசக் கூடாது.

நாம் படிப்படியாக முன்னேறவேண்டும். மேலே சொன்ன கருத்துக்களை மனதில் கொண்டு, தொழிலிலும் சரி, வாழ்க்கையிலும் சரி நாம் மற்றவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். நாம் மற்றவர்களின் நம்பிக்கையைப் பெற்று விட்டால், வெற்றிகள் நம்மைத் தேடிவரும். வெற்றி கண்ட மனிதர்களை அனைவரும் விரும்புவார்கள், மதிப்பார்கள்.

**போதும் என்ற மனம் போதாது**

மற்றவர்கள் நம்மை நம்பினால் வெற்றி நிச்சயமாய் நம் வாழ்க்கையில் உண்டு. நம்மை மற்றவர்கள் நம்பினாலே நல்ல உறவு நமக்குக் கிடைத்திருக்கிறது என்று பொருள். நம்மை நல்லவர்கள் என்று எண்ணுவதால் நம்மை நம்புகிறார்கள். அப்படிப்பட்ட நம்பிக்கை ஏற்பட்டு விட்டால், வாழ்நாள் முழுவதும் நாம் அதைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எதையாவது நாம் இழந்துவிட்டால், அதையே நினைத்து அழக்கூடாது. ஜப்பானியர்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்றே நினைப்பார்கள், செயற்படுவார்கள். அதைப்போல் நாம் மாறவேண்டும்.

தமிழ்வாணன்

(தொடரும்)

# யாழ்.மாவட்டத்தின் கல்வி வீழ்ச்சிக்கு பெற்றோரின் அசிரத்தையே முழுக்காரணம்

## உதவிக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டுகிறார்

தரம் 5 வரை பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் அதிதீவிரத்தைக் காட்டுகின்றனர். அதன்பின்னர் பாடசாலைக்குப் போய் வரும் பிள்ளைகளில் எந்தப் பெற்றோரும் அக்கறையின்றி இருப்பதனால் இன்று தேசிய ரீதியில் யாழ். மாவட்டம் கல்விச் செயற்பாடுகளில் 9 ஆவது இடத்தை வகிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது.

பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டம் அகில இலங்கை ரீதியிலே முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இன்று அவ்வாறான நிலைமை இல்லாததற்கு ஒரு காரணம் பெற்றோர்களின் அசிரத்தையும், பிள்ளைகளை நல்வழிப்படுத்தாமையுமே ஆகும்-என வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குகனேசன் தெரிவித்தார்.

சங்கானை பட்டர்பிளை சர்வதேச பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், ஒளிவிழாவும் கடந்த செவ்வாய்க்கிழமை சங்கானை மாவடி இளைஞர் மன்ற கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே குகனேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பாக போருக்குப் பின்னரான காலப்பகுதியில் பிள்ளைகள் பெற்றோருக்கு அடங்கி வாழ்பவர்களாக இல்லாமல், தமது இஷ்டப்படி எதையும் தாம் செய்யலாம் என்ற மனப்போக்கில் நடந்து கொள்கின்றார்கள். பெற்றோர்களும் ஏனோதானோ என்று இருந்து விடுகின்றனர். தட்டிக் கேட்டால் பிள்ளைகள் தம் சொல்லைக் கேட்கமாட்டார்கள் என்ற எண்ணம் இன்றைய பெற்றோர்கள் மனதில் குடிகொண்டுள்ளது.

முன்பள்ளிகளில் எண்ணும் எழுத்தும் மட்டும் கற்பிக்க வேண்டுமென சில பெற்றோர்கள் முறையிடுவதாக முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்டங்களில் 252 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 62 முன்பள்ளிகள் சங்கானைக் கல்விக் கோட்டத்தில் உள்ளன. சுமார் 300 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் 5000 இற்கும் மேற்பட்ட இளஞ்சிறார்களுக்கு கல்வியை வழங்கி வருகின்றனர்.

இந்த ஆசிரியர்களில் க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கான டிப்ளோமா பயிற்சி எமது திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சியின் போது, ஆசிரியர்கள் எவ்வாறு பிள்ளைகளுக்கு கல்வியைப் புகட்ட வேண்டும் என்பது மிகத் தெளிவாக விளங்கப்படுத்தப்படுகின்றது. பிள்ளைகளைச் சுயமாக இயங்க வைப்பதற்கான முறைகள் பற்றி ஆசிரியர்களுக்கு தெளிவான விளக்கம் அளிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் 3 முதல் 5 வயது வரையிலான பிள்ளைகளுக்கு இவ்வாறான கல்வி முறையே புகட்டப்படுகின்றது. ஒரு பிள்ளை எவ்வாறு புத்தகங்களை ஒழுங்காக வைத்திருப்பது, சாப்பிட்டபின் அந்தப் பாத்திரங்களை எங்கே எவ்வாறு வைக்கவேண்டும், பாதணிகள் எந்த இடத்தில் வைக்கப்பட வேண்டும் எனவும் சின்னச் சின்ன வேலைகளை எவ்வாறு ஒழுங்காகச் செய்ய வேண்டும் எனவும், வெளிநாட்டு முன்பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது.

ஒழுங்கு முறைகள் மற்றும் இவ்வாறான வேலைகளைச் சுயமாக பிள்ளை சிந்தித்து வளர, வளர தானே தனக்குத் தேவையானவற்றை ஒழுங்கு முறையில் செய்வதற்கு சுயகல்வி துணை போகின்றது. அதேமாதிரியான கல்வியை இங்கும் புகட்ட வேண்டும் என்ற எண்ணக்கருத்தில் அந்தப் பிள்ளைகளின் ஆசிரியர்களுக்கு திணைக்களம் டிப்ளோமா பயிற்சியை மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு பெற்றோரும் தனது பிள்ளை எண்ணும் எழுத்தும் கற்றால் மட்டும் போதுமானது என்ற எண்ணத்தை விட்டு, இந்த வயதிலே அவர்களின் தேவைகளைக் கவனித்து வரவேண்டும். சுயமாகக் கல்வி கற்கும் பிள்ளை எதிர்காலத்தில் சிறந்த கல்விமானாக வரக்கூடியதான வாய்ப்பைப் பெறுகின்றது-என்றார். (எ-29)



சமுர்த்தி தெக்கிலு சிறுவர் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட குழு நடனப்போட்டியில் காரைநகர் யாழ்பன் கல்லூரி கோட்ட, வலய, மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றது. அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் மாணவிகள். (எ-29)

# தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை பிரதேசசபை பொது நூலகங்களின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

**ஊர்காவற்றுறை பொது நூலகப் போட்டி முடிவுகள்**

**கதைசொல்லல்**

1 ஆம் இடம்-டி.மெரித்றொனி (ஊர்காவற்றுறை றோ.க ஆண்கள் பாடசாலை), 2 ஆம் இடம்-ஜெ.பிறின்ரா (புனித மரியாள் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்-பி.கிரிஷாளினி (புனித மரியாள் மகளிர் கல்லூரி).

**பேச்சுப்போட்டி**

1 ஆம் இடம்-இ.பவதாரணி (புனித மரியாள் மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்-அ.ஜெனிமரியா (புனித மரியாள் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்-யு.மேரிடயானி (புனித மரியாள் மகளிர் கல்லூரி).

**சித்திரப்போட்டி**

1 ஆம் இடம்-[illegible] (புனித [illegible]), 2 ஆம் இடம்-சி.திவ்யன் (புனித அந்தோனியார் கல்லூரி), 3 ஆம் இடம்-த.மஜீத் (புனித அந்தோனியார் கல்லூரி).

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

1 ஆம் இடம்-எ.சாள்ஸ் டிலக்ஷன் (புனித அந்தோனியார் கல்லூரி), 2 ஆம் இடம்-மே.அன்ரனிஅன்று (புனித அந்தோனியார் கல்லூரி), 3 ஆம் இடம்-ம.ஆண்டிலானி (புனித மரியாள் மகளிர் கல்லூரி).

**கட்டுரைப்போட்டி மேற்பிரிவு**

1 ஆம் இடம்-இ.கஜாஜினி (புனித அந்தோனியார் கல்லூரி), 2 ஆம் இடம்-கி.சுசீலா (புனித அந்தோனியார் கல்லூரி), 3 ஆம் இடம்-ச.நிவேன் (புனித அந்தோனியார் கல்லூரி).

**பொது அறிவுப் போட்டி**

1 ஆம் இடம்-ஜெ.சிந்துஜா (புனித அந்தோனியார் கல்லூரி), 2 ஆம் இடம்-ம.ஆனல்ட் சரண்சன் (புனித அந்தோனியார் கல்லூரி), 3 ஆம் இடம்-க.சுவேதா (புனித அந்தோனியார் கல்லூரி), கு.யோசப் (கொத்திக்குளம் கிழக்கு ஒழுங்கை, ஊர்காவற்றுறை).

(தொடரும்)

# சுழலும் சொற்போர் விவாதப் போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.14

2012 பெண்பிள்ளைகளின் தேசிய தினத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபையால் நடத்தப்பட்ட சுழலும் சொற்போர் விவாதப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

முதலாம் இடத்தை சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியும், இரண்டாம் இடத்தைப் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை வட்டு இந்துக் கல்லூரியும் பெற்றுள்ளன. (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933,
222 9944, 567 9933, 567 9944
விளம்பரம்:021 567 1111
விநியோகம்: 021 567 7222

**தொலைநகல்**
செய்தி: 021 567 8844,
விளம்பரம்: 021 222 9731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
டி 9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி (பஸ் நிலையத்துக்கு அருகில்)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
மாலுசந்தை வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 226 2789,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல் மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சுதா வொன்ஸ்' மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'ஸ்டார் மொடேன் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'சீமாலை கண்டி வீதி, சீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' மத்திய சந்தை, மல்லாவி : 0778175116, 'கோபி வைலக்சிற்றி' முள்ளைத்தீவு நகர் : 0779598917, 'அன்ரன் சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571, 'சுதா ரைஸ்' 98, நீதிமன்ற வீதி, மன்னார் : 023 222 3311

# இது தீராத பிரச்சினை

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வுபோன்றது தான் இலங்கை இந்திய மீனவர் பிரச்சினையும். இனப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றதோ அதேபோன்றே இலங்கை இந்திய மீனவர் பிரச்சினையும் முடிவின்றித் தொடர்கிறது. ஆயினும் இதனால் பாதிக்கப்படுவது வடக்கு மீனவர்கள் தான்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றன. தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் இந்திய மீனவர்கள் ஈடுபடுகிறார்கள். இலங்கைக் கடற்பரப்புக்குள் கரையை அண்மித்த பகுதி களுக்குள் துணிச்சலுடன் நுழைந்து இலங்கைக் கடல் வளங்களை அவர்கள் அள்ளிச் செல்கிறார்கள். இவர்களது இந்த நடவடிக்கையினால் அதிகம் பாதிக்கப்படுவது வடபகுதி மீனவர்கள் தான்.

இந்திய இழுவைப் படகுகள் இலங்கை கடற்பரப்பில் உள்ள கடல் வளங்களை வாரிச்சுருட்டிச் செல்வதுடன் வடபகுதி மீனவர்களினால் போடப்படும் வலைகளை அறுத்துச் சேதமாக்கி விட்டும் செல்கின்றன. இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடி மிகக் குறைந்து போனதால் அவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைகிறார்கள். அவர்களின் இந்த அத்துமீறிய செயற்பாட்டினால் வடபகுதி மீனவர்கள் நொந்து நூலாகிப் போயிருக்கிறார்கள்.

இலங்கைக் கடல் எல்லைக்குள்ளும் இப்போது கடல் உணவுகளின் உற்பத்தி பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. முன்னர் இருந்ததிலும் பார்க்க இப்போது கடல் உணவுகளின் உற்பத்தி சுமார் 40 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை எச்சரித்திருக்கிறார். இந்திய மீனவர்களின் அத்துமீறலே இதற்குக் காரணம் என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார். தற்போது குடாநாட்டில் கடல் உணவுகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அவற்றின் பெருக்கம் குறைவடைந்தமையாலேயே இந்தத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் சந்தைகளில் கடல் உணவுகளின் விலைகள் உச்சத்தை தொட்டுள்ளன என்றும் சமாசத் தலைவர் மேலும் குறிப்பிடுகிறார்.

இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் இழுவைப் படகுகள் வடக்குக் கடலில் உள்ள வளங்களை அள்ளிச் செல்கின்றன. இதனால் எமது கடல் வளம் அடியோடு அழிக்கப்படுகிறது. இந்தச் செயல் கடந்த பல வருடங்களாகத் தொடர்கின்றபோதும் அதனைத் தடுப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் இல்லை. இந்த அத்துமீறலுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி நாம் களைத்துப்போய் விட்டோம். உரிய தரப்புக்களோடு தொடர்பு கொண்டு பல முறை வலியுறுத்திக் கேட்ட போதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண எவரும் முன்வரவில்லை. இந்த நிலை மேலும் தொடர்ந்தால் குடாக் கடலில் கடலுணவுகளின் பெருக்கம் கேள்விக்குறியாகிவிடும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அவரது கூற்று உண்மைதான். இடப்பெயர்வுகள், உயிரிழப்புகள் என்பவற்றைச் சந்தித்து எதுவுமே இல்லாமல் மீளக்குடியமர்ந்துள்ள வடக்கு மீனவர்கள் இப்போதுதான் தமது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தக்கூடிய நடவடிக்கைகளை ஓரளவு ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் இந்த இந்திய, தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் அவர்களை மீண்டும் ஒரு நிர்க்கதியான நிலைக்கு கொண்டுசெல்வதாகவே அமைகிறது.

பல லட்சம் ரூபா செலவு செய்து வாங்கிய வலைகளை ஒரு இரவில் அறுத்து துவம்சம் செய்கின்றன இழுவைப் படகுகள். கடன்பட்டு வலை வாங்கிய அவர்கள் இந்த செயற்பாடுகளால் மேலும் நஷ்டமடைவதுடன் மன உளைச்சலுக்கும் உள்ளாகின்றனர். அத்துடன் கடல் வளங்கள் ஏற்கனவே அள்ளப்பட்டு விட்டதால் போதிய மீன்பாடு இல்லாமல் அவர்கள் ஏமாற்றத்துடன் கரைதிரும்புகிறார்கள்.

இந்தப் பிரச்சினை குறித்து இரு நாட்டு அரசுகளும் அக்கறையுடன் செயலாற்றியதாக இல்லை. தமது அரசு நலன்களுக்காக இருநாடுகளும் இந்த விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவை எட்டாமல் தொடர்ந்தும் பல வருடங்களாக நழுவல் போக்கையே கடைப்பிடித்து வருகின்றன. இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண சில முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை எதுவும் பூரணமானதாக நடைபெறவில்லை.

இதனால் தொடர்ந்தும் வேதனையும் விரக்தியும் அடைபவர்கள் வடக்கு மீனவர்களே. இது விடயத்தில் இனியாவது ஒரு உருப்படியான தீர்வு எட்டப்படுமா என ஏங்கித் தவிக்கிறார்கள் வடக்கு மீனவர்கள்.

# எதிர்பார்ப்பு எப்போதும் வெற்றியளிப்பதில்லை

உப்புல் ஜோசப் பெர்னாண்டோ
மூலம் மவ்பிம
தமிழில்: வி.எஸ்.ரி.

அரச நிர்வாகத்துறைகளில் இடம்பெறும் ஊழல்கள் குறித்து விமர்சிப்பதோடு, அவை குறித்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சில வேளைகளில் எதிர்க்கட்சியினர் பிரலாபிக்கின்றனர். அவை குறித்து நடவடிக்கை எடுக்க முனைந்தால் அதற்கும் ஆட்சேபம் தெரிவிப்பது அவர்களுக்குத் தற்போது ஒரு விளையாட்டாக ஆகியுள்ளது.

அண்மையில் பொதுநிகழ்வொன்றில் வைத்து ஜனாதிபதி வெளியிட்ட மேற்குறித்த கருத்து, பிரதம நீதியரசர் விடயத்தில் ஜனாதிபதிக்கு மூன்று வித அச்சம் உண்டென்பதை உணர்த்துகிறது.

அரசுக்கு எதிரான தரப்புகளுக்குப் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமை தாங்கும் நிலை நாட்டில் உருவாகிவிடுமா?, எதிர்காலத்தில் எதிரணி சார்பான ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக அவர் ஆகிவிடக் கூடுமா? மற்றும் அவர் தம்மை அரசியல் ரீதியில் தோற்கடிக்கும் நிலை எதிர்காலத்தில் அமைந்து விடுமா? என்பவையே ஜனாதிபதி மஹிந்தவின் மனதில் தற்போது தலையெடுத்துள்ள அந்த மூன்று வித அச்சமாகும்.

இத்தகைய தமது அச்சத்தைப் போக்கிக் கொள்ளும் நோக்கில், ஜனாதிபதி மஹிந்த கடந்த வாரத்தில் இரு முக்கிய அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க மேலும் ஆறு ஆண்டுகளுக்கு வகிக்க ஐ.தே.கட்சியின் பொதுக்குழு வழங்கிய வாய்ப்புக்குத் தமது ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் வழங்குவதென்பது அவற்றில் ஒன்றாகும். இறக்குமதித் தீர்வை செலுத்தாது வாகனங்களைக் கொள்வனவு செய்ய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்கும் அரசு வழங்கிய வாய்ப்பைப் பயன்படுத்தி, தாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பயன்படுத்திய வாகனங்களை வெளித்தரப்புக்கு அவர்கள் விற்பனை செய்வதற்கான அனுமதியை வழங்கியமை அவற்றில் இரண்டாவதாகும்.

தமது இவ்விரு தீர்மானங்களின் மூலம் என்றல்லாது நாடாளுமன்றத்தின் சகல உறுப்பினர்களையும் பிரதம நீதியரசர் விடயத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராக உசுப்பேற்றி விடுவதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும்.

பிரதம நீதியரசருக்கு ஆதரவாக ஒன்றிணைந்திருக்கும் நீதித்துறையினரை அச்சுறுத்த வேண்டுமானால், அதற்கு எதிர்க்கட்சியினரதும் ஆதரவைப் பெற்ட வேண்டியது அவசியமென்பதை ஜனாதிபதி துல்லியமாகக் கணிப்பிட்டிருந்தார். அந்த வகையில், முதலில் ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியை ரணிலுக்கு உறுதிப்படுத்துவித்து அவரைப் பாதுகாத்ததன் மூலம் ரணிலைத் தமது சட்டைப் பையினுள் போட்டுக் கொண்டார். பிரதம நீதியரசருக்கு எதிரான அரசின் குற்றவியல் பிரேரணைக்கு எதிரான நீதித்துறைத் தரப்பினரின் மனுக்களை நீதிமன்றம் விசாரணை முயற்சிக்கு ஏற்கும் நிலை ஏற்பட்ட போது, ஜனாதிபதி, ரணிலின் உதவியை நாடினார். இதனால் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்குத் தடை விதித்து முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க வழங்கிய தீர்ப்பை மேற்கோள்காட்டி, மஹிந்த அரசின் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கும் விதத்தில் கிளிப்பிள்ளை போன்று ரணில் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டார்.

1978ஆம் ஆண்டின் அரசமைப்பை உருவாக்கிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, அரசமைப்பு உருவாக்கச் சபையில் கருத்துத் தெரிவித்த ஒரு சந்தர்ப்பத்தில், நீதித்துறையின் சுயாதீனம், பொது சன வாக்கெடுப்பின் பலம் கொண்ட அளவுக்குப் பெறுமதிமிக்கது. பொதுசன வாக்கெடுப்பின் பலத்தை இல்லாதொழிப்பது பொதுமக்களது இறையாண்மையை மறுப்பது போன்று, நீதித்துறையின் சுயாதீனத்தை இல்லாதொழிப்பதும் பொதுமக்களது இறையாண்மையை மறுப்பது போன்றதேயாகும் எனச் சுட்டிக்காட்டியிருந்ததை மறந்து விட்டு, ரணில், அனுரா பண்டாரநாயக்கவின் தீர்ப்பை மேற்கோள் காட்டி மஹிந்த அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்துக் கருத்து வெளியிட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஏனெனில் முன்னைய அரசொன்றைத் தேர்தலில் தோற்கடித்து தனது தலைமையில் புதிய அரசொன்றை நிறுவுவதில் வெற்றிகண்ட அதிர்ஷ்டசாலி ஜே.ஆர். ஆனால் அனுரா பண்டாரநாயகவோ, ஜே.ஆரின் அரசை வீழ்த்த இயலாது சுதந்திரக் கட்சிக்குத் துரோகமிழைத்து பதவிக்காக ஜே.ஆரின் அரசில் ஒட்டிக்கொண்ட துரதிஷ்டசாலி.

எது எவ்வாறான போதிலும் அன்று சபாநாயகர் என்ற ரீதியில் அனுரா பண்டாரநாயக்க வழங்கிய தீர்ப்பை மேற்கோள் காட்டி ரணில் ஆற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டு, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றமே நீதித்துறையை விட மேம்பட்ட அதிகாரம் படைத்தது எனத் தீர்ப்பளித்தார்.

அரசின் அம்முடிவை ஆதரிக்கத் தூண்டும் வகையிலேயே, அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களால் இறக்குமதித் தீர்வை யற்ற விதத்திலான வாகனக் கொள்வனவுச் சலுகை மூலம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை வேறு தரப்புகளுக்கு விற்பனை செய்வதற்கான சலுகை வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுத்தது.

அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையை பொதுமக்களது ஆதரவு வாக்குகளால் ஈட்டிக் கொண்டதாகக் கொள்ள இயலாது. உண்மையில் எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய உறுப்பினர்களுக்கு ஆசை காட்டி, சலுகைகள் வழங்கி அரச தரப்புக்கு இழுத்துக் கொண்டதனாலேயே, அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மைப் பலத்தை ஈட்டிக் கொண்டது. இது பொதுமக்களின் வாக்குப் பலத்தை நேரடியாக அவமதிக்கும் செயலாகும். இத்தகைய உறுப்பினர்களை உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே நாட்டின் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்யும் நிலை ஏற்பட்டிருந்தது.

இத்தகைய நிலையில் எதிர்காலத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா களனித் தொகுதியில் வழக்குகளைத் தாமே விசாரித்துத் தீர்ப்பளிக்க ஆரம்பித்தால் கூட அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஏனெனில் சபாநாயகர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் நிலைப்பாட்டுக்கு அமைய, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றெல்லாப் பதவி நிலையினரையும் விட மேம்பட்ட அதிகாரம் கொண்டவர்கள்.

இதன்படி எதிர்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்குமானால், அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதியரசரை அகற்றிவிட்டுத் தாம் விரும்பும் நீதியரசர் ஒருவரூடாக அந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்விக்க நாடாளுமன்றத்தால் இயலக் கூடும். அதுமட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் செயற்பாட்டால் அதிருப்தியுறும் பொதுமகனொருவர், நீதிமன்றத்தில் அந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்தால், நீதிமன்றத்தை விட நாடாளுமன்றமே மேம்பட்ட அதிகாரம் கொண்டதெனக் கூறி, குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரே நீதியரசராக இருந்து வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கினாலும் ஆச்சரியப்பட இயலாது. அதேபோன்று எதிர்காலத்தில் குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தின் தேர்தல் தொகுதியொன்றில் வழக்கொன்றை விசாரணை செய்ய, அரச மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்கிய தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட இடமில்லை.

இந்த அரசும் பிரதான எதிர்க்கட்சியும் இணைந்து நாட்டை அத்தகையதொரு நிலைக்கே இட்டுச் செல்கின்றன. இது மற்றொருவகையில், ஆரம்பத்தில் குறிப்பிட்ட மஹிந்தவின் மூன்றுவித அச்சங்களுக்கு முடிவு கட்டுவதற்கான வாய்ப்பாகவும் இருக்கலாம்.

ஹிட்லர் தானாக உருவாகவில்லை. ஹிட்லரை உருவாக்கியது ஜேர்மனிய நாடாளுமன்றமே. அந்த நாட்டின் நாடாளுமன்றத்தை நாசமாக்கிய கம்யூனிஸவாதிகளை ஒழித்துக்கட்டத் தமக்குச் சர்வ அதிகாரத்தை வழங்கும் மசோதாவுக்கு ஆதரவளிக்குமாறு ஹிட்லர் அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் சகல கட்சி உறுப்பினர்களையும் கோரி நின்றார். நாடாளுமன்றத்தின் மேம்பட்ட அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு தரப்பு கம்யூனிசவாதிகளைத் தவிர ஏனைய சகல தரப்புகளும் ஹிட்லருக்கு ஆதரவு வழங்கின. இதுவே ஹிட்லரிஸத்தின் ஆரம்பம்.

சோவியத் ரஷ்யாவுக்குப் பாடம் படிப்பிக்கப் புறப்பட்ட ஹிட்லர் ரஷ்யாவைக் கைப்பற்றுவது இலேசான தொன்றெனக் கருதினார். ஆனால் அதுவே அவரது அழிவுக்கு வழிகோலி வைத்தது. ஹிட்லரின் படைகளைத் தலைநகர் ஸ்டாலின்கிரேற் வரை முன்னேற அனுமதித்த ரஷ்யப் படைகள், கடும் குளிர் பருவ கால நிலை காரணமாக ஜேர்மனியப் படைகள் சிரமமுற்ற வேளையில் தருணம் பார்த்து ஜேர்மனியப் படைகளைச் சுற்றி வளைத்துத் தாக்கி அழித்தன.

ஹிட்லர் அன்று ரஷ்யாவின் ஸ்டாலின்கிராட்டுக்குச் சென்ற விதத்திலேயே மஹிந்த இன்று கொழும்பின் புதுக்கடை வளாகத்துக்குச் செல்ல முயல்கிறார்.

எதிர்வரும் மார்ச் மாதம், கடந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்த குற்றச்சாட்டுப் பிரேரணையில் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகளை மஹிந்த அரசு முறைப்படி நிறைவேற்றியுள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து பார்க்கப்படவுள்ள மாதமாகும். அது சரியாக, ஹிட்லரை கடும் குளிர் பருவகாலத்தில் ஸ்டாலின்கிராட்டுக்கு வரவழைத்தமை போன்றதொன்றாகும். மஹிந்த மார்ச் மாதத்தில் புதுக்கடை வளாகத்தில் மாட்டுப்பட்டுக் கொண்டால் அது கடும் குளிர் பருவ காலத்தில் ஹிட்லர், ஸ்டாலின்கிராட்டில் மாட்டுப்பட்டுக் கொண்டதைவிடப் பயங்கரமானதொன்றாக அமையக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரை வெலிகந்த புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பிய தன் ஊடாக, தான் மேற்கொண்ட கைது நடவடிக்கையை சாதாரணமானது எனக் காட்ட அரசு முயற்சிக்கின்றது.*

# எழுந்த பெண்கள் விழலாமா?

- துன்னாலைச் செல்வம்

இரத்தம் சிந்திய பெண் விடுதலைப் போரில், முதல் களப்பலியான நூர்ஜஹான், அவரது சகோதரர்களால் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்! பெண்களே! உங்களைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்கை உடைத்தெறியுங்கள் என்று புதுமைப் பெண்ணைப் பற்றி கவிதை பாடிய உஸ்பெகிய கவிஞர் ஹம்சா, நமது பாரதியாரை நினைவுபடுத்துகின்றார். மகளிரைக் கவிதை பாடி தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞன், வெறியர்களால் அடித்துக் கொல்லப்பட்டான்.

இதே போல இந்திய வரலாற்றில் மறக்க முடியாத முத்திரையை பதித்த சென்னம்மா 1778 ஆம் ஆண்டு பிறந்தார். தனது சிறு வயதிலேயே சென்னம்மா குதிரையேற்றம், வாள் வீச்சு, வில் வித்தை போன்றவற்றில் தேர்ச்சி பெற்றவரானார். தனது கணவனும் குழந்தையும் தொடர்ந்து மரணமடையவே தனக்குப் பின்னால் ஒரு வாரிசு தேவை என்பதால் சிவலிங்கப்பா என்ற சிறுவனைத் தத்தெடுத்து அவனுக்கு முடி சூட்டினார். அப்போது பரவலாக ஆங்கிலேய அரசு ஒரு சட்டம் இயற்றி இருந்தது. எந்த மன்னருக்கு வாரிசு இல்லையோ அந்த மன்னருக்குப் பின் அந்த நிலப்பரப்பு ஆங்கில அரசின் பகுதியாக ஆக்கப்படும்.

இந்த சதியை முறியடிக்க ராணி சென்னம்மா சிவலிங்கப்பாவை சுவீகாரம் எடுத்துக் கொண்டதைக் கண்ட ஆங்கிலேயர் பெரும்படை ஒன்றை அனுப்பி கோட்டையை முற்றுகையிட்டனர்.

கணவனை இழந்து கடுந்துயரில் உள்ள ஒரு விதவைப் பெண்ணின் சோகத்தை மட்டுமே பார்த்த ஆங்கிலேயர்கள் இவ்வளவு தீவிரமான போராளியைக் கனவிலும் நினைக்கவில்லை.

நூறுபேர் கொண்ட குதிரைப் படை கோட்டையை நோக்கிச் சென்றபோது கோட்டைக் கதவுகள் இவர்களை எதிர்பார்த்து திறந்தே இருந்தன. அலட்சிய சிரிப்புடன், படையைச் சேர்ந்த நூறு பேர் உள்ளே போனதும் கொல்லப்பட்டனர்.

தனது வீரர்களுக்கு கட்டளைகளை மட்டும் அல்ல களத்திலும் நின்று வழிகாட்டினார் ராணி சென்னம்மா. அவர் கவசமணிந்த குதிரையில் கம்பீரமாக அமர்ந்து வீரர்களுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள். மாவீரம் காட்டிய கிட்டூர் ராணியைக் கொல்லத் தன் கைத்துப்பாக்கியால் குறிபார்த்த கலெக்டரை ராணியின் மெய்க்காப்பாளன் பாலப்பா சுட்டுக் கொன்றான். அவனது மரணம் ஆங்கிலப் படைகளைச் சிதறி ஓடச் செய்தது. அதுவரை மக்களுக்கு அறிமுகமில்லாத நவீனப் போர்கருவிகள் கொண்ட ஆங்கிலேயரைத் தனது வீரத்தாலும், தந்திரத்தாலும் தோற்கடித்த ராணி சென்னம்மாவின் புகழ் எங்கும் போற்றப்பட்டது.

கிட்டூர் ராணி சென்னம்மாவால் அவமானப்பட்ட வெள்ளையர்கள் பல இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தங்களது ஆயிரக்கணக்கான படை வீரர்களை ஒருங்கிணைத்து மூன்று படைப் பிரிவுகளாகப் பிரிந்து கிட்டூர் கோட்டையை சாப்ளின் என்பவர் தலைமையில் முற்றுகையிட்டனர். ராணி சென்னம்மா சரணடையாவிட்டால் கோட்டை தகர்க்கப்படும் எனச் செய்தி அனுப்பப்பட்டது. சரணடைதலை விட சாவதே மேல் எனக் கருதிய சென்னம்மா கடுமையான யுத்தத்தை எதிர்கொண்டார். பலநாள்கள் நடந்த கடுமையான போரில் இரு தரப்பிலும் எண்ணற்ற வீரர்கள் உயிர் இழந்தனர். பீரங்கிகளுக்கும், துப்பாக்கிகளுக்கும் வேல் அம்புகளால் ஈடு கொடுக்க முடியாது கிட்டூர் வீரர்கள் கடைசி வரை போராடி மாண்டனர். கடைசியில் வீரப் போர் புரிந்த கிட்டூர் கோட்டை தகர்க்கப்பட்டது.

தேச விடுதலைக்குப் போராடிய காரணத்திற்காக கிடைத்த பரிசு கடும் சிறை. கொடுமை நிறைந்த தனிமைச் சிறையிலேயே ஐந்தாண்டுகள் இருந்து 1829 பெப்ரவரி 2ல் மரணமடைந்தார். இந்த வீரத்துக்காக, போராட்ட உணர்வுக்காக, எழுச்சிமிகு உதாரணத்துக்காக அவர் இறந்து 183 ஆண்டுகள் கடந்து இன்னும் வாழ்கிறார்.

ஈழத்தில் இடம்பெற்ற போரில் ஈடுபட்ட பெண்கள் தமக்கென ஓர் அடையாளத்தை வெளிப்படுத்தியிருந்தனர். ஒடுக்கப்பட்ட பெண் விடுதலை விடுதலைப் புலிகள் பெண் அணியில் காணப்பட்டது. இன்று போர் தோல்வி கண்ட நிலையில் மீண்டும் பெண்கள் அடிமை வாழ்வுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களின் எதிர் காலம் கேள்விக் குறியாக மாறி விட்டது. அரச படையில் இணைந்த தமிழ்ப் பெண்களில் 13 பேர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் மனநல விடுதியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். [illegible]க்கப்பட்ட பெண்களைப் பார்வையிடுவதற்கு பெற்றோரைத் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை. இந்த பெண்கள் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அந்தப் பகுதியில் அரச படையினர் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தால் அரச படைகளில் இணைந்த பெண்களின் உறவினர்கள் அதிர்ச்சியில் உறைந்து பதற்றத்துடன் காணப்படுகின்றனர். விடுதலைப் புலிகளின் அமைப்பில் இணைந்து போர்ப் பயிற்சி பெற்றுக் கொண்ட பெண்கள் மனநலம் பாதிக்கப்பட்டதாக தகவல் இல்லை. அரச படைகளில் இணைந்து கொண்ட தமிழ் பெண்களுக்கு எப்படி மனநிலையில் பாதிப்பு ஏற்பட்டது என்பது வெளிவராத செய்தியாகவுள்ளது. சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண்களின் பெற்றோர் வாய்திறந்து பேச முடியாது தவிக்கின்றனர். வைத்திய சாலை வட்டாரங்களில் எதற்கு அரச படையினர் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். போரால் பாதிக்கப்பட்டு வாழ்வாதார உதவிகள் இன்றி கஷ்டப்படும் குடும்பங்களில் உள்ள பெண்களை வலுக்கட்டாயமாகவோ அல்லது அவர்களின் விருப்பின் பெயரிலோ அரச படைகளில் உள்ளீர்க்கப்பட்டமை ஒரு சந்தேகத்தை பெற்றோர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

உலக வரலாற்றில் பெண்கள் விடுதலை வலிகள் சூழ்ந்த வாழ்வாகும். போராடிய பெண்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். போராடாமல் விட்டவர்களும் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். ஈழத்தில் பெண்கள் வாழ்வில் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழ்ப் பெண்களை காப்பாற்றுவது நாம் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்.

நாட்டில் மீண்டும் அமைதியற்ற நிலையைத் தோற்றுவிக்க அரசு மேற்கொள்ளும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு எதிராக அனைவரும் போராட வேண்டும் என்று பொது எதிர்க்கட்சிகளின் கூட்டணி அறைகூவல் விடுத்துள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரை வெலிகந்த புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பியதன் ஊடாக சட்ட விரோதமாகத் தான் மேற்கொண்ட கைது நடவடிக்கையை சாதாரணமானது எனக் காட்ட அரசு முயற்சிக்கின்றது.

போரில் இறந்த தமது உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் நடவடிக்கைகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நவம்பர் 27 ஆம் திகதி ஈடுபட்டிருந்தனர். அதன் போது படையினர் புகுந்து அவற்றைக் குழப்பினர். இதனைக் கண்டித்து அடுத்துவந்த மாணவர்கள் மேற்கொண்ட அமைதிப் போராட்டத்தையும் அரச படையினர் தாக்குதல் மூலம் அடக்கினர். பின்னர் மாணவர்களையும் கைது செய்தனர். இவ்வாறு மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டு கைது செய்யப்பட்ட மாணவர்கள் சிலருக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டும் எனக் கூறி அவர்களை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவதன் ஊடாக சட்ட விசாரணை முறையில் மேற்கொண்ட கைது நடவடிக்கை சாதாரணமானது எனக் காட்ட அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. நாட்டில் தீவிரவாதம் இல்லை என கடந்த மூன்று வருடங்களாகக் கூறி வந்த அரசு தனது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழர்கள் சாப்பிடுவதற்கு மட்டுமே சிந்திக்க வேண்டும். வேறு சிந்தனை இருக்க கூடாது என்ற விதத்தில் அரச படைகள் தமிழர்கள் மீது அரச பயங்கரவாதத்தைத் திணித்து வருகின்றது.

விடுதலைப் புலிகளின் போராட்டம் வீழ்ச்சி கண்ட நிலையில் தமிழர்களுக்கு காவலனாக எவரும் இல்லாத நிலையில் தமிழர்கள் காரணமின்றி தண்டிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இலங்கை பௌத்த நாடு என்ற கொள்கையில் சிங்கள மேலாதிக்கம் தலைதூக்கி நின்று செயற்படுவதால் தமிழர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். தமிழர்கள் கைதுக்கான காரணத்தை எவரும் கேட்க முடியாது. அப்படிக் கேட்பவரும் கைது செய்யப்படும் நிலைதான் எமது மண்ணில் ஏற்பட்டுள்ளது.

செய் அல்லது செத்து மடி என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சொன்னார். அதாவது தமிழர்கள் போராட முடியாமல் போனால் அடிமைகளாகத் தான் இலங்கையில் வாழும் நிலை ஏற்படும். போர் தோல்வி கண்ட மூன்றாண்டுக்குள்ளே தமிழ் பிரதேசங்களில் அரச படைகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மூன்று தசாப்தம் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டத்தை உலக நாடுகள் சேர்ந்து அழித்தன. இன்று தமிழ் இனம் அரச படைகளின் அடக்கு முறைக்குள் சிக்கி வெளிவர முடியாது தவிக்கின்றது. எனவே தான் அனைவரும் போராட வேண்டும் என்று எதிர் கட்சிகளின் கூட்டணி அறைகூவல் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பது நல்லது

ஓடி விளையாடு பாப்பா என்று சொல்கின்றோம். ஓடி விளையாடு தாத்தா என்று சொல்லுவதில்லை!

ஏன்?

தாத்தா ஓட ஆரம்பித்து விட்டால் தடுமாறி கீழே விழுந்து விடுவார்!

ஓடுகிற வயதில் ஓட வேண்டும். நடக்கின்ற வயதில் நடக்க வேண்டும். நடப்பது என்றால் சாதாரணமாக நினைக்க வேண்டாம். அது ஒரு நல்ல பயிற்சி.

வயதானவர்கள் பலபேருக்கு பொதுவாக உள்ள பிரச்சினைகள் என்ன?

மாலை நேரம் சரியாக பொழுது போகவில்லை, மனைவி கூட அருகே வந்து பேசுவதற்கு பயப்படுகிறாள், வயதானதினாலே உடல் பயிற்சியும் செய்ய முடியவில்லை! அதனால் பேரப்பிள்ளையுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடுவதும் கஷ்டம்! உடம்பு எடை சிறிது அதிகரித்த மாதிரி தெரிகின்றது, நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் இப்படியான தொல்லைகள்!

இதுக்கெல்லாம் ஒரே பரிகாரம் என்ன என்றால்.. பேசாது எழுந்து மெதுவாக "நடந்து" போக ஆரம்பிப்பதுதான்!

நடப்பது எல்லாவற்றுக்கும் நல்லது! வயதானவர்கள் மட்டும்தான் நடக்க வேண்டும் என்று இல்லை!

பெண்கள்-குழந்தைகள் எல்லோருக்கும் இது மிகவும் நல்லது.

"ஓய்வு" பெற்றதுக்கு பின்னர் மிகவும் ஆரோக்கியமாக இருக்கின்ற பலபேரைச் சந்தித்து ஒரு 'கணக்கெடுப்பு' நடத்தினார்கள்- அமெரிக்காவில்!

பலபேர் கூறினபதில் என்ன என்றால்...

"நாங்கள் தினமும் நான்கு கிலோ மீற்றருக்கு குறையாமல் நடக்கின்றோம்! வாரத்துக்கு ஆறு நாள் அவ்வாறு நடக்கிறோம்!" என்று கூறினார்கள். அதுமட்டுமல்லாது...

அவர்களெல்லாம் அதிக நாள் உயிர் வாழ முடிகின்றது.

நாங்கள் நடக்கும்போது எங்கள் உடம்பிற்குள் என்ன நடக்கின்றது என்றால்..

நடக்கும் போது எங்கள் தோல்-தசை இதற்கெல்லாம் பிராணவாயு கிடைக்கின்றது. அதனாலே சக்தியை வெளிவிடுகின்ற திறமை எங்கள் உடம்புக்கு அதிகமாகிறது.

இவ்வாறு நடப்பதால் இருதய நோய்-மூச்சு சம்பந்தமான சிக்கல்கள் எல்லாம் வராமல் ஒருபாதுகாப்புக் கிடைக்கின்றது. சுவாசப்பை-இருதயம் இதற்கெல்லாம் இலகுவான நிதானமான பயிற்சி கிடைக்கிறது.

வேகமாக நடக்கும் போது இரத்தக் குழாய்கள் விரிவடைகின்றது.

இரத்த ஓட்டம் சுறுசுறுப்பாகின்றது. இருதய பகுதிக்கு இரத்தம் வசதியாகக் கிடைக்கிறது. புகைப்பிடிப்பவர்கள் இரத்தத்திலே கரியமில வாயு-நிகொடின் இது போன்ற நச்சுப் பொருள் இருக்கும். அதையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு நடப்பது மிகவும் நல்லது.

இவ்வளவும் "கேட்டதற்கு பிறகு.." சரி நாங்களும் நடந்து பார்ப்போம் என்ற முடிவுக்கு வந்துவிட்டீர்களா?

அப்படி என்றால் உங்களுக்கு சில ஆலோசனைகள்:

நடக்க ஆரம்பிக்கின்றேன் என்று "தூர உள்ள கோயில்" வரைக்கும் போய்வருகின்றேன் என்று செல்லாதீர்கள்!

முதலில் ஒரு நாளைக்கு 'இரண்டு கிலோ மீற்றர்" என்று ஆரம்பியுங்கள். பிறகு சிறிது சிறிதாக அதிகப்படுத்தி ஐந்து கிலோ மீற்றர் வரைக்கும் செல்லுங்கள். அது போதுமானது.

"எப்போதாவது நேரம் கிடைக்கும் போது நடக்கலாம் என்று நினைக்காதீர்கள்! இதைத் தினமும் ஒரு பயிற்சியாக வைத்திருக்க வேண்டும்.

தினமும் ஒரு மணி நேரம் நடக்கிறதென்றால் அதை காலையிலே அரைமணி நேரம்-மாலையிலே அரைமணி நேரம் என்று பிரித்துக் கொள்ளலாம்.

முதலில் 15 நிமிடம் நடக்கின்றது... படிப்படியாக அதை கூடுதலாக்கி ஒரு மணிக்கு கொண்டு வரலாம். இதை இரண்டு மாதத்தில் செய்தால் போதுமானது.

எவ்வளவு வேகத்தில் நடப்பது என்றால்...

உங்கள் வசதியைப் பொறுத்து இதைத் தீர்மானித்து செய்யுங்கள்.

ஒரு மணித்தியாலத்துக்கு 3-5 கிலோ மீற்றர் வேகம் வரைக்கும் நடக்கலாம்!

இருதயக் கோளாறு உள்ளவர்கள்-மூச்சுக் கோளாறு உள்ளவர்கள் எல்லாம் இதை ஆரம்பிப்பதற்கு முதல் வைத்தியரைச் சந்தித்து இதுபற்றி பேசுவது நல்லது.

சாப்பிட்ட உடனே குளிர்காற்றிலேயோ நல்ல வெய்யிலிலோ நடக்காதீர்கள்!

நடக்கும் போது கால் வலியாக இருந்தால்.., மூச்சு இளைத்தால்.., பரவாயில்லை.. சிறிது நேரம் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டு பிறகு நடக்கலாம்!



அதற்காக உடம்பை இறுக்கமாக வைத்துக் கொண்டு கையையும் காலையும் வீசிக்கொண்டு செல்லாதீர்கள்!

உங்களுடன் ஒரு நண்பர், கணவன் இல்லை என்றால் மனைவி இவர்களும் நடந்தால் சிரமம் தெரியாமல் இருக்கும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அந்நியராட்சியிலும் அழிவடையாத கன்னாரையம்பதி ஸ்ரீராஜ ராஜேஸ்வரி



**ஞானி**

நெல்விளையும் வயல்களும் உப உணவுப் பயிர்கள் செய்கை பண்ணப்படும் தோட்ட நிலமும் சூழ்ந்திருக்க தாமரைத் தடாகத்துக்கு அருகே எழுந்தருளி இருந்து அருளாட்சி செய்கின்றார் ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீ ராஜராசேஸ்வரி அம்பாள். இவரது அருள் வியாபகம் அன்று தொட்டு இன்று வரை அடியார்களை ஈர்த்து வருகின்றது.

அந்நியராட்சிக் காலத்தில் இந்து ஆலயங்கள் எல்லாம் இடித்தழிக்கப்பட்டு இருந்த இடம் தெரியாமல் ஒழிக்கப்பட்ட காலப்பகுதியில் அம்பாளின் கோயில் இருந்தபடியே இருந்தது. ஆலயத்தை இடித்தழிக்க வந்த அந்நிய நாட்டு சிப்பாய்கள் "மாதா" என பூசித்து ஜெபம் செய்து நல்லருள் வேண்டி தியானித்தனர்.

அன்னியர் ஆட்சியில் ஆலயங்கள் பற்றிய தகவல்களைப் பதிவு செய்த வேளையில் "மாதா கோயில்" என பதிவு செய்யப்பட்டது. மாதா வழிபாடு கத்தோலிக்க சமயத்திலும் பிரதானமானது. எனவே தமது சமயத்துக்குரிய வழிபாட்டு தலம் என நம்பி ஆலயத்தை அழிக்காமல் வழிபட்டனர். இந்துக்கள் அம்பாளின் அற்புதத்தை வியந்து ஆலயச் சூழலில் கத்தோலிக்க சிப்பாய்கள் இல்லாததை அவதானித்து விட்டு பக்திபூர்வமாக வழிபட்டு அருள் பெற்றனர். அம்பாளின் அருள் வியாபகத்தை வியந்தனர்.

> ஆலயத்தைப் புனரமைத்துக் கல்லினால் கட்டுவதற்கு அம்பாள் அருள் கூர்ந்தமையால் 1975 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலயப்புனரமைப்பு திருப்பணிகள் நடைபெற்றன. வைரக்கல் கொண்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் பத்தாம் கட்டையில் நன்செய்யும்- புன்செய்யும் நிறைந்த அமைதியான சூழலில் வீதிக்குக் கிழக்குப் புறத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. வீதியால் செல்லும் போதே அம்பாளை அடியவர்கள் நெஞ்சாரத் தியானிப்பதற்கு ஏதுவாக வீதியோரத்தில் பல இலட்சம் ரூபா செலவில் அம்பாளின் திருவுருவங்களை உள்ளடக்கிய பெரியளவிலான வளைவு நிர்மாணிக்கப்படுகின்றது.

கன்னன் என்ற வம்சத்தில் வாழ்ந்து வந்த சூழலில் ஆரம்பகால ஆலயம் அமைத்திருந்தமையினால் கன்னாரையம்பதி எனப் பெயர் வரக் காரணமாயிற்று என்பர். நெல்லி மரத்தை தலவிருட்சமாகக் கொண்டு நெல்லி மரநிழலில் அமையப் பெற்ற ஆலயத்தின் பூர்வீக உரிமை ஞானசேகர முதலியாரின் வழித்தோன்றல்கள் என்றும் ஞானசேகர முதலியார் காலத்திற்கு பின்னர் நீலாயதாக்ஷி அம்மாவுக்கு தரும சாதனமாக கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து நீலாயதாக்ஷி அம்மாவின் பரம்பரை வாசிகள் ஆலயத்தை அடியவர்களின் உதவி ஒத்துழைப்புடன் நிர்வகித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அம்பாளுக்கு தீர்த்தக் கிணறு இல்லாமையினால் தெய்வதிரை என்னும் தோட்டத்தில் இருந்தே தண்ணீர் கொண்டுவரப்பட்டு அபிஷேகம் நடைபெற்று வந்தது. பிரபல வர்த்தகரான பொன்னையா ஆலயத்தில் கிணற்றை வெட்டுவித்து வைரக்கல்லினால் கட்டுவித்து கொடுத்துள்ளார். அன்றிலிருந்து அந்தக்கிணறு பயன்படுத்தப்பட்டுவருகிறது.

ஆலயத்தைப் புனரமைத்து கல்லினால் கட்டுவதற்கு அம்பாள் அருள் கூர்ந்தமையால் 1975 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலயபுனரமைப்பு திருப்பணிகள் நடைபெற்றன. வைரக்கல் கொண்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1995 ஆம் ஆண்டு ஆவணி மாதம் கோப்பாய் சிவஸ்ரீ வை.மு பரமசாமிக் குருக்கள், சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிகள் தலைமையில் நவகுண்டபக்ஷ யாகசாலை அமைத்து மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகக் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது.

2012 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பாலஸ்தானம் செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் நாள் சிவஸ்ரீ. வே.சரணிய புரீஸ்வரக் குருக்கள் சிவஸ்ரீ வே.நடராசக் குருக்கள், ஆகியோரின் தலைமையில் நவகுண்டபக்ஷ கும்பாபிஷேக நீராட்டு விழா நடைபெற்றது.

விசாலமான உட்பிரகாரத்தோடு கூடியதும், மூடு மண்டபங்களைக் கொண்டதுமான ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் யாழ்.மாவட்டத்தில் உள்ள முக்கியமான அம்பாள் ஆலயங்களில் ஒன்றாக விளங்குவதோடு நம்பிக்கை வைத்து வழிபட்டு நேர்த்தி செய்பவர்களின் குறைபாடுகளை நீக்கி நேர்த்தியை நிறைவு செய்யும் ஆலயமாக விளங்குகின்றது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கும் (ஆவரங்கால் சிவன் கோயில்) ஆவரங்கால் கன்னாரையம்பதி இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முதலமைச்சர் அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும்

## ஆளுநரிடம் சம்மதம் கேட்பதைத் தவிர்க்க வேண்டும் என்கிறார் அமைச்சர் ஹாபீஸ் நஸீர்

திருகோணமலை, டிசெ.14

தனது அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்துகின்ற முதலமைச்சராக கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் மாறவேண்டும் என்று கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபீஸ் நஸீர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முதலமைச்சர் செயலகத்துக்கான குழு நிலை விவாதம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண முதலமைச்சரின் கீழ் ஏராளமான திணைக்களங்களும் செயலகங்களும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அவற்றுக்கான நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் கீழ் இவ்வளவு திணைக்களங்களும் செயலகங்களும் இருப்பதாக ஒரு தோற்றப்பாடு இருப்பதென்னவோ உண்மைதான். ஆனால், இவை அனைத்தும் முதலமைச்சரின் கீழ்தான் செயற்படுகின்றனவா என்கிற கேள்வி எனக்குள் இருக்கிறது.

முதலமைச்சர் எல்லா விடயங்கள் குறித்தும் ஆளுநரிடமே கேட்டுக் கொண்டிருக்கிறார். இதை அவதானிக்கும்போது மிகவும் கவலையாக உள்ளது. இவ்வாறானதொரு நிலையிருந்தால் இந்த மாகாண சபையை எவ்வாறு முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்வது என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் இங்குள்ள மூவின மக்களுக்கும் நியாயமான முறையில் சேவைகளை வழங்க வேண்டும் என்கிற எண்ணம் கொண்டவர். ஆனால், அவருடைய இரண்டு கைகளும் கட்டப்பட்டுள்ள நிலையில் உள்ளார்.

மேற்படி வரவு- செலவுத் திட்டத்திலுள்ள 1.8 பில்லியன் ரூபா மூலதனச் செலவிலே முதலமைச்சரின் கீழ் வருகின்ற திணைக்களங்களுக்கும், செயலகங்களுக்குமான தொகைகளைக் கழித்துவிட்டுப் பார்த்தால், கிழக்கு மாகாண சபையின் ஏனைய அமைச்சுகள் அனைத்துக்கும் வெறும் 600 மில்லியன் ரூபாதான் வழங்கப்படுகிறது.

அவ்வாறு ஒதுக்கப்படுகின்ற தொகைகளிலும் பல மில்லியன் ரூபா வெட்டியெடுக்கப்படுகின்ற போது, இந்த மாகாண சபையில் எந்தவொரு வேலைத் திட்டத்தையும் முழுமையாகச் செய்ய முடியாது.

கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் நியாயமாகவும் நேர்மையாகவும் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றார். அவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கோ எனது அமைச்சுக்கோ இதுவரையில் பிரதம செயலாளர் எதையும் செய்யவில்லையென்றாலும் - அவரின் நேர்மைக்கு நன்றி செலுத்துவது இந்த இடத்தில் பொருத்தமாகும்-என்றார். (வ)

## வடிகால் வேலைகள் நடக்குமா? கோ-கின்றனர் பிரதேச மக்கள்



காத்தான்குடி நகரச்சபை பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி 4 ஆம் குறுக்குத் தெருவில் வடிகால் வேலைக்களுக்காக தோண்டப்பட்ட குழியில் இதுவரைக்கும் வேலைகள் இடம்பெறவில்லையென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மேற்படிகுழி தோண்டப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்தும் இன்னும் வீதியின் ஒரு பகுதியில் வடிகால் அமைப்பதற்கான எந்த வேலைகளும் இடம்பெறவில்லை. குறித்த வீதியில் மற்றுமொரு பகுதில் வடிகால் அமைப்பதற்கான வேலைகளில் கம்பிக் கூடு கட்டப்பட்டு அந்த வேலையும் இதுவரை பூர்த்தி செய்யப்படாத நிலையிலுள்ளது.

இதனால் இந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் தோண்டப்பட்ட அந்த குழியில் வெள்ள நீரும் தேங்கி நிற்பதால் டெங்கு அபாயமும் ஏற்படலாம் என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மிக விரைவாக மேற்படி வடிகானை அமைக்க வேண்டும் இல்லையேல் தோண்டப்பட்ட குழியை மூடித்தர வேண்டும் என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக காத்தான்குடி நகர சபைத் தலைவர் எஸ்.எச்.எம்.அஷ்பர் கருத்துத் தெரிவிக்கையில், 'இந்த விவாகரம் தொடர்பாக அந்த வடிகாலை அமைக்கும் நிதி நிறுவனத்துடனும் அதன் ஒப்பந்தகாரருடனும் பேசியுள்ளேன். அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன்' என்று தெரிவித்தார். (வ)

## தெனியாய தோட்டக் காணியை அபகரிக்க முயற்சிக்கிறதா அரசு?

### தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

திருகோணமலை,டிசெ.14

கொலன்னாவ தேர்தல் தொகுதிக்கு உட்பட தெனியாய ஏயஸ் தோட்டத்தில் தொழிலாளர்களின் தோட்டக் காணிகள் பறிபோவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட வேண்டியது அவசியம் என்று மத்திய மாகாணசபை உறுப்பினரும் இலங்கை ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவருமான சதாசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறித்த காணிகளில் வெளியாள்கள் அத்துமீறி பிரவேசித்துள்ளமையானது பெருந்தோட்டங்களில் 35 ஏக்கர் தரிசுக்காணிகளை அபகரிக்கும் அரசின் ஒரு முதற்கட்ட செயலாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

## மனித உரிமை தொடர்பில் விழிப்புணர்வுச் செயலமர்வு



மனித உரிமை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயலமர்வு ஒன்று சம்மாந்துறைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை கோல்டன் சிட்டி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இந்தச் செயலமர்வு நடைபெற்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் எம்.சறூக் தலைமையில் நடைபெற்ற மேற்படி செயலமர்வில் சம்மாந்துறை கோல்டன் சிட்டி லயன்ஸ் கழகத்தின் தலைவர் எஸ்.எம். இப்றாலெப்பை, செயலாளர் ஏ.ஆர்.எம்.சர்ஜூன், சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த தரணைக்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ)

## சுகாதார வாரத்தையொட்டி கருத்தரங்கு

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் வளவாளர்களாக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எம்.எம்.அனீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன் போது வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி ஏற்பாடு செய்த இரத்தான நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இரத்ததானம் செய்தனர். (வ)

## முதியோர் இல்லங்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள்



மட்டக்களப்பு, டிசெ.14

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முதியோர் இல்லங்களிலுள்ள முதியவர்களுக்கு மட்டக்களப்பு செலான் வங்கிக் கிளை அன்பளிப்புப் பொருள்களை வழங்கியுள்ளது. மட்டக்களப்பு கல்லடி யிலுள்ள முதியோர் இல்லம், மட்டக் களப்பு கல்வியன்காடு பிர தேசத்திலுள்ள முதியோர் இல்லம் ஆகியவற்றிலுள்ள முதியவர்களுக்கே மேற்படி அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு செலான் வங்கியின் முகாமையாளர் பத்மசிறி இளங்கோ, உதவி முகாமையாளர், செலான் வங்கியின் மட்டக்களப்பு கிளையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நேற்று முன் தினம் பிறந்தநாளை உடைய வங்கி வாடிக்கையாளர்களுக்காகக் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டதுடன், நத்தார் விசேட நிகழ்வும் நடைபெற்றது. (வ)

# தமிழ்மொழியில் சாதனை படைக்கும் அக்கரைப்பற்று வலய மாணவர்கள்

### கல்விப் பணிப்பாளர் பெருமிதம்

அக்கரைப்பற்று, டிசெ.14

அக்கரைப்பற்று கல்வி வலயம் அண்மைய காலங்களில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது. அதில் தாய் மொழியான தமிழ்மொழியில் தேசிய மட்டங்களில் மேற்படி சாதனை நிகழ்த்தப்பட்டுக் கொண்டுவருவது போற்றத் தக்கதாகும் என்று அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஸ்சேஹ் ஏ.எல்.காசீம் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ் மொழித் தினப்போட்டிகளில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது வலயத்தின் தமிழ் மொழிப்பிரிவு மாணவர்கள் அகில இலங்கை தமிழ்த்தின தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றிவாகை சூடியவர்கள் என்று பாராட்டப்படுகின்றனர்.

மாணவர்கள் தம் தாய் மொழியில் பெற்றுக் கொள்ளும் தேர்ச்சியானது அவர்களது அறிவு மேம்பாட்டுக்குப் பிரதான அடிப் படையாக அமைவதால் மொழி கற்பித்தல் செயற் பாடுகள் மேம்படுத்தப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

தமிழ்மொழிப் பாட அடைவை அதிகரிப்பதிலும் எமது தமிழ் மொழிப்பிரிவு சிறப்பாக இயங்குகின்றது. இந்த தேசியமட்டச் சாதனையாளர்களை ஊக்கப்படுத்தும் நடைமுறை கல்விச் செயற்பாட்டில் முக்கியமானது. அந்தவகையில் அந்த மாணவர்களையும், அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்-என்றார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.ஐ.எம். ஹனிபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பரீட்சைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எம்.முகம்மட், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான அ.ஸ.அகமதுகியாஸ், எம்.ஐ.ஏ. முத்தலிப் ஆகியோரும், அக்கரைப்பற்று வலயத்தின் கணக்காளர் கே.றிஸ்வியஹ்ஸர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம். சஹாப்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். கண் எரிச்சல், தூக்கமின்மை விலகும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**இடபர்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள்.

**மிதுனர்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.

**கடகர்:** அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். தலைவலி, இடுப்பு வலி நீங்கும். அயல் வீட்டாரின் அனாவசியத்தொல்லைகள் விலகும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.

**சிங்கர்:** வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்ட நாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

**கன்னி:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரபலமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பாக்கிகளை விரைந்து வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.

நாளை

கார்த்திகை - 30 சனிக்கிழமை 15.12.2012

திதி: துதியை சித்தம் மு.ப 10.33 வரை

நட்சத்திரம்: பூராடம் பி.ப 04.04 வரை

சுபநேரம்: 03.22- 04.52 வரை

ராகுகாலம்: 09.22- 10.52 வரை

**துலாபர்:** பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும்.

**விருச்சிகர்:** தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். உறவினர்கள், நண்பர்களால் பிரச்சினைகள் வரக்கூடும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு ஏற்படும்.

**தனுசு:** வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மகரர்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிட்டும்.

**கும்பர்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சித் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மீனர்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். குடும்ப விடயங்களை வெளிநபர்களிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | | | | | 6 | 3 | |
| 6 | 3 | | | | 2 | | 4 | |
| 5 | | | | 3 | 1 | | 9 | |
| 7 | | 4 | | | | | 5 | 3 |
| | 8 | 5 | | | | 1 | 7 | |
| 3 | 2 | | | | | 8 | | 4 |
| | 7 | | 4 | 8 | | | | 9 |
| | 9 | | 7 | | | | 1 | 6 |
| | 5 | 6 | | | | | 8 | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 8 | 7 | 6 | 1 | 9 | 2 | 3 |
| 2 | 1 | 7 | 8 | 9 | 3 | 5 | 6 | 4 |
| 9 | 3 | 6 | 5 | 4 | 2 | 8 | 1 | 7 |
| 3 | 7 | 2 | 1 | 5 | 6 | 4 | 8 | 9 |
| 4 | 5 | 9 | 2 | 8 | 7 | 1 | 3 | 6 |
| 6 | 8 | 1 | 9 | 3 | 4 | 2 | 7 | 5 |
| 1 | 9 | 5 | 6 | 7 | 8 | 3 | 4 | 2 |
| 7 | 2 | 3 | 4 | 1 | 9 | 6 | 5 | 8 |
| 8 | 6 | 4 | 3 | 2 | 5 | 7 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிக்கோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
15.03.1953

இறப்பு
14.12.2010

அமரர்
**மயில்வாகனம் சுந்தரலிங்கம்**
(கிராமசேவகர்– ஈச்சமோட்டை)

கட்டிய மனைவி கலங்கி நிற்க
ஈன்ற பிள்ளைகள் கரைந்துபோக
உற்றார், உறவினர், நண்பர்கள் உடைந்துபோக
இறைவனவன் இதயத்தில் காவியதீபமாய் நீர் இருக்க
ஈராண்டு சென்றபோதும் ஆறாது எங்கள் சோகம்
ஆறாது எங்கள் துன்பம் மாறாது எங்கள் அன்பு

உங்கள் பிரிவால் வாடும்
சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள்.

ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(26650) (45.6.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**குகதாசன் கனகரட்ணம்**

மலர்வு
05.03.1965

உதிர்வு
14.12.2011



அரணாய் இருந்தீர்
அரைவயதில் பிரிந்தீர்
ஆறாத துயரில்
அல்லல்பட வைத்தீர்
ஆண்டொன்று ஆனது
அகலவில்லை உம் நினைவுகள்

உங்கள் பிரிவால் வாடும்:- குடும்பத்தவர்கள்.
கனடா.

(26713)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றி இராணுவத்தில் இணைக்கப்பட்ட தமிழ் யுவதிகளை உடன் விடுதலை செய்க

## விக்கிரமபாகு வலியுறுத்து

கொழும்பு, டிசெ.14

யுத்தத்தின் பின்னர் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக துன்பங்களை அனுபவித்து வருகின்ற வடக்குத் தமிழ்ப் பெண்களிடம் 35 ஆயிரம் ரூபா சம்பளம் தருவதாகக் கூறி ஆசைகாட்டி அவர்களை இராணுவத்தில் சேர்த்து அரசு, துன்புறுத்துகின்றது என நவ சம சமாஜக் கட்சித் தெரிவித்தது.

இராணுவத்தில் சேர்க்கப்பட்ட சிலர் துன்புறுத்தப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இராணுவத்தின் இந்த நடவடிக்கையைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இராணுவத்தில் சேர்க்கப்பட்ட பெண்கள் உடன் விடுவிக்கப்பட வேண்டும் எனறும் அக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தில் பலவந்தமாக சேர்க்கப்பட்ட பெண்களுள் சிலர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஏன் இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்? இவர்களுக்கு என்ன நடந்தது?

இராணுவத்தில் சேர்க்கப்பட்ட தமிழ்ப் பெண்களைப் பார்ப்பதற்கு, அவர்களது பெற்றோருக்கும், இராணுவத்தினர் அனுமதி கொடுக்கவில்லை. 35 ஆயிரம் ரூபா சம்பளம் தருவதாகக் கூறி இராணுவத்தில் சேர்க்கப்பட்ட தமிழ்ப் பெண்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

### சோளப் பயிர் தோட்டத்தில் கஞ்சாச் செடி –இருவர் கைது

சோளப் பயிர்ச் செய்கை என்ற போர்வையில் கஞ்சா செடி வளர்த்து வந்த இருவர் ரம்பேவ - சங்கிலிகுளம் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிஹிந்தலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது அவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

# பல்கலை மாணவர் விடுதலைக்கு ஜனாதிபதி உத்தரவிட வேண்டும்

## குமரகுருபரன் கோரிக்கை

கொழும்பு, டிசெ.14

தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ள யாழ். பல்கலைக் கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் நேற்றுமுன்தினம் அவசர கோரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எவ்விதமான விசாரணைகளுமின்றி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மூவரை தடுப்பு முகாமுக்கு மாற்றியமை தவறான செயலாகும். இதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், மாணவர்களின் விடுதலைக்காகத் தொடர்ந்தும் போராடவுள்ளோம்.

பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அந்தக் குற்றத்தின் பாரதூரம் கருதி ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்படுவதுதான் சட்டவிதிமுறையாகும். ஆனால், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்த எடுப்பில் தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இது எந்த வகையில் நியாயம்?

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. அவர்கள் அமைதியான முறையில் கார்த்திகை தீபமேற்றியுள்ளனர். இதனைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் திருநாளோடு இணைத்துப் பார்த்தால்கூட மாணவர்கள் தடுப்பு முகாமுக்கு மாற்றப்படக் கூடியவர்களல்லர்.

ஒத்திவைக்கப்பட்ட தண்டனையை வழங்கியிருந்தால் கூட மாணவர்களின் மனங்களில் நல்லெண்ணம் தோன்றியிருக்கும். ஆனால், அரசு காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டுள்ளது. இதனால் மாணவர்களின் மனங்களில் கசப்புணர்வு ஏற்பட்டிருக்கலாம். நல்லெண்ண அடிப்படையில் படையினர் செயற்பட்டால் மட்டுமே எதிர்காலத்தில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம். இல்லையேல், அது எட்டாக் கனியாகவே விளங்கும்.

அதேவேளை, தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ள மாணவர்களை விடுதலைசெய்யுமாறு ஜனாதிபதி உடன் உத்தரவிட வேண்டும் என்பது ஜனநாயக மக்கள் முன்னணியின் பணிவான வேண்டுகோளாகும் - என்றார்.

# வெள்ளவத்தை வர்த்தகர் கடத்தல் ரூ.60 லட்சம் கொள்ளை; கார் தீக்கிரை

## கொள்ளைக் கும்பல் வெறியாட்டம்; வர்த்தகர் வைத்தியசாலையில்

கொழும்பு, டிசெ.14

வெள்ளவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகரொருவரை காருடன் கடத்திச் சென்ற கொள்ளைக் கும்பலொன்று, காரிலிருந்து 60 இலட்சம் ரூபாவை கொள்ளையிட்டு, காருக்கும் தீ வைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

கையடக்கத் தொலைபேசி சார்ஜர் வயரொன்றினால் குறித்த வர்த்தகரின் கழுத்தை நெரித்துள்ள கொள்ளையர் கும்பல், அவர் மயக்கமுற்றதை அடுத்து காருடன் கடத்திச் சென்றே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மயக்கமுற்ற வர்த்தகரை வெலிபன்ன, ஹேன்பிடி பகுதியில் வைத்து காரிலிருந்து இழுத்து வெளியே வீசிவிட்டு பணத்தைக் கொள்ளையிட்டதன் பின்னர், குறித்த காரைத் தீயிட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையினூடாகவே மேற்படி கொள்ளையர்கள் வர்த்தகரைக் காருடன் கடத்திக் கொண்டு வெலிபன்னவுக்குச் சென்றுள்ளனர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர் நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வெலிபன்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கட்சியை விமர்சித்ததால் உறுப்புரிமை ரத்து

கொழும்பு, டிசெ.14

ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சனம் செய்த பிரதேச சபை உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டுள்ளது என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற கட்சியின் 54ஆவது மாநாடு தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதேச சபை உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையே இவ்வாறு ரத்து செய்யப்பட்டுள்ளது.

கட்சியை விமர்சனம் செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சித் தலைமை ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 12.12.12.12.12 குழந்தை



இரத்தினபுரி வைத்தியசாலையில் தாயொருவர் 2012 ஆம் ஆண்டு 12 மாதம் 12 ஆம் திகதியான நேற்றுமுன்தினம் புதன்கிழமை பகல் 12.12 மணிக்கு குழந்தை பிரசவித்துள்ளார். தொம்பேயைச் சேர்ந்த ஆசிரியரான சுசந்தி சுசந்திக்காவத்தே (வயது-31) மேற்படி அபூர்வ நேரத்தில் குழந்தை பிறந்துள்ளது.

### புதிய தூதுவர்கள் நியமனம்



கொழும்பு, டிசெ.14

இஸ்ரேல் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர்களை அரசு நியமித்துள்ளது. இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வழங்கியுள்ளார்.

இதற்கமைய, இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவராக சரத் விஜேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இஸ்ரேலிய தூதுவராலயத்தை கொழும்பில் திறப்பதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்ற நிலையிலேயே அரசு, இஸ்ரேலுக்கான புதிய தூதுவரை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேபாளத்திற்கான இலங்கைத் தூதராக டப்ளியூ. என். செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

### கைதிக்கு ஹெரோயின் கொண்டு சென்ற இருவர் கைது

காலி சிறைச்சாலைக்கு கைதியை பார்வையிடச் சென்றவர்கள் இருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரிடமிருந்து 3 கிராம்கள் 510 மில்லி கிராம்கள் அளவிலான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு வழங்கு வதற்காக சந்தேகநபர்கள் இதனை எடுத்துச் சென்றி ருக்கலாம் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

# ஜனாதிபதி நியமிக்கும் சுயாதீனக் குழு நடுநிலையாக இருத்தல் வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

கொழும்பு, டிசெ.14

பிரதம நீதியரசர் விவகாரம் குறித்ததான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கையை ஆராய்வதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ள குழுவானது பக்கச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் கோரிக்கை விடுத் துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்தியுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பில், சுயாதீன குழுவொன்றை அமைத்து அது குறித்து ஆராய்ந்த பின்னரே தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்தானது நாட்டில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இது குறித்து பலதரப்பினராலும் பலகோணங்களில் பேசப்பட்டு வருகின்ற நிலையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்து குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் சுயாதீனக்குழு பக்கச் சார்பற்றதாக அமைய வேண்டுமெனில், பொது நலவாய நாடுகள் அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சங்க பொதுச் செயலாளர் பிரேரிக்கும் நபர்கள் அக்குழுவில் உள்ளடக்கப்படவேண்டும்.

அப்படியல்லாது ஓய்வு பெற்ற இலங்கையின் உயர் நீதிமன்ற நீதிபதிகள் அல்லது அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ வித்தாரண, டியூ குணசேகர ஆகியோர் நியமிக்கப்பட்டாலும் கூட சுயாதீன குழுவின் பக்கச்சார்பற்ற தன்மையை பாதுகாக்க முடியாது .

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்ததன் மூலம் அரசு தான் வெட்டிய குழிக்குள் தானே விழுந்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறி விட்டது

நாகரட்ணம் நந்தவேள் என்பவருடைய தே. அ. அட்டை (781654582V) 10/12/2012 திங்கட் கிழமை சுன்னாகத்திற்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0774563660 (26777) (6.7.4)

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

மசி பேர்குசன்-135 DL

NO. NTRD 2234

தொடர்பு: 0777 111 249,

07 11995 991.

(26775) (6.7.4)

## வீடு வாடகைக்கு

நல்லூர், கோயில் வீதியில் அமைந்துள்ள 16 அறைகள் கொண்ட மேல் மாடி வீடு அரச நிறுவனங்கள், அல்லது தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

தொ.பே. இல. 07777 91912

(26778) (6.7.4)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின்
ஆரம்பப் பிரிவு ஆசிரியையான
திருமதி குலேந்தினி குணசீலன்
அவர்களின் அன்புத் தந்தை

**தம்பு குலசேகரம்**

அவர்கள் 11.12.2012 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஆசிரியர் கழகம்.
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

(சி/2173) (6.7.4)

## வேலை வாய்ப்பு

யாழ் . மத்தியில் இயங்கி வரும் பிரபல புத்தக நிறுவனத்திற்கு ஆண், பெண் ஊழியர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். வேலை நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை வழங்கப்படும்.

தொடர்பு: 234, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.

021 222 2573

(சி/2158) (6.7.4)

## வியப்பூட்டும் விலைக்குறைப்பு

தினசரி சென்னை சேவை




சென்னை 6,400/= (செல்ல மட்டும்)
சென்னை 15,500/= upwards (சென்று திரும்ப)
மும்பாய் 10,000/= upwards (செல்ல மட்டும்)
மும்பாய் 22,000/= upwards (சென்று திரும்ப)
(all inclusive) Upwards

AIR INDIA express

Groups fares offer only over 30 passengers.

www.airindiaexpress.in

Contact for further information:
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818
or Contact your nearest Travel Agent

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com

0215671111


## யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் சிற்றுண்டிச் சாலை குத்தகைக்கான கேள்வி அறிவித்தல்

யாழ். மாநகர சபை வளாகத்தினுள் பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்துக்குச் சொந்தமான சிற்றுண்டிச் சாலைக் கட்டடமும், தளபாடங்களும், சமையல் பாத்திரங்களும் எதிர்வரும் 01.01.2013 ஆம் திகதி முதல் 31.12.2013 ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்துக்கான குத்தகைக்கு கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

01. கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 300/=, மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 1000/= செலுத்து வதன் பேரில் வழங்கப்படும்.(கேள்விப் படிவங்களில் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)
02. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மேற்படி சங்க அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. வருடாந்தம் ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா 135,000/= (நூற்று முப்பத்தையாயிரம் மட்டும் வரிகள் நீங்கலாக)
04. கேள்விப் படிவங்கள் 14.12.2012 ஆம் திகதி தொடக்கம் 24.12.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
05. கிடைக்கப்பெறும் கேள்விகள் 26.12.2012 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.
06. மேலதிக விவரங்களை மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள

க. மோகனரூபன் செயலாளர்: (சி/2164)(45.6.7) நா. இரகுமார் தலைவர்:

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பணிநிலை வெற்றிடம்

### விற்பனை உதவியாளர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

1. சம்பள அளவுத்திட்டம் - (கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 308/15 ஆவது சம்பளக்குறியீடு)

9450 - 11000
75x10 - 80x10

இதரபடிகள்,விசேட படிகளும் வழங்கப்படும்.

2. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. தகைமைகள் :-
   அ) கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்ட விற்பனை உதவியாளர் பதவி ஒன்றில் 05 வருடத்துக்குக் குறையாத அனுபவம்

   அல்லது

   ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாத்தாரண தரம்) சான்றிதழ் க.பொ.த (சாதாரண தரத்தில்) எண் கணிதம்/ வர்த்தக கணிதம்/ கணிதம்/ மற்றும் சிங்களம்/தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தி.
4. விண்ணப்பிக்கும் முறை :- மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத்தலைமைக்காரியாலயத்தில் ரூபா10.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விற்பனை உதவியாளர் 308/15 பதவிக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு "பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், 127, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு 2012.12.25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி சங்கப்பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

(சி/2162) (6.11)

## துணுக்காய், மல்லாவி, ஐயன்குளம், பொதுச்சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழியிறைச்சி கடைகளுக்கான

## குத்தகை மீள் கேள்வி அறிவித்தல் -2013

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2013 தொடக்கம் 31.12.2013வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்வி பத்திரம் வழங்கும் திகதி | :- (அலுவலக நாட்களில் மு.ப8.30 -பி.ப3.00 ) |
| காலம் | :- 14.12.2012 - 17.12.2012 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | :- 19.12.2012 நண்பகல் 12 மணிவரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | :- 19.12.2012 பி.பகல் 2.00 மணிக்கு |
| கேள்வி திறக்கும் இடம் | :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம் |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர் துணுக்காய் பிரதேசசபை துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும்.இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆட்டிறைச்சி கடை | துணுக்காய் | 15,000.00 | 1,500.00 | 500.00 |
| 2 | மாட்டிறைச்சி கடை | துணுக்காய் | 200,000.00 | 2,500.00 | 500.00 |
| 3 | கோழிஇறைச்சி கடை | துணுக்காய் | 15,000.00 | 1,500.00 | 500.00 |
| 4 | மாட்டிறைச்சி கடை | மல்லாவி | 2,300,500.00 | 2,500.00 | 500.00 |
| 5 | கோழிஇறைச்சி கடை | மல்லாவி | 211,550.00 | 1,500.00 | 500.00 |
| 6 | ஆட்டிறைச்சி கடை | ஐயன்குளம் | 9,000.00 | 1,500.00 | 500.00 |
| 7 | மாட்டிறைச்சி கடை | ஐயன்குளம் | 90,000.00 | 2,500.00 | 500.00 |
| 8 | கோழிஇறைச்சி கடை | ஐயன்குளம் | 9,000.00 | 1,500.00 | 500.00 |

பொதுச்சந்தை

| இல | பொதுக் குத்தகை வகை | இடம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் வைப்பு பணம் | மீளளிக்கப்பட்ட முடியாத கேள்வி கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | துணுக்காய்சந்தையும்,துவிச்சக்கர வண்டிபாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 20,000.00 | 1,500.00 | 500.00 |
| 2 | மல்லாவிபொதுச்சந்தையும்துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,343,225.00 | 1,500.00 | 500.00 |
| 3 | யைன்குளம்பொதுச்சந்தையும்துவிச்சக்கரவண்டிபாதுகாப்பு நிலையமும் | ஐயன்குளம் | 18,000.00 | 1,500.00 | 500.00 |

நிபந்தனைகள்

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாக கணிக்கப்பட்டவர்கள் எனத் தெரியவருமிடத்து தகுதியற்றவர்களாக கருதப்படுவர்
3. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது
4. கேள்விப்படிவ கட்டணம், கேள்வித்தொகை,மாதவாடகை,என்பவற்றிற்கு12% பெறுமதி சேர்வரியும் 2% தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்குகாலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
5. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
6. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
7. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
8. இறைச்சிக்காக ஆடு,மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களிளுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
9. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
10. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**வீ.இராசரத்தினம்** தவிசாளர்
பிரதேசசபை, துணுக்காய்.

(C/2169)(2.6)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன 25 ஆயிரம் கருக்கள் சிதைக்கப்படுகின்றன

## இலங்கையில் வருடாந்தம் இந்த நிலை என மருத்துவர் திருமகள் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.14

இலங்கையில் வருடாந்தம் 36 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. அதேவேளை 25 ஆயிரம் கருக்கள் சிதைக்கப்படுகின்றன. யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வைத்திய அதிகாரி திருமதி எஸ். திருமகள் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தைமுன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். கலைத்தூது கலையகத்தில் அரச மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான குழுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பெண்கள் உரிமைகள் எனும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

பெண்களின் உரிமைகள், கலாசாரம் மற்றும் குடும்பச் சூழல்களால் மீறப்படுகின்றன. குறிப்பாக கருச்சிதைவுக்கு உள்ளாக்கப்படுகின்ற பெண்ணின் உரிமை குடும்பத்தால் மீறப்படுகிறது. இதனைவிட மதுபோதையில் ஒரு ஆண் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் போது பெண்ணின் உரிமை, பொருளாதாரம் பாதிப்படைகிறது. குடும்பப் பெண்ணின் உளம் பாதிப்படையும் போது அவர்களது பிள்ளைகளின் உரிமைகளும் மறுக்கப்படுகின்றன.

பெண்களின் உரிமைகள் சரியாக வெளிப்படுத்த முடியாமல் இருப்பது பிள்ளைகளின் உளத்தையும் பாதிப்படையச் செய்கிறது. போர்க் காலச் சூழலில் வன்னிப்பகுதியில் 18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் திருமணம் முடித்து கணவனைப் பறிகொடுத்தும் அதற்கான மரணச் சான்றிதழ் பெற முடியாமல் கணவனின் சொத்துரிமைகளைக் கூட சொந்தம் கொண்டாட முடியாத நிலையில் உள்ளனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட முடியாமல் முடக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் 40 ஆயிரம் பெண்கள் விதவைகளாக உள்ளனர் என்று தகவல் கூறுகின்றன. இதனால் பெண்களுக்கான பாதுகாப்பு, உணவு போன்ற அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு முக்கிய தேவையான கணவனின் மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதே தற்போதைய தேவையாக உள்ளது. எனவே அதனைப் பெற்றுக் கொடுத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த அனைவரும் முன்வரவேண்டும்- என்றார். சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக இணைப்பாளர் எஸ்.கனகராஜ் தலைமையில் இடம்பெற்றன.



மங்கள விளக்கை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆர்.ரி.விக்கினராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டதுறை விரிவுரையாளர் கே.குருபரன் யாழ். பிராந்திய சுகாதாரவைத்திய திகாரி பணிமனை வைத்தியதிகாரி திருமதி சிவசங்கர் திருமகள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா, யாழ்ப்பாணம் தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் கனகேஸ்வரன், வட மாகாண மினிபஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெங்காதரன், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பின் செயலாளர் சு.பரமநாதன், ஐக்கிய நாடுகள் சபையின் யாழ்.மாவட்ட வதிவிட பிரதிநிதி உட்பட மற்றும் பலர் ஏற்றி வைத்தனர். (ம-5-14-86)



சுகாதார வாரத்தை முன்னிட்டு சுகாதார வைத்திய அதிகாரி சுகாதாரப் பரிசோதகர்கள் ஏற்பாடு செய்த சுகாதார விழிப்புணர்வுப் பேரணி நேற்றுக் காலை நல்லூர் பிரதேச செயலகத்தில் இருந்து கோண்டாவில் வரை இடம்பெற்றது. (ம-7)

## நேரக் கணிப்பாளரைத் தாக்கியதால் சாரதியின் சேவை இடைநிறுத்தம்

சுன்னாகம் தனியார் பஸ் தரிப்பிடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த நேரக் கணிப்பாளரைத் தாக்கியமைக்காக 769 வழி தெல்லிப்பழை- யாழ்ப்பாணம் தனியார் பஸ்ஸின் சாரதி 10 நாள்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று தனியார் பஸ் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை- யாழ்ப்பாணத்துக்கான 769 வழி தனியார் பஸ் நேற்று முன்தினம் சேவையில் ஈடுபட்டிருந்த போது சுன்னாகம் தனியார் பஸ் தரிப்பிடத்தில் நேரக் கணிப்புக்காக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாக செல்லவேண்டாம் எனத் தடுத்த நேரக் கணிப்பாளரை சாரதி வாகனத்தை விட்டு இறங்கி வந்து தாக்கியுள்ளார் என்று கூறப்பட்டது.

தனியார் பஸ் சங்கத்தின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக கடமையில் ஈடுபட்டிருக்கும் சாரதி பஸ்ஸின் ஆசனத்தை விட்டு இறங்குவது தவிர்க்கப்பட்டுள்ளது. மீறி ஆசனத்தை விட்டு இறங்கினால் 10 நாள்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தனியார் பஸ் இணையம் கடமை நேரம் பஸ்ஸில் இருந்து இறங்கிய சாரதியை 10 நாள்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தியுள்ளது- என்று அவர் மேலும் கூறினார். (ம-14-5)

## சுகாதார வாரத்தை முன்னிட்டு திடீர் சோதனை

தென்மராட்சி, டிசெ.14

தேசிய சுகாதார வாரத்தையொட்டி சாவகச்சேரி நகர சபையினர் பொலிஸாருடன் இணைந்து சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்களின் மீது திடீர் சோதனைகளை நடத்தினர்.

வர்த்தக நிலையமொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான பொருள்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு வர்த்தகரின் சம்மதத்துடன் அவை அழிக்கப்பட்டன.

பொதுச் சந்தை வளாகத்தினுள் கட்டண கழிப்பறை, இலவச கழிப்பறை ஆகியவை இருந்தும் சந்தை வளாகத்தினுள் சிறுநீர் கழித்த வர்த்தகர்களை பொலிஸார் கையும் மெய்யுமாகப் பிடித்து எச்சரிக்கை செய்து விடுவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)


### வயோதிப நோயாளியை பராமரிப்பதற்கு உடனடியாக ஆண்கள் தேவை

தெரிவுக்கான தகைமைகள் :
- கருணை உள்ளமுடைய
- நோயாளியை உற்சாகப் படுத்தக்கூடிய
- படுக்கையிலே பராமரிக்கக்கூடிய
- யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருக்கக்கூடிய
- 35 வயதுக்கு மேற்பட்ட
- முன்னனுபவமுள்ள
- நல்ல பழக்கங்களுள்ள
- ஆண்கள் தேவை

நல்ல சம்பளமும் ஆண்டிறுதியில் மேலதிகக் கொடுப்பனவும் உயர்தர உணவும், தங்குமிட வசதியும் கொடுக்கப்படும்.
தங்கியிருக்க விருப்பமற்றோர் நாளாந்த சுழற்சி முறையிலும் வேலை செய்யலாம்.
நீங்கள் அழைக்க வேண்டிய தொ.பே. இல. : 075 4645 760, 021 222 6220
shan 951 @ gmail .com (26763) (6.7.4)



### பிறந்தநாள் நினைவும் 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



தோற்றம் 14.12.1924

மறைவு 04.12.1985

அமரர் E.K.சண்முகநாதன்
(ஓய்வுபெற்ற முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

ஆசிரியராய், அதிபராய், கல்விப் பணிப்பாளராய்
சமூக சேவகனாய், குடும்பத் தலைவனாய்
ஆற்றிய பணிகள் தான் எண்ணிலடங்கா
பண்பின் சிகரமே! பாசத்தின் திருவுருவே
நின் பணிகள் என்றும் உம் புகழைத் தாங்கி நிற்கும்.

உம் பிரிவால் துயருறும்
137, பலாலி வீதி, திருநெல்வேலி.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



@uthayan.com
2156711111



### கல்விப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
#### பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி

1) பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி முழு நேரம் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 2010
2) பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி பகுதிநேரம் I, இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 2010

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 07.12.2012 ஆம் திகதி முதல் 28.12.2012 ஆம் திகதி வரை கல்வியியற்துறை அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.
பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை கல்வியியல் துறை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C/2168) (6.11)



### வவுனியாவில் கடை வாடகைக்கு

93 அடி நீளமும், 11 அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக ) வாடகைக்கு விடப்படும்.
* ஹோட்டல்கள் தவிர்க்கப்படும்.
* தரகர் தேவையில்லை.
முகவரி: இல 66, புகையிரத நிலைய வீதி,
வைரவபுளியங்குளம் வவுனியா. (24362) (6.7.4)
தொடர்பு: 024 2220112



### தவறிவிட்டது

செல்வநாயகம் இஸ்ரலின்குமார் என்பவருடைய தே.அ. அட்டை (800814723V) 11.12.2012 செவ்வாய்க் கிழமை ஆனைப்பந்திச் சந்திக்கும் கச்சேரி நல்லூர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:0774367017 [26768][2.6.7]



### விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

வடமராட்சி வடக்கு, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்- புலோலி, பருத்தித்துறை

இடம்:- கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை.
காலம்:- 22.12.2012 சனிக்கிழமை
நேரம்:- முற்பகல் 10 மணி


மேற்படி விசேட பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் சு.ஜனார்த்தனன் அவர்களது தலைமையில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- சங்க அங்கத்தவர்களின் தற்போதைய வதிவிட விபரங்கள் முழுமையாக எம்மிடம் இல்லாமையால் எல்லா அங்கத்தவர்களும் இதனைப் பொது அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர். (25547)(2.6.7) செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு புதிய பதிப்பாக வெளிவரும் Angry Birds




உலகளாவிய ரீதியில் கணினி விளையாட்டு பிரியர்களை கட்டிப்போட்ட விளையாட்டுக்களில் Angry Birds ஆனது மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இக்கணினி விளையாட்டானது காலத்திற்கு காலம் மேன்மேலும் மெருகூட்டப்பட்டு புதிதாக வெளியிடப்படுவதுண்டு.

இதன் அடிப்படையில் தற்போது கிறிஸ்மஸ் தினத்தினை முன்னிட்டு அதன் புதிய Level - கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் 25 ஆம் திகதியை இலக்காகக் கொண்டு 25 Level - கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது இந்த Level - கள் நாள் ஒன்றுக்கு ஒன்று வீதம் அதிகரித்து 25ம் திகதி 25 Level - களை அடைந்துவிடும். மேலும் இப்புதிய பதிப்பில் 3 இரகசியமான Level - கள் காணப்படுவதுடன் ஒரு போனஸ் Level - இனையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கணினி விளையாட்டை Android சாதனங்களுக்காக Google Play Store - இலிருந்தும், iOS சாதனங்களுக்காக Apple App Store & இருந்தும் தரவிறக்கம் செய்ய முடியும்.

## இணைந்தன ஜிமெயில், கூகுள் ட்ரைவ் பெரிய கோப்புக்களை அனுப்பு வதில் புதிய சாதனை!

ஜிமெயில் பாவனையாளர்களுக்கு மகிழ்வைத் தரும் செய்தியாக கூகுள் புதிய வசதியொன்றை அறிவித்துள்ளது.

இதுவரை மின்னஞ்சல் மூலம் குறைந்தளவு கொண்ட கோப்புக்களையே (உ+ம் 10 MB அல்லது 25 MB) அனுப்ப முடிந்துள்ளது.

பிரபலமான ஜிமெயில் சேவை கூகுளின் மற்றுமொரு சேவையான கூகுள் ட்ரைவ்பின் இணைவதாக அறிவித்தது அந்த நிறுவனம். இப்புதிய வசதியால் 400 மடங்கு பெரியளவுள்ள கோப்புக்களை மின்னஞ்சல் இணைப்பாக அனுப்பமுடியும். இலவச மின்னஞ்சல் சேவையில் இதுவொரு சாதனையாக கருதப்படுகின்றது.

இதன் மூலம் 10GB அளவுள்ள கோப்புக்களை மின்னஞ்சல் இணைப்பாக அனுப்பமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# I Phone 5S இன் புகைப்படங்கள் வெளியானது

முதன் முறையாக iPhone 5S-இன் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி உள்ளாகின.

தாய்வானைச் சேர்ந்த முக்கிய நிறுவனமொன்று iPhone 5S-இன் புகைப்படங்கள் மற்றும் அதனை பற்றிய தகவல்கள் கொண்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் படி, iPhone 5Sலிருந்து Rear Shell என்ற அமைப்பு முழுவதும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகவும், மற்ற போனுக்கு பின்னாலிருந்த 'X' என்ற குறியீடும் நீக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

iPhone 5-Bன் பின்பகுதியை ஃபாக்ஸ்கான் சப்பளை என்ற நிறுவனம்தான் தயாரித்திருந்தது. இந்த முறையும் சில பகுதிகளை அவர்களே தயாரிக்கிறார்கள் எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மேலும் இதற்கான முறையான அறிவிப்பை அப்பிள் நிறுவனம் உலக தொழில்நுட்ப நிபுணர்கள் மாநாட்டில்(WWDC) வெளியிடும் என எதிர்பார்க்கலாம். இந்த மாநாடு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் நடக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.




# HTC அறிமுகப்படுத்தும் J Butterfly கைபேசிகள்

கைபேசி உற்பத்தியில் தனக்கென ஓர் இடத்தை பிடித்திருக்கும் HTC நிறுவனமானது J Butterfly எனும் தனது புதிய கைபேசியை அறிமுகப்படுத்துகின்றது.

Android 4.1 Jelly Bean இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட குறித்த கைபேசிகள் 5 அங்குலமுடையதும் 1920 x 1080 Pixel Resolution உடையதுமான HD தொடுதிரையைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

மேலும் 1.5GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Qualcomm Snapdragon S4 Pro processor மற்றும் பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளதோடு 8 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமரா, 2.1 மெகாபிக்சல்கள் உடைய துணைக்கமரா போன்ற அம்சங்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Samsung Unbreakable Screen னை அறிமுகப்படுத்துகின்றது

கைத்தொலைபேசி உற்பத்தியில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் Samsung நிறுவனம் சிதைவடையாததும், வளைக்கக்கூடியதுமான(நெகிழ்தன்மை கொண்ட) தொடுதிரையை அறிமுகப்படுத்துகின்றது.

அடுத்தவருடம் ஏப்ரல் மாதமளவில் அந்தநிறுவனம் வெளியிடத் திட்டமிட்டிருக்கும் Galaxy S IV கைத்தொலைபேசியில் இத்தொழில் நுட்பம் பயன்படுத்தப்படலாம் என்று தெரிகின்றது.

இதேவேளை Galaxy S IV கைபேசியின் தொடுதிரைகள் 5 அங்குல அளவுடையதாகவும், AMOLED தொழில்நுட்பத்தினையும் உள்ளடக்கலாக 1920 x 1080 Pixel உடையதான HD Resolution உடன் தயாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்
24
-
07
-
1932



மறைவு
26
-
11
-
2011

## அமரர் துரையப்பா கோவிந்தசாமி

ஓடிவிட்டது ஒரு வருடம் ஆனால்
கல்லில் எழுத்துப்போல் உங்கள் நினைவுகள்
எத்தனை வருடங்கள் உருண்டோடினாலும்
உங்கள் இழப்பு என்றும் மறக்க முடியாத பேரிழப்பாகும்

2ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
(சி/2117)(5.6.7)

ஆறாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கேள்வி அறிவித்தல்

**பரப்பு 1. குளி 09.00 விஸ்தீரணமுள்ள வீட்டுடன் அமைந்த காணியில் அரைவாசி (¾ பரப்பு) விற்பனை**

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பொறுப்பாகவும், பதிலீடாகவும் அறுதியாக எழுதப்பட்ட பரப்பு 1, குளி 09.00 விஸ்தீரணமுள்ள வீட்டுடன் கூடிய காணியில் அரைவாசி (¾ பரப்பு) விற்பனை செய்யப்படவுள்ளது.

* இல.65, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள பரப்பு 1, குளி 09.00 விஸ்தீரணமுள்ள வீட்டுடன் கூடிய காணியில் அரைவாசி (¾ பரப்பு) விற்பனைக்குண்டு.
* கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் தமது **முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கேள்வித்தொகை** என்பனவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு தமது கையொப்பத்துடன், இடது பக்க மேல் மூலையில் "**காணி கொள்வனவுக்கான கேள்வி**" எனக் குறிப்பிட்டு மூடிய கடிதவுறையில் தலைவர்/பொதுமுகாமையாளர், யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், இல. 127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 29.12.2012 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
* காணி கட்டடத்தை பார்வையிட விரும்புவோர் சங்கத் தொலைபேசி இலக்கத்துடன் (0212222587) அலுவலக நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.
* கிடைக்கப் பெற்றமூடிய கேள்விப்பத்திரங்கள் இயக்குநர் சபைக் கூட்டத்தில் திறக்கப்பட்டு, விலை மதிப்பீட்டுக்கமைய ஆராய்ந்து காணி விற்பனை தொடர்பாக இறுதித் தீர்மானம் இயக்குநர் சபையால் மேற்கொள்ளப்படும்.

**சங்கத்தின் இயக்குநர் சபைத் தீர்மானத்திற்கமைவாக**

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் ப. நோ.கூ.சங்கம்.
(ச/2170) (6.11)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் தெய்வேந்திரம் (தேவன்)



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.17, சிவன் புதுவீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தெய்வேந்திரம் நேற்று (13.12.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (J.P) - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற துரைமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கோகிலகுமாரியின் (பூசணி) அன்புக் கணவரும், ஸ்ரீ தனபதியின்(ஸ்ரீ) அன்புத் தந்தையும், பூர்விகாவின் (கனி) அன்பு மாமனாரும், ஷைதன்யாவின் அன்புப் பேரனும், பாலசுப்பிரமணியம், இராசேந்திரன், பாலேந்திரன்(லண்டன்), தவமலர், இரஞ்சிதமலர், குலேந்திரன் (ஜேர்மனி), சிவனேந் திரன், முருகேந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதர னும், காலஞ்சென்ற யோகராசா மற்றும் தேவராசா(சின்னவன்- லண்டன்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.12.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.17, சிவன் புதுவீதி,
நல்லூர். (26780)(5 6 7)

தெ.ஸ்ரீதனபதி(மகன்)
ஆறுமுகம்(J.P) குடும்பத்தினர்.

# பாதீனியத்தை அழிக்கும் முயற்சி முழுவீச்சில்

நெளுக்குளம், டிசெ.14

வவுனியாவில் காணப்படும் பாதீனியச் செடிகளை அழிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

வவுனியா பிரதேச செயலகம், வவுனியா நகர சபை, வவுனியா சுகாதாரத் திணைக்களம் ஆகியன கூட்டாக இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

பாதீனியச் செடியால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. மேலும் சிலர் அதன் இலைகளைச் போதையேற்படும் பொருட்டுப் பயன்படுத்துவதாகவும் தெரிய வருகின்றது.

இதனால் வீடுகள், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மைதானம், வயல்வெளிகள் தோட்டங்கள் மற்றும் பொது இடங்களில் காணப்படும் இந்தச் செடிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

பாதீனியச் செடிகள் எங்கு காணப்பட்டாலும் அந்த இடத்துக்கு உரிமையானவர்களிடம் தண்டம் அறவிடும் பொருட்டு அவர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகர சபையினர் அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர். தற்போது பெய்து வரும் மழை காரணமாக இந்தச் செடியின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் இதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. (க-402)

# பெற்றோரை இழந்த மாணவருக்கு நிதியுதவி

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தாய், தந்தை இருவரையும் இழந்த மாணவர்களுக்கு சிவன் அருள் இல்லத்தால் வழங்கப்பட்ட நிதி கிளிநொச்சி எடிசன் கல்லூரி மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த மாசி மாதத்திலிருந்து கிளிநொச்சியிலுள்ள தாய், தந்தையை இழந்த மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு மாசி மாதம் முதல் மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வீதம் பணம் வழங்கப்பட்டு வந்தது. இந்த நடவடிக்கைகடந்த மாதம்தொடக்கம் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு அந்தப் பகுதி மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வீதம் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரைக்கும் சுமார் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த நிதியுதவியைப் பெற்றுள்ளனர். இதுவரை நிதியுதவி கிடைக்காதவர்கள் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு முன்பாகவுள்ள எடிசன் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறும்- பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களை பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்தும் பட்சத்தில் அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-422)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு விற்பனைக்கு யாழ்ப்பாணம்

154, நாவலர்வீதி ,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 1½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
3படுக்கையறைகள், 2 விசாலமான வரவேற்பு மண்டபம், வாகனத் தரிப்பிடம் போன்ற சகல வசதிகளையும் கொண்டது.
தொ.பே 0773602815, 0777487820
(தரகர் தேவையில்லை)

## தவறி விட்டது

முருகையா கஜேஸ்வரன் என்பவருடைய N 1041593 இலக்கமுடைய கடவுச்சீட்டுடன் முக்கிய ஆவணங் களும் 11.12.2012 அன்று யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவிற்கும் இடையில்தவறவிடப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P 0772263589,0779984254

## காணி குத்தகைக்கு

நெல்லியடிச் சந்திக்கு அருகில் வங்கி அலுவலகங்களுக்கு உகந்த கட்டடம் அமைக்கக் கூடிய காணித்துண்டு குத்தகையாக வழங்கப்பட உள்ளது. தேவைக்கு தகுந்த மாதிரி கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படும்.
தொ.பே: 077777 8587
(சி/25563)(5.6.4)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண நிகழ்வும்

மலர்வு
03
-
12
-
1943



உதிர்வு
15
-
11
-
2012

## அமரர் திருவோணம் சிவலிங்கம்(J.P)

(மல்லிகா லொறி உரிமையாளர்)

கடந்த 15.11.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் திருவோணம் சிவலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை(15.12.2012) சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

'தேவி பவனம்' வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.
தொ.பே.: 021 321 8677
(25552)(5.6.7)

குடும்பத்தினர்.

# நீங்காத நினைவலையில் இரண்டாம் ஆண்டு

அன்னையின் மடியில்
26.05.1990



இறைவன் அடியில்
14.12.2010

## அமரர் ஜோசேப் யூட் பில்ஜே(வசீர்)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்தில் என்னை மறவாதீர்கள்"



இரண்டு ஆண்டுகள் கழிந்ததடா
இறைவன் அடியில் நீ சேர்ந்து
இகமதை விட்டு நீ காற்றாய் சென்றாய்
இதயங்களில் ஆறாத தீயை வைத்தாய்
இரத்த ஆறாய் கண்களில் நீர் வரச்செய்தாய்

வாழ்வின் வசந்தம் கொண்டு
வாழ்வாய் நீ பல்லாண்டு என்று
வரையறையற்ற நம்பிக்கையுடன் நாமிருக்க-அது
அவநம்பிக்கையாகிப் போனதடா.

உனக்கான உருவம் தந்தவர்கள் உருகுகின்றார்கள்
உனது உருவினை ஒருமுறை பார்ப்பதற்கு
உறவுகள் பறிகொடுத்து பதறுகிறார்கள்
உன் அழகிய வதனம் காண்பதற்கு.

மறக்கத்தான் முடியுமோ உன்னை
மறந்துதான் விடுவோமோ நாங்கள் -எம்
மனத்துயர் தீர்க்க- நீ
விரைந்து வாராயோ!

உனது ஆன்மா இறைவனில் அமைதியுற பிரார்த்தித்து நிற்கின்றோம்

இளவாலை.
(26773)(5.6.7)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தசிவம்

இடைப்பிட்டி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தசிவம் நேற்று (13.12.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் இளைய புதல்வரும், காலஞ்சென்ற விநாயகசிவம்பிள்ளை, மற்றும் வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, தேவராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2012) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இடைப்பிட்டி, காரைநகர். (26785)(9.14)
வள்ளிநாயகி (தங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர்
## கந்தையா இராஜேந்திரன்
## (வைரமுத்து மாமா)

மண்மகிழ
20.07.1929
கண் நெகிழ
22.11.2006

**திதி:-14.12.2012**

*நேசத்துடன் எமை வார்த்து*
*நேர்வழியில் வாழ வைத்து*
*ஆசைக் கனவுகளை*
*அவனியிலே நிறைவேற்றிய*
*எங்கள் அன்புத் தெய்வமே!*
*இப்பாரினில் நாம் வாழும்வரை*
*எம் இதயத்தில் இருத்தி*
*எந்நாளும் பூஜிப்போம்*

**இன்று (14.12.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.**

## குடும்பத்தினர்.

**830, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/2166 )(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை புகலிடக்கோரிக்கையாளர் ஆஸியிலிருந்து நாடு திரும்ப விண்ணப்பம்

இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் பலர் தங்களை கொழும்புக்குத் திருப்பி அனுப்புமாறு ஆஸ்திரேலியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நவூறுவிலுள்ள பரி சீலனை நிலையத்தில் ஆண்கள் ஐவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது புகலிடக் கோரிக்கைகளை கைவிட முடிவு செய்துள்ளனர்.

**நவூறுவிலுள்ள பரி சீலனை நிலையத்தில் ஆண்கள் ஐவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர் கள் தங்களது புகலிடக் கோரிக்கைகளை கைவிட முடிவு செய்துள்ளனர்.**

மற்றுமொருவர் மேற்கு ஆஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களை தமது நாட்டுக்கு திருப்பியனுப்பி வைக்கும் நடைமுறையானது மனிதக் கடத்தல்களை குறைவடையச் செய்யுமென ஆஸ்திரேலிய வெளி விவகார அமைச்சர் பொப் கார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையைச் சேர்ந்த சுமார் 750 புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களை இலங்கைக்குத் திருப்பியனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். அல்லது அவ்வாறு கேட்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசுடன் எங்களுக்குள்ள உறவு குறித்து நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

பொருளாதார நோக்கத்தில் புகலிடம் கோரி வருபவர்களை திருப்பி அனுப்புவதற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்பையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்-என்றார்.

இதற்கிடையில் கொழும்புக்கான பயணத்தை இன்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளும் அவர் மனிதக் கடத்தலை கட்டுப்படுத்தல், சுற்றுலாத்துறை மற்றும் வர்த்தக உறவு ஆகியன தொடர்பில் கலந்துரையாடவுள்ளார். (வ)

## சிவத்தொண்டன் அணி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.14

பாடசாலை தோறும் சிவத்தொண்டன் அணியினரை உருவாக்கி, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி இளைய சமூகத்தை ஆன்மிகத் தொண்டில் வளர்ப்பதை ஊக்குவிக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

இதற்கான அறிமுக நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு நல்லூரில் உள்ள அகில இலங்கை இந்து மாமன்ற யாழ். பிராந்திய அலுவலக மண்டபத்தில் கலாநிதி ஆறு.திரு முருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பாடசாலைகளில் உள்ள சிவத்தொண்டன் அணி பொறுப்பாசிரியர்கள், அணியைச் சேர்ந்த மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (3)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.14

மாகாண கனிஷ்ட ஊழியர்களை, மாகாண முகாமைத்துவ உதவியாளர் பதவியில் நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான ஒருநாள் வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இல.40, பழம் வீதி கந்தர்மடத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான இந்த ஒருநாள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாங்குளம் சிறுவர் நன்னடத்தை அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இவர்களுக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (3)

## காணிப்பங்கீடு 25 குடும்பங்கள் முதற்கட்டம் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.14

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அராலி ஊரத்தியில் குடியிருக்கும் மக்களுக்கான காணிப் பங்கீடு குறித்து முதற்கட்ட பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர், கிராம அலுவலர், பிரதேச சபை உறுப்பினர், வருமான வரி பரிசோதகர் உள்ளிட்ட 10 பேர் கொண்ட குழு கடந்த திங்கட்கிழமை இது குறித்து ஆராய்ந்தது. முதற்கட்டத்தில் 25 குடும்பங்கள் காணிப்பகிர்வுக்கு தெரிவாகியுள்ளன. (3-50)

## மாணவர் மதிப்பளிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.14

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி மதிப்பளித்து பரிசில்களை வழங்கியுள்ளது.

இந்தச் சங்கத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நாற்பது மாணவர்கள் வரையில் இவ்வாறு பாராட்டி மதிப்பளிக்கப்பட்டனர்.

சங்கத்தின் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலி.தென் மேற்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். (3-17)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரிப் பிராந்திய நிலையங்களில் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற 2011- 2013 கல்வியாண்டுக்கான கல்விமாணி இரண்டாம் வருட விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்த விரிவுரைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (3)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ.14

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இணைப்பு நிலையத்தில் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற கல்விமாணிப் பயிற்சி நெறியின் விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விரிவுரைகள் ஆரம்பமாகும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (3)

## நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், டிசெ.14

திருவாவடுதுறை ஆதீனத்தின் 23 ஆவது குருமகா சந்நிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் சிவபரிபூரணம் அடைந்தமையை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை பிரார்த்தனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு சைவ பரிபாலன சபைத் தலைவர் முத்துக் குமாரசாமி திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகளும், தேவார பாராயணமும், பிரார்த்தனை உரைகளும் நடைபெறும்.

## ஐஸ் தொழிற்சாலை குருநகரில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்.குருநகர்ப் பகுதியில் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு லங்கா நோர்த் ஈஸ்டர்ன் ஐஸ் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மஹிந்த சிந்தனையின் கீழ் வடக்கின் வசந்தம் திட்டத்தில் கடற்றொழில் நீரியல் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ண தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பிரதி அமைச்சர் சுதந்த புஞ்சிநிலமே, பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டு லங்கா நோர்த் ஈஸ்டர்ன் ஐஸ் தயாரிப்பகத்தைத் திறந்து வைக்கவுள்ளனர். (ம-7-13)

## நெல் வயல்களுக்கு நீர் இறைக்கும் விவசாயிகள்

நவாலி, டிசெ.14

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதி நெல் வயல்களுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீர்ப் பாய்ச்சும் வேலைகள் நடைபெறுகின்றன.


மழை இன்மை காரணமாக இங்குள்ள நெல்வயல்களில் முளைத்துள்ள நெற்பயிர்கள் மஞ்சள் அடித்து காணப்படுகின்றன. இதனால் விவசாயிகள் குளங்களிலிருந்தும் கிணறுகளில் இருந்தும் இரவு பகலாக நீர் பாய்ச்சும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (3-100)

## முகாமைத்துவப் போட்டியில் வெற்றி பெற்றோர்

நவாலி, டிசெ.14

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவை உத்தியோகத் தர்களிடையே நடத்தப்பட்ட அலுவலக முகாமைத்துவப் போட்டியில் மூன்று கிராம சேவை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

முதலாமிடத்தை ஜே/150 மாதகல் கிழக்கு கிராம சேவையாளர் பி.ஜெபரத்தின மும், இரண்டாமிடத்தை ஜே/135 நவாலி கிழக்கு கிராம சேவையாளர் நி.நித்தியா னந்தனும், மூன்றாமிடத்தை ஜே/133 ஆனைக் கோட்டை அ.நிசாந்தனும் பெற்றுக் கொண்டனர். (3-100)




சுழிபுரம், டிசெ.14

பொன்னாலை ஸ்ரீ வரதர்ராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத ஏகாதசித் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் 24 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரையில் நடைபெறவுள்ளது.

26 ஆம் திகதி புதன் கிழமை சங்காபிஷேகம் காலை முதல் ஆரம்பமாகி நடைபெறும். (3-28)

### மாதகல், ஆனைக்கோட்டைப் பகுதிகளில்

## மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்கு பொருள்கள் உலருணவு



நவாலி, டிசெ.14

அண்மையில் பெய்த பெருமழையினால் பாதிக்கப்பட்ட மாதகல், ஆனைக்கோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு கியூமெடிக்கா நிறுவனத்தினால் வீடு கட்டுவதற்கான உபகரணப் பொருள்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளீதரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கியூமெடிக்கா நிறுவனத்தின் ஜேர்மனியிலிருந்து வருகை தந்த உயர் அதிகாரியினால் பிரதேச செயலகத்தில் வைத்து இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மாதகல் கிழக்கைச் சேர்ந்த இருபது பேருக்கு வீட்டுத் திட்டத்துக்கான இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தீராந்தி, தகரங்கள் மற்றும் உபகரணங்களும், அரிசி, சீனி, பால்மா, தீப்பெட்டி போன்ற பல்வேறு பொருள்களும் நுளம்பு வலைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

இதுபோன்று உலர் உணவுப் பொருள்களும் நுளம்பு வலைகளும் ஆனைக் கோட்டை, காக்கைதீவு பகுதி மக்களுக்கும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (3-100)

## அன்பின் வலிமை

சண்டைக்கும் சச்சரவுக்கும் இரண்டு பேர் தேவைப்படுகின்றனர். அதேபோல, சமாதானம் செய்து கொண்டு ஒத்துப் போகவும் இருவர் தேவை. அன்பெனும் கூடைத் தூண்டிவிட்டாலொழிய இது சாத்தியமில்லை. உங்கள் உள்ளம் முழுவதும் அன்பு வெள்ளம் பாய்ந்து நிறையட்டும். உங்களுடன் சண்டை போட்டவரின் கண்களை உற்றுப் பாருங்கள். அங்கே உங்களுடைய அன்புமயமான பிம்பத்தைக் கண்டு தழுவிக் கொள்ளுங்கள்.

அந்தநேரத்தில் நீங்கள் பேசிக்கொள்ளத் தேவையில்லை. உங்கள் இருவருடைய கண்களிலும் நிறைந்து நிற்கும் ஆனந்தக் கண்ணீர் உங்களுடைய சச்சரவுக்கு ஆதாரமான வேற்றுமைகளைக் கழுவி நீக்கிவிடும். அந்த




நேரத்தில் உங்கள் இருவருடைய மனமும் ஒன்றிவிடும். இப்படி ஒவ்வொரு முறையும் அன்பின் மலர்ச்சியை நீங்கள் உண்மையாகவே காண்பீர்கள்.

இதுதான் அன்பின் சக்தி. இதுவே அதன் முழு வலிமையும் கூட. அன்பின் இணைப்பு பலவீனமாகி மெலிந்துவிட்டால் குற்றங்குறைகள் பெருகித் தோன்றுகின்றன. நம்மை அன்பு வெள்ளம் சூழ்ந்து கொண்டு அலைமோதும் போது, அதன் நயத்தை நாம் மீண்டும் கண்டுணரும் வேளையில் குற்றங்குறைகளும் கரைந்து அழிந்து விடுகின்றன. அங்கே அழகின் தரிசனம் கிடைக்கிறது. இதுதான் அன்பு செய்யும் ரசவாதம். இதுவே இது செய்து காட்டும் அதிசயம்.

உள்ளம் முழுவதும் அன்பு மலர்ந்து நிறையும் போது வாழ்க்கையே ஓர் அழகும் ஆனந்தமும் படர்ந்த சமவெளியாகத் தோன்றுகிறது. அங்கே தெய்வ பக்தியும் மானுடக் காதலும் கைகோர்த்து நடனமிடுகின்றன.

நன்றி: ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

# மத்திய மாகாணத்திடம் மண்டியிட்டது வடக்கு

யாழ்ப்பாணம், டிசெ.14

பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்கான 15 வயதுப் பிரிவு மாகாண அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் வட மாகாண அணி 127 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

கண்டி பொலிஸ் பார்க் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வடமாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடியது மத்திய மாகாண அணி.

அந்த அணியின் இலக்குகளை சீரான இடைவெளியில் வடமாகாண பந்து வீச்சாளர்கள் வீழ்த்தினர். எனினும் ஒரு பக்கம் இலக்குகள் சரிந்து கொண்டிருந்தாலும், நிதானமான ஆட்டத்தை மத்திய மாகாண அணி கைவிடவில்லை. இதனால் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை அந்த அணியால் எட்ட முடிந்தது. வட மாகாண அணியின் பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்து, அரைச்சதம் அடித்தார் மத்திய மாகாண அணியின் நம்பிக்கை நட்சத்திரமான சண்முகநாதன். அவரின் அரைச்சதத்தின் உதவியுடன் மத்திய மாகாண அணி 43:2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சண்முகநாதன் 79 ஓட்டங்களையும், மலித் பிரேமதிலக 43 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்று, சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற உதவினர்.

பந்து வீச்சில் வட மாகாண அணி சார்பில் பானுகோபன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக்கொடுத்து 2 இலக்குகளையும், விதுஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 44 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், அலன்ராஜ் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 40 ஓட்டங்களைக்கொடுத்து 2 இலக்குகளையும்,அகிபன் 9 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

262 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியது வடமாகாண அணி. ஆயினும் மத்திய மாகாண அணியின் துல்லியமான பந்துவீச்சால் பலத்த இழப்பினை வெற்றியை நோக்கிய நகர்வின் போது வடமாகாண அணி சந்திக்க வேண்டியிருந்தது. துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்து நின்று ஆடத் தவறியமையினால் ஓட்டங்களையும் வடமாகாண அணியால் திட்டமிட்டபடி பெற முடியவில்லை. இதனால் 38.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்த வடமாகாண அணி 134 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதன் மூலம் 127 ஓட்டங்களால் வடமாகண அணியை வீழ்த்தியது

இதில் அலன்ராஜ் 27 ஓட்டங்களையும், விதுஷன் 19 ஓட்டங்களையும், துவாரகன் 16 ஓட்டங்களையும் , நிலோசன் 15 ஓட்டங்களையும், கோபிதரன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மத்திய மாகாண அணி சார்பில் எல்லே வடுகொட 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், சிலவதும்பவே 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினர்.

(ந-23)

> துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்து நின்று ஆடத் தவறியமையினால் ஓட்டங்களையும் வடமாகாண அணியால் திட்டமிட்டபடி பெறமுடியவில்லை. இதனால் 38.4 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்த வடமாகாண அணி 134 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.14

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் கழத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணி**

அம்மன் விளையாட்டுக் கழகம் எதிர் இளம் தென்றல் விளையாட்டுக் கழகம்

★ ★ ★

பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்காக மாகாணங்களுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் பொலிஸ்பார்க் மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

வடமாகாண அணி எதிர் தென் மாகாண அணி

(ந-23)

## ஜனாதிபதி தங்கக் கிண்ண மாவட்ட கரப்பந்து போட்டி



யாழ்ப்பாணம், டிசெ 14

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக முல்லைத்தீவு மாட்ட ரீதியில் நடத்தப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை மாங்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தனுராஜ் தெரிவித்தார்.

★ ★ ★

ஜனாதிபதி தங்க கிண்ணத்துக்காக கிளிநொச்சி மாட்ட ரீதியிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அம்பாள் புலம் கரப்பந்தாட்ட மைதானத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் சதீஸ் குமார் தெரிவித்தார்.

(ந-23)

## புத்தூர் கலைமதி, மட்டுவில் கலைமதி கரப்பந்தாட்ட இறுதிக்கு முன்னேறியது

யாழ்ப்பாணம்,டிசெ.14

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டம், தென்மராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மின் ஒளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இந்தத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டிப் பிரிவின் இடையிலான அரையிறுதியாட்டமொன்றில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும், தென்மராட்சி ரீதியிலான அணிகளுக்கான அரையிறுதியாட்டமொன்றில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் கையே ஆரம்பத்தில் இருந்து ஓங்கியிருந்தது. எதிர்பார்த்த அளவுக்கு அச்சுவேலி ஸ்ரார் அணி வீரர்கள் பிரகாசிக்கத் தவறினர். இதனால் புத்தூர் கலைமதி அணி புள்ளிகளை இலகுவாக குவித்து, 25:9 , 25:23, 25:16 என்ற அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் தன்வசமாக்கியது. இதனால் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டு இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது புத்தூர் கலைமதி.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்றதென்மராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 25:23, 25:23:25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ந-23)

## வலைப்பந்துப் பயிற்சி முகாம்



முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஜி.ஐ.சற். நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் 'விளையாட்டின் ஊடாக சமூக ஒருமைப்பாடு' என்னும் தொனிப்பொருளில் வலைபந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்துவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை கரைத்துறை பிரதேச பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள இந்தப் பயிற்சி முகாம் சனி, ஞாயிறு ஆகிய தினங்களும் நடைபெறவுள்ளது.

இதில் நீராவிப்பிட்டி, முள்ளியவளை மேற்கு, மணற்குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

(ந-23)

## ஈஸ்வரன்,லயன்ஸ் அணிகள் எதிரணிகளைப் பந்தாடின

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் வீரர்களான சாந்தன்,யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காவும் நடத்தப்பட்டுவரும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரில் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய தினங்களில் மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் சில வருமாறு-

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

மைதானம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் பரபரப்புடன் நடைபெற்றது இந்தப் போட்டி. இரு அணிகளும் வெற்றியைத் தம் வசமாக்குவதற்காகக் கடுமையாகப் போராடின. இரு அணிகளினதும் முன்கள, பின்கள வீரர்கள் தமது பணிகளை சிறப்பாகச் செய்தனர். போட்டியின் ஆரம்பத்தில் காட்டிய வேகத்தை நேரம் செல்லச் செல்ல உதயதாரகை அணி கைவிட்டது.

உதயதாரகை அணி வீரர்களிடம் ஏற்பட்ட சோர்வை சரியாக இனங்கண்டு கொண்ட லயன்ஸ் வீரர்கள் அடுத்தடுத்து கோல்களை அடித்து தமது அணியை முன்னிலை பெறவைத்தனர். ஆட்ட நேர நிறைவில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது

புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஏ.பி.சி. விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஆரம்பத்தில் இருந்தே களத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது ஈஸ்வரன் அணி. அந்த அணிக்கு சவால் விடும் வகையில் ஏ.பி.சி. அணியின் வீரர்கள் ஆடிய போதும், அந்த அணியால் ஈஸ்வரன் அணியின் வேகத்துக்கு ஏற்ப கோல்களைப் பெறமுடியவில்லை. ஆனால் ஈஸ்வரன் அணி வீரர்கள் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் கோல்களாக்கினர்.

எனவே ஆட்ட நேர நிறைவில் கோல் மழை பொழிந்தஈஸ்வரன் விளையாட்டுக்கழகஅணி 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (ந-23)



ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான வ மாகாண அ[illegible] போட்டி பெண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொ[illegible] வீராங்கனைகள் வ மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை மற்றும் விருந்தினர்களுடன். (ந-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து நிதான ஆட்டம்



இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. முதல்நாள் முடிவில் இங்கிலாந்து அணி நிதானத்துடன் கூடிய போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நாக்புரில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாம் நாள் ஆட்ட முடிவில் 5 இலக்குகளை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. துடுப்பெடுத்தாடுவதற்குச் சிரமமான மெதுவான ஆடுகளமான இவ்வாடுகளத்தில் இங்கிலாந்து அணி முதலிரண்டு இலக்குகளையும் விரைவாக இழந்து 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகள் இழந்து தடுமாறியது. மூன்றாவது இலக்குக்காக 86 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டு ஒருகட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால், 6 ஆவது இலக்குக்காகப் பிரிக்கப்படாத 60 ஓட்டங்கள் பகிரப்பட்டு இங்கிலாந்து அணி ஓரளவு போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக கெவின் பீற்றர்சன் 73 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 44 ஓட்டங்களையும், மற் பிரயர் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக இஷாந்த் சர்மா 2 இலக்குகளையும், ரவீந்திர ஜடேஜா அறிமுக ஆட்டத்திலேயே 2 இலக்குகளையும், பியுஸ் சாவ்லா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (5)

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக கெவின் பீற்றர்சன் 73 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 44 ஓட்டங்களையும், மற் பிரயர் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.



# மலிங்க வேட்டை

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் பிக்பாஷ் லீக் போட்டியில் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க அதிரடியான பந்துவீச்சுப் பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளார். மெல்போர்ண் ஸ்டார்ஸ் அணி சார்பாகப் போட்டியில் பங்குபற்றிவரும் அவர் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்திலேயே இந்த அதிரடிப் பந்துவீச்சுப் பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற வெற்றிபெற்ற மெல்போர்ஸ் ஈடுபடத்



இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் ஸ்டார்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி லசித் மலிங்கவின் அதிரடியான பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாது 15.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த பேர்த் அணி, இறுதி 6 இலக்குகளையும் 19 ஓட்டங்களுக்கு இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஹில்ட்டன் கார்ட்விரைட் 17 ஓட்டங்களையும், அடம் வோகஸ் 14 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் இரட்டை ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் 'ரி-20' வரலாற்றில் இரண்டாவது மிகச்சிறப்பான பந்துவீச்சுப் பெறுபேற்றை வெளிப்படுத்திய லசித் மலிங்க 4 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றம் அடங்கலாக 7 ஓட்டங்களைக் கொடுத்து 6இலக்குகளைக் கைப்பற்றினார்.

இது இங்கிலாந்தின் சமர்செட் அணிக்காக அருள் சுப்பையா 3.4 பந்துப் பரிமாற்றங்களில் 5 ஓட்டங்களுக்குக் கைப்பற்றிய 6 இலக்குகளுக்கு அடுத்ததாகப் பெறப்பட்ட மிகச்சிறந்த பந்துவீச்சுப் பெறுபேறாகும்.

70 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மெல்போர்ண் ஸ்டார்ஸ் அணி 2.1 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு இழப்பின்றி 29 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் போது மழை குறுக்கிட்டது. அதன் பின்னர் ஆட்டம் 5பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டமாக ஆரம்பிக்கும்போது மெல்போர்ண் ஸ்டார்ஸ் அணி 5 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் பெற்றிருக்க வேண்டிய 6 ஓட்டங்களை அவ்வணி ஏற்கனவே பெற்றிருந்தால் ஒரு பந்து மாத்திரம் வீசியதுடன் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் மெல்போர்ண் ஸ்டார்ஸ் அணி சார்பாக லூக் ரைட் 11 பந்துகளில் 23 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்ட நாயகனாக மெல்போர்ண் ஸ்டார்ஸ் அணியின் லசித் மலிங்க தெரிவானார்.

(5)

# கம்பீர் டோனி முறுகல்

இந்திய அணியின் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனிக்கும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கம்பீருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக தெரிகிறது.

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி அடுத்தடுத்த தோல்விகளால் துவண்டு கிடக்கிறது.

இதற்கிடையில் கம்பீருக்கும், டோனிக்கும் மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. கம்பீரின் அணுகுமுறை குறித்து இந்தியக் கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ.) டோனி எழுத்து மூலம் முறைப்பாடு அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.


கடிதத்தில் டோனி கூறியுள்ளதாவது, அணியில் தனது இடத்தை தக்கவைத்துக் கொள்ள தேவையான வேலைகளை மட்டும் கம்பீர் செய்கிறார். அணியின் வெற்றிக்கு உதவ மறுக்கிறார். சுயநலத்துடன் செயல்படும் இவர் அணி மற்றும் அணி சார்ந்த பிரச்னைகளில் இருந்து ஒதுங்கியே உள்ளார். இதனால் இந்திய அணிக்குத் தான் பாதிப்பு ஏற்படுகிறது.

கொல்கத்தா டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில் இது நன்கு தெரிந்தது. பின்வரிசை வீரர்களுடன் இணைந்து ஆட்டமிழக்காமல் இருந்து அணியை காப்பதை விட தனக்காக விரைவாக ஓட்டங்கள் சேர்க்க முயற்சித்து ஆட்டமிழந்தார்.

சுவான், பனேசர் வீசிய பந்துப் பரிமாற்றங்களில், அனுபவம் வாய்ந்த கம்பீர் முதல் அல்லது இரண்டாவது பந்தில் ஒரு ஓட்டங்கள் எடுத்துவிட்டு மறுபக்கம் சென்று விட்டார். இதற்கு என்ன அவசியம் வந்தது.

இதைப்பார்த்த போது அணிக்காக அவர் விளையாடவில்லை எனத் தெரிந்தது. சிறப்பான துடுப்பாட்ட வீரராக இல்லாத போதும், அஷ்வின் 91 ஓட்டங்கள் எடுத்தார்.

அஷ்வினால் ஓட்டங்கள் சேர்க்க முடியும் போது கம்பீரால் மட்டும் ஏன் முடியவில்லை என்றும் கொல்கத்தா டெஸ்டில் ஷேவாக், புஜாராவின் 'ரன் அவுட்டுக்கு' கம்பீர் காரணமாக இருந்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹேல விலகுவது உறுதி



ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 டெஸ்ட் போட்டி, 5 ஒருநாள் சர்வதேசப் போட்டியே இலங்கை அணியின் தலைவராக மஹேல ஜெயவர்தனவின் இறுதிப் போட்டியாக அமையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் திலகரட்ண டில்ஷான் அந்தப் பதவியிலிருந்து விலகியதையடுத்து மீண்டும் தலைவராகப் பதவியேற்ற மஹேல ஜெயவர்தன, ஒரு வருடகாலத்திற்கு மாத்திரமே அந்தப் பதவியில் இருப்பேன் எனவும், அதன் பின்னர் தனது எதிர்காலம் தொடபில் ஆராயவுள்ளேன் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆஸ்திரேலியத் தொடரின் பின்னர் அணித்தலைமையிலிருந்து விலகுவதாக மஹேல ஜெயவர்தன உறுதிப்படுத்தியுள்ளார். ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மஹேல ஜெயவர்தன இதை உறுதிப்படுத்தினார்.

12 மாதகாலத்திற்கு மாத்திரமே தான் அணித்தலைமைப் பொறுப்பை ஏற்றதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அந்தக் காலம் இந்தத் தொடருடன் நிறைவடையவுள்ளதாகவும், இந்தத் தொடரே அணித்தலைவராகத் தான் ஆடும் இறுதித் தொடராக அமையும் எனத் தெரிவித்த அவர், இந்தத் தொடரின் பின்ன அணித்தலைமைப் பதவியில் தொடர விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடர் நிறைவடையும்வரை இதை அறிவிப்பதற்காகக் காத்திருக்க எண்ணியிருந்ததாகவும், ஆனால் தற்போதே அதை அறிவிப்பதாக முடிவு செய்ததாகத் தெரிவித்த அவர், தேர்வாளர்களுடனும் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

மஹேல ஜெயவர்தன பதவி விலகியதன் பின்னர் புதிய தலைவராக அன்ஜலோ மத்தியுஸ் நியமிக்கப்படுவார் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

(5)


நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்

## மாபெரும் ஏலவிற்பனை

நீங்கள் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு நீங்களே விலையைத் தீர்மானிக்கும் ஓர் அரிய வாய்ப்பு.

சனி மற்றும் ஞாயிறு தினங்களில்

* பார்வையிடும் நேரம் காலை 09.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை
* ஏலவிற்பனை நேரம் பி.ப. 3.00 மணிதொடக்கம் 6.00 மணிவரை

198, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
தொடர்பு- 0775552508, 0778314201



## ஆஸ்திரேலியா நாட்டவர் நடத்தும் இலவச ஆங்கிலக் கல்விக் கருத்தரங்கு



ஆங்கிலம் பேசுவது, ஆங்கில உரைநடை, பத்திரிகைகள், இணையத்தளங்கள், IELTS பற்றிய அறிமுகம்.



வளவாளர்:-
பௌத்தமதகுரு அதிவண மைக்கேல்
(Brisbare, Queensland, Australia)

இடம்: திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் தலைமைக்காரியாலய கேட்போர் கூடம்
காலம்:- 16.12.2012 மு.ப. 10.00 மணி
தொலைபேசி மூலம் முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016

(28711)(3.14)



இலங்கை வாழ் மக்களே!
தென்னிந்திய திரைப்படத் துறையில் நீங்களும் பங்காற்ற அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
திரைப்பட நடிகர், நடிகைகளுக்கான தேர்வு

## யாழ். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க

"இந்தியன் AVR மூவியின் தயாரிப்பு" உதவியுடன் தயாரிக்கப்படும் புதிய திரைப்படங்களுக்கான புதுமுக நடிகர், நடிகைகளுக்கான நேர்முகத் தேர்வு நாளை (15.12.2012) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சங்கிலியன் மன்றம், நல்லூர் பருத்தித்துறை வீதி (சட்டநாதர் கோயில் அருகில்) இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் மேற்படி திகதியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 460 4576
"வரத்"

(24358)(6.7.4)


## மரண அறிவித்தல்

### செல்லையா அமிர்தலிங்கம் (சின்னத்தேவன்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அமிர்தலிங்கம் 11.12.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகேஸ்வரி தம்பதியரின் புதல்வரும், கலாதேவியின் அன்புக்கணவரும் ஆதவன், நரேஜிகா, ஆர்த்திகா, மிதுளா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இல.10/3, நந்தாவில் வீதி,
தாவடி, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(24363)(7.6)


இன்றிலிருந்து (14.12.2012)

## ஹரன் ஜுவல்லர்ஸ்

நகை - வைர வியாபாரிகள்

இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480


## கண்ணீர் அஞ்சலி



### தம்பையா சண்முகநாதன்

(துணுக்காய் பிரதேச மூத்த கிராம அலுவலர்)

எம்முடன் பணிபுரிந்து இளைப்பாற முன் எமை விட்டுப் பிரிந்த அமரர் தம்பையா சண்முகநாதன் அவர்களின் துயர் பகிர்வில் நாமும் பங்கு கொள்கிறோம்.

பிரதேச செயலாளர், அனைத்து உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம் துணுக்காய்

(சி/2179)(3.14)


## சுந்தர்சன் நிறுவனத்தின்

## மாபெரும் மலிவு விற்பனை

அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்



- Double/Single Door Fridge
- Washing Machine
- LCD, LED, CRT TVs
- Water Filter
- Electric Kettle
- Toasters
- Rice Cooker with Steamer
- Iron Box
- Table Fan
- Pedestal Fan
- Rechargeable Torch
- Blenders
- Electric Oven
- Gas Cooker
- Induction Cooker
- Non Stick Pans
- Home Theater System
- Bulbs
- Chandeliers
- Wall Lamps
- Emersion Heaters
- Table Lamps
- Egg Beaters
- Mobile Phones
- Wusley, Pearl Rich CFL Bulbs
- DVD Players
- Plastic Buckets & Basins

இத்தினத்தில் கொள்வனவு செய்யும் அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 50 பேருக்கு ரூபா. 175,000 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

15.12.2012 முதல் 22.12.2012 வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.